373

# ஐஸ்ஞுக் பட்டணத்து மாணவன்.

373
4'22

இப்பேருள்ள லுத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

சங். யோ. சாந்தகிரன் ஐயர் அவர்களாலும்,

தமிழ் பண்டிதர் கனம் சவரிமுத்து பிள்ளை அவர்களாலும்

தமிழில் எழுதப்பட்டது.



Q6:4198M
N22
175955

TRANQUEBAR,
CHURCH OF SWEDEN MISSION PRESS.
1922.



# நூன்முகம்

வெகு காலமாக அநேகர் லூத்தர் சாஸ்திரியாருடைய ஜீவிய சரித்திரப் புஸ்தகம் தமிழில் படங்களோடு வெளிப்படவேண்டுமென்று விரும்பினர். கொஞ்சக்காலத்திற்கு முன் சுவீடன் தேசத்து J. ஜான்சன் சாஸ்திரியார் என்ற சிநேகிதர் தாம் எழுதிய லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரப் புத்தகத்திலிருந்த படங்களின் அச்சை (block) நமக்கனுப்பினர். ஆகையால் ஐஸ்ளுக் பட்டணத்து மாணவன் என்ற புத்தகத்தைப் படங்களுடன் இயற்றுவது நமக்கு இலகுவாயிற்று. இதன் வாசகம் சிலசமயங்களில் ஜான்சன் சாஸ்திரியாரின் புஸ்தகத்திலுள்ளபடியேயும், சில சமயங்களில் சொந்தமாயும் எழுதப்பட்டுள்ளது. சங். யோ. சாந்தகிரன் ஐயர் இதைத் தமிழில் மொழிபெயர்க்க, நமது சீர்காழி உயர்தரக் கலாசாலைப் பழைய மாணவரும், தற்காலம் மதுரை மங்களபுரம் என்று பேர் விளங்கிய கெப்ரான் ஹால் உயர்தரப்பெண்பாடசாலைத் தலைமைத் தமிழ்பண்டிதருமாகிய கனம் D. சவரிமுத்து என்பவர் இதை நேர்த்தியான பாஷையில் எழுதினர்.

இச்சிறு நூலை வாசிப்பவர் சீர்திருத்தலால் சுவேதன் சபைகளுக்குக் கிடைத்த பெரும் பொக்கிஷங்களாகிய சுத்த போதகத்தையும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் விசுவாசத்தால் பலிக்கும் தெய்வ கிருபையையும் அதிகமதிகமாய் மதிக்கவும், அனுபவிக்கவும், பரிசுத்தத் திரியேக பராபரன் தாமே அருள் புரிவாராக. ஆமேன்.



## ஐஸ்னாக் பட்டணத்து மாணவன்.

மேலே காட்டியிருக்கிற படம், ஜர்மானிய தேயத்தின் மத்தியிலிருக்கும், ஐஸ்னாக் பட்டணத்தையும், அதற்குச் சமீபத்திலிருக்கிற குன்றின் சிகரத்தில் அமைக்கப்பெற்றுள்ள, வர்த்புர்க் கோட்டையையும் காட்டுகின்றது. நானூற்றுச்சில்வான வருடங்களுக்கு முன்னர் ஓர் தினத்தில் 14, 15 பிராயமுள்ள சில பாலியர்கள் ஓர் தெருவிலே உலாவினார்கள். அன்னவர் அவ்வூர்க் கல்விச்சாலையில் கலைபயிலும் மாணவர். தெருவின் இருமருங்கிலும், மிகவும் அழகான கட்டடங்கள் இருந்தன. அங்கே வாசம் செய்கிற குடியானவர்கள் பெரிய தனவந்தர்கள் என்று அக்கட்டடங்களின் தோற்றத்தாலேயே அறியலாகும்.

மாணவர்கள் ஒரு வீட்டின் முன்றிலில் நின்று ஓர் இனிய பாடலைப் பாடத்துவக்குகிறார்கள். அன்னோர் குரல் குயிலோசையையும் பழிக்கத் தக்கதாய் மிக்க இன்பமாய் இருக்கிறது. பாடகர்க்குள் விசேஷமாய் ஓர் மாணவனுடைய இராகம், கேட்போர் மனம் கசிந்துருகத் தக்க பான்மையில் மிகவும் இனிமையாயிருக்கிறது. கல்விச்சாலையில் கற்றிருந்த சில லத்தீன் பாடல்களை இவர்கள் இவ்வாறு பாடுகின்றனர். ஏன் அப்படிப் பாடுகின்றனர்? அன்னவரின் கஷ்டகாலமே இங்ஙனம் பாடுமாறு வற்புறுத்துகின்றது. இவ்விதம் பாடுவதினால், கொஞ்சம் பணமாகிலும், ஆகாரமென்கிலும் கிடைக்கக்கூடுமென்பது அவர்கள் நோக்கம். மாணவராக இன்னமிருந்தபோதிலும், தங்கள் சாப்பாட்டுக்காகத் தாங்களே கஷ்டப்பட்டுச் சம்பாதிக்க வேண்டியதாயிற்று.

இவர்கள் கதி யிவ்வாறிருக்க இன்றைக்கு இவர்கள் மீது இரங்குபவரோ எவருமில்லை. ஓர் சீமான் கதவைத் திறந்து அவர்களை நிந்தித்துத் தூரத்துகிறான். மற்றுமோர் பூமான் அவர்களை அடித்து சீரா

இம்சை செய்யவும் எத்தனிக்கிருன். 'கழுதையறியுமோ கரும்பின் சுவையை' அந்தோ, ஏழை மாணவர், பசியின் கொடுமையால் மெய் சோர்ந்து மகா துக்கமுகத்துடன் அவ்வண்கணுளன் முன்றில் நீங்கி மூன்ருவது ஓர் வீட்டின் முன்னின்று பாடுகிருர்கள். அங்கும் அவர்கள் பிரயாசை வீணுய்ப் போகிறது.

ஆகையால் பிழைப்பின் கஷ்டம் எத்தகையதென்று தங்கள் அனுபவத்தால் இம்மாணவர் எல்லாரும் நன்குணர்கின்றனர். ஆகிலும் அதையதிகமாக உணருகிறவன் யார் என நினைக்கிறீர்கள்? கேட்போர் மனதைக் கவரச்செய்யும் பான்மையில் இனிய குரலோடு பாடின மாணவனே. ஏனெனில் அவன் அதிதூரமான மன்ஸ்பெல்டு ஊரிலிருந்து கல்வியின் பொருட்டு வந்திருக்கிருன். இங்கேயிருக்கிற சில சொந்தக்காரரை நம்பி அவர்கள் ஒத்தாசையினுலாவது படிக்கலாமென்று வந்தும், 'அல்லாத மாந்தர்க் கறம் கூற்றம்' என்றபடி அவர்களும் இவனைப்போல் மிடியாளர்களானபடியால், அதிகவுதவி பெறக் கூடாமலிருக்கிருன். இங்கு படிப்பதற்கு அவனுக்கினி மார்க்கமில்லை. அந்தோ! ஏழை மாணவன் என்ன செய்வான் பாவம்; நாளைக்கு மன்ஸ்பெல்டுக்குத் திரும்பித் தன் தகப்பனைப்போல் சுரங்கவெட்டியாகி அத்தொழில் புரிந்துதான் பிழைக்க வேண்டியதாயிருக்கிறது.

ஆகிலும், 'சிற்றுயிர்க்குற்ற துணை' யாயதும், தான் மிகவும் விரும்புவதுமாகிய கல்வியை நிறுத்தவும், அன்பின் சொரூபமாகிய தனது யோவான் உபாத்தியாயரை விட்டுப் பிரியவும் கூடாத மனோவேதனை, கல்வியில் ஆர்வமுள்ள இவனுக்கு அதிகமாகவிருக்கிறது.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணுயினர்" என்ற நீதி வாக்கியப்படி

அடிக்கடி பசியாயிருந்தாலும், குளிரால் வருந்தினுலும் கல்வி பயில்வதை நிறுத்தக்கூடாதென்று நினைக்கிருன். சந்நியாசம் பூண்டு ஓர் மடத்திலாகிலும் சேரலாம் என்ருல், அதற்கும் அவனுக்கு மனமில்லை. ஏனெனில் அது அவனுடைய சுயாதீன சித்தத்திற்குச் சற்றும் பொருந்தாதிருந்ததன்றித் தன் தகப்பனுருக்கும் அது விருப்பமில்லை. சோம்பல் பணத்தாசை, துர்நடக்கை முதலியவைகளில் மூழ்கியிருக்கிற சந்நியாசிகளின் அந்தஸ்து, அவன் தகப்பனுருக்கு மகா அருவருப்பு. அந்தோ இம்மாணவன், எத்தனை தூரம் யோசித்தாலும், கல்வி நடைபெறுதற்குரிய மார்க்கம் ஒன்றும் தெரிந்திலை; ஆனுல் தான் பசியும் பட்டினியுமாயிருக்கிறதுமட்டும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகிறது.



இவ்வாறு நிகழும் வேளை, தோழரில் ஒருவன் ஓராலோசனை கூறுகின்றான். "அதோ தோன்றுகிற அந்த அழகான வீட்டைப் பாருங்கள். இரக்கமே உருவாக அமைந்த ஓர் மாது சிரோமணி ஆங்கு வசிக்கின்றாள். அங்குபோய்ப் பாடுவோம் வாருங்கள்" என்றான். இவ்வாலோசனைக்கு யாவரும் ஏகோபித்திணங்கி அங்குபோய்ப்பாட ஆரம்பிக்கிறார்கள். பாடல் சத்தம் கேட்கவே, இரக்கமும் மனவுருக்கமும், தெய்வ பக்தியும் நாகரீகமும் வாய்ந்த ஓர் மாது கபாடங் திறந்து வெளியே வருகிறாள். அவள் பலகணி வழியாகப் பையன்களைக் கவனித்து, அப்பத்திற்குப் பதிலாக அவர்கள் பெற்றுக்கொண்ட மனோவேதனைக்குரிய நிந்தனைகளைத் தன் செவியால் கேட்டிருந்தவளானபடியால், பாடகர் பாடி முடித்தபின், அந்த தர்மிஷ்டி மாணவரை நோக்கி மகா உருக்கமும் சிநேகத்தின் சுருக்கும் மேலிட்டு, வாருங்கள் பையன்களே, வாருங்கள் இங்குட்காருங்கள், நான் கொஞ்சம் சாப்பாடு கொடுக்கிறேன் என்று தேன்போன்ற இனிய வார்த்தைகளால் அவர்களை யழைத்து

உட்செல்லுகிறுள். இன்று அவர்களுக்கு வேண்டிய ஆகாரம் கிடைத்திருக்கிறது. வீட்டெஜமானியாகிய இரக்கமுள்ள மாது, இனிமையுடன் பாடுகிற மார்த்தீன் என்னும் மாணவனை அன்புடன் ஆதரிக்கிறதையும், ஏனைய மாணவருக்கு, அவளது வேலைக்காரி, மலர்ந்த முகத்துடன் அப்பம் பரிமாறுகிறதையும் படத்தில் பார்க்கிறோம்.

உர்சுலாக் கொட்டா என்ற நாமதேயம் பூண்டவளும், ஈகைத் தன்மையில் சிறந்தவளுமாகிய இந்தப் பெண்மணி, மாணவர் யாவர்க்கும் அன்னதானம் செய்ததுமன்றி மற்றும் மேலான கொடை ஒன்றளிக்கின்றுள். அஃதென்ன கொடை? ஈயக்குறைவில்லாக் கல்விக் கொடை. யாருக்கு, எல்லா மாணவருக்குமோ? அன்று, நம்முடைய இனிமையான பாடகனுகிய மார்த்தீனுக்கு மட்டும். மார்த்தீனுடைய பாடலின் தீங்குரலே அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவள் வீட்டின் முன்பாகப் பாடுகிற பொழுது தான் உள்ளம் நெக்குருகுகிறுளோ? அன்று, வீணையின் குரலுக்கு ஒத்தான இன்ப ஓசையை ஆலயத்தில் பாடுகிறபொழுதெல்லாம் அநேகந் தடவைகள் கேட்டிருக்கிறுள். அது மாத்திரமன்று, தெய்வபக்தியின் மிகுதியால் ஆனந்த வெள்ளம் பெருக்கெடுத்தோடப் பாடுகிற பரம நாட்டச் சங்கீத சாஸ்திரி, தாவீதரசனின் எழுப்புதலான ஆவியும் உற்சாக சக்தியும் அமைந்து, பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து நெஞ்சிலடங்காது வாய் என்னும் வாயில் வழியாய்க் கனிந்து ஓடிவருகிறதையும் பலகாலும் பார்த்திருக்கிறுள். ஆகையால் இப்பொழுது தன் நாயகனேடாலோசித்து மார்த்தீன் என்ற மாணவன், அவ்வூர்க் கலாசாலையில் படித்துத் தீருமட்டும், தன் வீட்டில் இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறுள். சில நாட்கழித்து மார்த்தீன் தன் புஸ்தகங்களோடு இந்த அழகிய வீட்டிற்கு வந்து, இங்கு வசிக்க ஆரம்பிக்கிறுன். கனவிலும் நினையாதது இந்தப் பெரிய மாறுதல்; கனவோ நனவோ என்பது பையனுக்கே ஐயம். இது முதல் பசியினுலும், குளிரினுலும் வஸ்திரக் குறைவாலும், கஷ்டப்படத் தேவையில்லை. "கற்பகத் தருவைச் சார்ந்த காகமும் அமிர்தம் உண்ணும்" அல்லவா? கர்த்தருடைய ஜெபத்தின் ஏழு மன்றாட்டுகளில் அன்றன்றுள்ள எங்கள் அப்பம் என்ற மன்றாட்டின் வியாக்கியானத்தில் கூறப்பட்டிருக்கிற இச்சீவனுக்குத் தேவையானதெல்லாம், அவனுக்கு அங்கே கிடைக்கிறது. காக்கையைக் கொண்டுணவளித்த கர்த்தனின் வல்லமையை என்னென்றுரைப்பது! நம்முடைய உத்தம மாணவனுகிய மார்த்தீனுக்கு, ஓர் நங்கையைக் கொண்டு இச்சீவனுக்குத் தேவையானதெல்லாம் அளிக்கிறுர். அக்கருணாநிதியின் பெருமிதமென்னே! கருணுகரப்பெருமான் தாயினும் இனியவோர் தாயை, ஐந்தாகமம் எழுதினேனுக்கு அரசகுமாரியை அன்னையாய் அளித்தது போல், இவனுக்களித்திருக்கிறுர். கல்வியென்னும் பயிரைக் கவலையின்றி வளரச் செய்கிறதுபோல் சங்கீத சாஸ்திரம் என்னும் இங்கிர்தப் பயிரும் இதமுடன் வளர்ந்து சொழித்தோங்க நற்காலம் கிட்டியிருக்கின்றது. கருணைக் கடலினின்றும் ஒரு துளியாகிலும்

நம்மாணவனுக்கு அளிக்கப் படாதிருந்தால், எங்ஙனம் இன்னன்னிலமை வந்திருக்கும்.

அன்பு நிறைந்த வீட்டின் பாக்கியத்தைப் பார்க்கிறான். மலரும் தேனும் போலும், ஆவியும் உடலும் போலும், பர்த்தாவும் தேவியும் பிறன்பழிப்பில்லாத இல்லறத் தொழுகி கண்ணிரண்டும் ஒன்றையே காண்கின்ற பான்மையில் இருவர் உள்ளக்கருத்தும் ஒன்றேயாகிக் கருதிய கருமம் தர்மநெறி தவறாது நடத்தி வருகின்றார்கள். சொந்தப் பெற்றோர் அவனை நேசித்து வந்திருந்தாலும், விசேஷமாய் அன்பினால் அல்ல. எல்லாவிதமான பயத்தினாலும், அவனை நடத்திவந்தார்கள்.

அற்பக்குற்றம் புரியினும் இவன் அடிபடுவது நிச்சயம். இங்கேயோ அன்பு நிறைந்த வீடு. என்ன இன்பம்! என்ன பாக்கியம்!! என்ன மனோ உற்சாகமான கல்வி வளர்ச்சி!!! கடவுள் இவனுக்குக் காட்டியிருக்கும் கருணைத்திறத்திற்கு இவனைக் கொண்டவருக்கு என்ன பலனோ! அறிகிலேம்.

'நன்றி மறப்பது நன்றன்று' "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந் நன்றி கொன்றமகற்கு" என்ற நீதி சாஸ்திரங்களை யுணர்ந்திருக்கிற உத்தம மாணவனாகிய மார்த்தீன், தானே நன்றிக்கோர் வித்து என்று யாவரும் கூறும் வண்ணம், தன்னுடைய அன்பார்ந்த தாயாகிய உர்சூலா அம்மாளிடம் மிக்க நன்றி பாராட்டி வருகிறான்.

ஐஸ்நாக்பட்டணத்திற்குச் சமீபத்திலுள்ள குன்றின் மேலிருக்கிற வர்த்புர்க் கோட்டையில், முன்னம் வசித்து வந்த, பரிசுத்த எலிசபெத் என்ற இராணியம்மாள், அடிக்கடி பட்டணத்திற்கிறங்கி, ஏழைகளுக்கும் வியாதியஸ்தருக்கும், உதவி புரிந்துகொண்டேயிருந்தாள். மார்த்தீன், எலிசபெத் இராணியைப்பற்றிய பிரஸ்தாபத்தைக் கேட்கும்போதெல்லாம், தர்மசொரூபியாகிய இராணியை இந்தப் புண்ணிய சீவியாகிய உர்சூலா அம்மாளுக்கு ஒப்பிட்டு ஏழைகளுக் கிரங்கும் கருணைகரியிவளேயென்று தன் இருதயத்தின் ஆழங்களில் குடிகொண்டிருக்கிற நன்றியென்னும் வித்து மூளைத்துக் கிளம்பி, வாயாற வாழ்த்திப் புகழ்ந்து நினைக்கிறான்.

நம்முடைய புத்திசாலி மாணவனாகிய மார்த்தீன், எல்லா ஈவுகளும் பரமண்டலங்களிலிருந்து வருகிறது என்கிற சத்தியத்தை யறிந்திருக்கிறவனானபடியால், பராபரனுக்குத் தன் மனப்பூர்வமான நன்றியைச் செலுத்தி, தனக்கு இந்தப் பேருபகாரத்தைச் செய்யுமாறு உர்சூலா அம்மாளின் உள்ளத்தில் அன்பின் தீபத்தை ஏற்றி, தூண்டாமணிவிளக்காய் எரியச் செய்தவர் அவரேயென மனத்திலோர்ந்து அவரைத் தோத்திரிக்கிறான். உலக ரட்சகனின் கருணைத்திறத்தை நினைந்து நினைந்து உள்ளம் நெக்குருகுகின்றான்.

மார்த்தீன் ஐஸ்னாக் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்ற 4 வருஷங்களில் அடிக்கடி பிரான்கிஸ்கர் மடத்தின் வழியாகப் போவது வழக்கம். எப்போதும் பயத்தோடு மடத்துக் காவல் அறையின் இருப்

புக்கம்பிகளைக் கவனித்தான். அங்கே யோவான் ஹில்டன் என்ற பதிதன் கைதியாக வைக்கப்பட்டிருக்கிறான். அவன் பைத்தியங்கொண்டவோர் சந்நியாசியென்று சொன்னார்கள். எவ்விதமான பைத்தியமும் கொடியபாவங்களும் அவனிடம் கண்டு பிடிக்கப்பட்டது. ஏனென்றால் மடங்களும் சந்நியாசிகளும் தங்களின் பாவங்களினிமித்தம், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள் என்று பிரசங்கித்திருந்தான். இந்தவார்த்தைகளை மறுக்குமாறு மடாதிபதிகள் பலதடவைகளில் அவனைக் கேட்டிருந்த போதிலும் அவன் தன் பைத்தியத்தில் நிலைத்துக்கொண்டதினால், கொடிய காவலில் வைக்கப்பட்டான். சந்நியாசிகளாகிய உங்களை மேற்கொள்ளப் போகிற ஒரு வீரன் வருவான். அவனை மேற்கொள்ள எவராலுமியலாது என்று உறுதியாகச் சொன்னான்.

அந்தவீரன் அவன் காவற்கூடத்திற்குச் சமீபமாக ஆண்டவரின் பாதுகாவலிலே வளர்ந்து வருகிறான் என்கிற விஷயம் அவனுக்குத் தெரியாது. இங்கு கூறப்படுகின்ற மார்த்தீன் என்ற மாணவனே திருச்சபையின் பெரிய சீர்திருத்தக் கருவியாக வேண்டுமென்று ஆண்டவரால் நியமிக்கப்பட்டிருக்கிறான்.

## இலௌகீகக் கல்வி மனச்சாட்சிக்குச் சமாதானம் அளிக்குமா?

நமது உத்தம மாணவனாகிய மார்த்தீன், எறும்புகளும் தன்னிடம் வந்து சுறுசுறுப்பு என்னும் பாடத்தைக் கற்றுச் செல்லுமாறு, ஐஸ்னாக் பாடசாலையில் சர்வ ஜாக்கிரதையுடன் கல்விபயின்று, ஆங்கு ஏற்பட்ட பரீட்சையில் முதற்றரத்தில் தேர்ச்சிப்பெற்று, தனக்கு வயது பதினெட்டு நடைபெறுகையில், கல்லூரிப் படிப்புப் படிக்கும் பொருட்டு எர்புர்த் பட்டணம் சென்றிருந்தனன். மிக்கப் பிரசித்திபெற்று விளங்கிய கல்லூரி யொன்று அம்மாநகரிலிருந்தது. ஆங்கு கலைபயின்ற மாணவரின் சங்கியை ஈராயிரத்திற்கதிகமென்னலாம். அன்னவரில் நமது மாணவனும் ஒருவனாகும். இயற்கையிலேயே சோம்பல், அசட்டுத்தனம் என்னப்படும் துர்க்குணங்களினின்று விடுபட்டு அவற்றிற் கெதிரிடையான புண்ணிய சாங்கோபாங்க முயற்சிகளில் பழக்கமுடையவன் என்பதும், மனோவுற்சாகமும், திடச்சித்தமும், அந்தஸ்திற்கேற்ற கடமைகளைச் செய்வதில் அவாவும் உடையவன் என்பதும், அவனுடைய ஜீவியத்தில் பரவக்காணலாம். அன்றலர்ந்த செந்தாமரையென்னும் தன்மை வாய்ந்த அருளொழுகு வதனமும், முல்லையரும்பு போன்ற இளமுறுவல் செய்யும் பல்வரிசையும் அமையப்பெற்றுக் கண்டோர் மனத்தைக் கவரத்தக்க முகவசீகரமுடையவனான நற்குணசீலன் "லூத்தருக்கு மலர்ச்சியும் புன்சிரிப்பும் உள்ள முகம் உண்டு. நாடோறும் மீஸா என்னும் பூசைப் பலியைக் காண வேண்டிக் கோவிலுக்குப் போய்ப் பக்தியாய் ஜெபம் செய்து முடித்துப் பின்னர் வந்து கர்த்தரின் நாமத்தை முன்னிட்டுத் தம்முடைய வேலையையாரம்பிப்பார், 'பக்தியுள்ள ஜெபம் படிப்பின் கஷ்டத்தைப் பாதி குறைக்கும்,' என்று கூறுவது அவருடைய பழமொழி. நித்திரையினாலாவது, சோம்பலினாலாவது

தம்முடைய பாடத்தை யொருநாளும் அசட்டை செய்யார். பாடங்கள் தீர்ந்த ஓய்வு நேரங்களில், கல்லூரியைச் சேர்ந்த புத்தகசாலைக்குச் சென்று கணப்பொழுதையும் வீணுக்காது கலைவல்லார் எழுதியுள்ள அரிய பெரிய கிரந்தங்களைத் தெரிந்தெடுத்து வாசித்துக் காலம் போக்குவார்'' என்று அவருடைய நண்பர் ஒருவர் அவரைப்பற்றி வியந்து கூறியிருக்கிறார்.





மேலே காட்டியிருக்கிற படத்தில், உழைத்துக் களைத்து இளைத்தவர்களாகிய லுத்தரின் தாய் தந்தையரைக் காண்கிறோம். இவ்விருவருடைய உருவப்படத்தை வரைந்தவர் லூக்கா கிரானக் என்று பெயர் கொண்டவரும், லுத்தருடைய உத்தம சிநேகருமானவர். இவர்கள் மிடியால் நலிந்து கஷ்ட ஜீவனத்தால் தங்கள் வாணாளை யோட்டியவர்கள் என்பதை அவர்களின் முகக்குறியாலறியலாகும்.

“தந்தை மகற்காற்றும் நன்றி அவயத்து
முந்தியிருப்பச் செயல்.”

என்ற நீதியை அறிந்திருந்த லுத்தரின் தந்தையானவர், தம்முடைய மைந்தனுக்கு பண உதவி புரியுமாறு உள்ளத்தில் ஆர்வம் மிஞ்சியவராயிருந்தாலும், மிடியின் கொடுமை அதைத் தடுத்துக்கொண்டு வந்ததால் மிடியைக் கடிந்தோட்டும் வாள், சிக்கன்மாய் ஜீவியம் செய்வதேயென மனத்திலோர்ந்து, தம்முடைய வருவாயிலிருந்து எவ்வளவு பணம் மிகுத்து வைக்கக் கூடுமோ, தம்முடைய வேலையில் எவ்வளவுக்கதிக

மாய்ச் சுறுசுறுப்புக் காட்டக் கூடுமோ, அவ்வளவும் செய்து, 'முயற்சி திருவினையாக்கும்' ஆதலால் அவருடைய விடா முயற்சியானது கொஞ்சம் திரவிய விர்த்திக் கேதுகரமாயிருந்தது. ஆதலால் கஷ்டமென்னும் கடலைக்கடந்து தமதாருயிர் மைந்தனைக் கல்வியென்னும் கடலைக் கடக்கச் செய்யும் பணவுதவியென்னும் தெப்பமாயினர். தம்முடைய தனயனைச் சட்டப்பரீட்சைக்குப் படிப்பிக்க வேண்டுமென்ற வெண்ணமிருந்ததே யன்றி வேத சாஸ்திரம் படிப்பிக்க விருப்பமில்லை.

லூத்தர் 1502-ம் வருடம் பீ. ஏ. பரீட்சையும், 1505-ம் வருடத்தில் எம். ஏ. பரீட்சையும் கொடுத்தார். 1505 ம் வருடத்தில் கர்த்தர் மகிமை விளங்கும் பண்டிகை சமயத்தில் சர்வகலாசாலைச் சங்கத்தார் முன்னிலையில் பண்டிதப்பட்டம் பெறுவதற்குத் தயாராகவிருந்த பதினெழுவரில் இவரும் ஒருவர். அன்னவரில் வரிசையெண்ணில் இவர் இரண்டாவது ஸ்தானம் வகித்திருந்தார். எம். ஏ. என்னும் உயர்ந்த சாஸ்திரப் பரீட்சையில் தேறிப் பட்டதாரியுமான பின்னர் அவருக்கிருந்த அகமகிழ்ச்சியின் அளவைப் புகலவும் வேண்டுமோ?

இவ்வாறு அகத்தில் மகிழ்வெய்திப் பூரண வுவகைகொண்டிருந்த நம்முடைய கலாவல்லவருக்கு, அந்தரங்கமான திகில் ஒன்று அவர் உள்ளத்தில் குடிகொண்டு [1] மருமத்தில் எறிவேல் பாய்ந்த புண்ணிலாம் பெரும் புழையில் கனல் நுழைந்தால் என' வருத்திக் கொண்டிருந்தது. கல்விபோல் [2] மம்மர் அறுக்கும் மருந்து எம்மையுலகத்தும் யாம் காணேம் என்ற உண்மையறிந்தவராய் இருந்தபோதிலும், "நூல்கள் என்னும் குடங்களில் கல்வி என்னும் கடல்நீர் மொண்டு வைத்திருக்கின்றனர் [3] குரவர்கள் எல்லாம். இவற்றில் எந்தக் குடத்திலுள்ள நீரைப்பருகினால் ஆத்ம தாகவிடாய் தணியும்? [4] நீத்தத்தில் பொருந்தும் [5] புற்புத வாழ்க்கையாம் அநித்திய உலகவின்ப சுகபோகங்களைக் காட்டுகின்றனவாய் நூல்கள் எல்லாம் இருக்கின்றனவேயன்றி வேறொன்றுங் காண்கிலேனே. இவைகளைக் கொண்டு என் தாகவிடாயைத் தணித்து எனதாத்துமாவைத் திருப்தி செய்யக் கூடவில்லையே," என்று அகத்தில் ஏங்கித் தவித்துத் துறைகாணு மானுமிபோல் திகைத்து நின்றனர். இதுவுமன்றி மற்றுமோர் துயரும் அவரை வாட்டுகின்றது. அஃதென்னதுயர்? திருச்சபையின் போதசம். என்ன போதசம்? "பொன், நிலம், மாதர் ஆசை பொருந்தினர் பொருந்தார்" என்ற இருவகுப்பினரில் மூவாசை பொருந்திய பாசங்களில் கட்டுண்டு சமுசார [6] சாகரத்தில் உழல்பவர்கள், மூவாசையற்று [7] அகங்காரமமகாரங்களையறுத்து, [8] பொறிவாயில் ஐந்தவித்து சந்நியாசம் பூண்டொழுகும் யோகியருக்குச் சமானமாகவு மாட்டார், மோக்ஷாநந்தத்தைச் சுதந்தரித்துக் கொள்ளவும் அருகராகார்.

---

1 நெஞ்சில். 2 மம்மர், ஆணவம், காமியம், மாயை என்ற மும்மலம். 3 நூலாசிரியர்கள். 4 தண்ணீர். 5 நீர்க்குமிழி. 6 சமுத்திரம். 7 நான் எனது என்னும் பற்றுகள். 8 மெய், வாய், கண், மூக்குச் செவி.

சந்நியாஸ அந்தஸ்தே மேம்பாடுடைத்து என்று போதிக்கப்பட்டு வந்ததுமேயாம்.

அந்தரத்தில் தோன்றி மறையும் மின்னலைப்போலும் நீரின் மேல் எழுதப்படும் எழுத்துப்போலும் இந்தச் சரீரம் நிலையற்ற பொய்ப் பாண்டம் என்னும் உண்மையைத் தெளிவிக்க இந்த வாலிபனுக்கு அநேக திருஷ்டாந்தங்கள் கிடைத்தன. அவற்றில் ஒன்றை ஈண்டு கூறுவாம்.

மார்த்தீன் லுத்தர் தாம் எம். ஏ. பரீட்சை கொடுப்பதற்கு முன்னமே, கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின மூன்றாம் நாளில், தம்முடைய சிநேகர் ஒருவருடன் உலாவச் சென்றார். இருவரும் மன்ஸ்பெல்டுபேட்டும் ஏகி மீளவேண்டுமென்று தீர்மானித்துக் காலையில் புறப்பட்டு சிநேகரிருவரும் வெகு சந்தோஷமாய்ச் சம்பாஷித்துக்கொண்டும், [1] பாட்டை மார்க்கத்திலிருந்த இயற்கை வனப்பை உற்றுநோக்கிக்கொண்டும் வழி நடந்தார்கள்.

கல்லூரியில் கலைபயிலும் மாணவரைக் கௌரவிக்கும் பொருட்டு அவர்கள் உடைவாள் தரித்துக்கொள்ளுமாறு கல்லூரி அதிகாரிகளால் உத்தரவளிக்கப் பெற்றிருந்தார்கள். அவ்வுத்தரவுப் பிரகாரம் மாணவர் தாம் எங்கும் வெளிச்சென்றால் இடையில் உடைவாள் தரித்து ஏகுவது பொதுவான வழக்கம். இந்தக் கல்லூரி மாணவர்கள் இடையில் உடைவாள் தரித்துச் செல்லும் தோற்றமானது மிடியென்னும் பகைவனையடியோடழிக்கும் வன்மையும் அதிகாரமும் பெற்றவர்கள் யாம் என்று கூறுவதுபோலிருக்கும்.

உலாவச் சென்றுகொண்டிருந்த மாணவரிருவரும் தாம் புறப்பட்ட பதியினின்றும் 3 மைல் தூரம் சென்ற பின்னர் நமது கதாநாயகராகிய லுத்தருக்கு நினையாத பிரகாரம் திடீரென்று ஓர் ஆபத்து சம்பவிக்கிறது. என்ன ஆபத்து? அடிசறுக்கினால் ஆனையும் சாயுமல்லவா? ஏதோ விநோதக் காட்சிகளை நோக்கிச் சம்பாஷணை செய்துகொண்டு சென்றவரானதால், கால் இடறிக் கீழே தவறி வீழ்ந்து விட்டார். இவ்விதம் தவறி விழுந்தபடியால் தாம் கரத்தில் பிடித்திருந்த வாளாயுதமே இவரறியாமலே கேடு விளைத்தது. என்னவெனில் காலின் பிரதான இரத்த நரம்பு வெட்டுண்டு போமாறு பலமான இரணகாயம் ஏற்பட்டது. என் செய்வார் பாவம்! 'கல்விக்கிருவர், களவிற்கொருவர், வழி நடைக்கு மூவர்' என்பது முதுமொழி. இப்போது இவர்களோ இரண்டுபேர். ஒருவர் விழுந்துகொண்டால் மற்றவர் என் செய்குவார். சிகிச்சை செய்வதற்கெங்காகிலும் தூக்கிச் செல்வாரா? அன்றி ஆண்டிருந்து ஏதாகிலும் உதவி புரிவாரா? அல்லது காயம்பட்ட பேர்வழியைத் தனிமையாய் விட்டு இரண வயித்தியனைத் தேடிக்கொணர்வதற்கேகுவாரா? 'அவசரத்தில் தாழிப்பானையிலும் கை நுழையாது' என்றபடி யாது புரிவதெனத் தோன்றாது நின்றார். ஆகிலும் இரத்தவோட்டத்

---

1 வழி.

தைத் தடுக்குமாறு காயத்தைத் தமது கையினால் பலமாய்ப் பிடித்து உதிரவெள்ளத்தை மறித்தார். இரத்தமோ ஆற்றுவெள்ளம்போல் பெருக்கெடுத்தோடுகின்றது. லுத்தரோ துயர் ஆற்றாது சித்தம் சலித்து அர்ச்: மரியாயே! பரிசுத்த தேவமாதாவே! அடியேனுக்கிரங்கும். இவ்வாபத்திலுமது (மலர்) கரத்தை நீட்டித் துணைபுரியும், என்று வேண்டிக் கொள்கிறார்.

"என்னம்மே யம்மே என்றேழை கூப்பிட்டுனது
முன்னம்மாய் நின்றால் முகம் பார்த்திரங்காயோ
சொன்னமா மந்தமயத் தூயவளே சுந்தரியே
அன்னம்மா ளீன்றதவ அன்னைமரி மாதாவே"
"வேருதவி யற்றமரம் வீழ்வதுபோ லிங்குனது
பேருதவி யற்றால் பிழையேன் பிழையேனே
ஊருதவியானாலும் உந்தனைப்போ லெந்தனுக்கிங்
காருதவியம்மா வென் அன்னைமரி மாதாவே"

என்று கல்லுங் கசிந்துருகும் வண்ணம் பாடுகிறார். இரத்தவோட்டமோ நின்றபாடில்லை. ஆகையால் உடன் சென்றிருந்த தோழர் இவரைப் பாட்டை மார்க்கத்தில் ஓர் புறமாக வைத்து விட்டுக் காலதாமதம் செய்யலாகாதெனவோர்ந்து, இரணவயித்தியனைக் கடிதேகிக்கொணர்வான் எர்புர்த் பட்டணத்திற்குமனோவேகம் என்றெண்ணக்கூடிய மா வேகமாய் ஓடினார்.

நடுக்காட்டில் தனியே விடப்பட்டிருக்கிற இந்த வாலிபர் இரத்தப் போக்கினால் சோபமாகி மூர்ச்சித்து மரணத்திற்குச் சமீபமாயிருக்கும் போது யாது நினைக்கின்றார். "என்னுடைய சிநேகிதன் வயித்தியனைக் கண்டுபிடிக்கிறாரோ, அல்லவோ, அப்படித்தான் கண்டுபிடித்த போதிலும் வயித்தியருக்கு எத்தகைய அலுவல்களிருக்கின்றனவோ? அவற்றை எல்லாம் விட்டு வருவதற்கு எவ்வாறு சாத்தியப்படுமோ? இங்கு வருவதாயிருந்தாலும் துரிதமாய் வந்து சேர்வாரோ? அவர் வருவதற்குள், ஒருக்கால் நான் உயிர் துறந்தாலும் துறந்திடுவேன். நான் இதுதறி உயிர் நீத்தால் எவ்விதமான தீர்வை விதிக்கப்படுவேன்? மோட்சம், நரகம் என்ற இரண்டிடங்களில் நான் எந்த இடத்திற்குத் தகுதியானவன் என்று தீர்க்கப்படுவேன்? நான் மோட்சத்திற்கு அருகனென்று கூற என் மனம் துணியுதில்லையே. இம்மைக்குரிய கல்வி பயிலுங் காலத்தில் அடிக்கடி தேவனையும் நித்தியத்தையும் மறந்துவிட்டதில்லையோ? என்று தம்முட் புலம்பிப் பரிதபித்துக் கொண்டிருக்கும் சமயத்தில்,

'கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாள் முகமோ நீர்பெற்றுயர்ந்த நிறை புலமோ' என்று கூறத்தக்க தன்மையில், தம்முடைய சிநேகர் ஓர் கைதேர்ந்த இரணவயித்தியனோடு வந்து சேர்ந்தார். வந்த வயித்தியர் உடனே காயத்தைப் பரீட்சித்து தகுந்த ஔடதப் பிரயோகம் செய்து காயத்தைக் கட்டச் சமீபத்திலிருந்தவோர் வீட்டிற்குக்

கொண்டுபோய்ப் படுக்கவைத்தார்கள். அன்றிரவு மறுபடியும் இரத்தம் ஓட ஆரம்பித்தது. ஆகையால் லூத்தருக்கு அதிகச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. இனித்தமக்கு மரணம் தப்பாதென்று நினைத்தார். இரண்டாம் முறை மரணத் தறுவாயிலிருந்த பொழுதும் அர்ச்: மரியாளே! எனக்கு ஒத்தாசை புரியும் என்று வேண்டிக்கொண்டார்.

தம்முடைய சிநேகரும் மகா கஸ்தியுற்றவராய் எவ்வாற்ருனும் இரத்தத்தைத் தடைப்படுத்த ஏற்றவுபாயங்களைச் சர்வ ஜாக்கிரதையோடு புரிந்து இரத்தத்தை நிறுத்தினர். அதின் பின்னர் வெகு எச்சரிக்கையுடன் லூத்தரை எர்புர்த் பட்டணத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்து, அல்லும் பகலும் செவ்வையாய்ச் சிகிச்சை புரிந்து வரப்பட்டது. தாம் பூரண சுகமடைகின்ற வரையில் தமது அறையை விட்டு எங்கும் சென்றதில்லை. இந்தக் காயம் ஏற்பட்டதின் பலனாக, வியாதிப் படுக்கையிலிருந்துகொண்டு வீணை வாசிக்கப் பயின்றுகொண்டார். அந்த வீணுகியானத்தால் அவரது மரணபயம் அவரை விட்டு விலகினது. இது ஒரு பேராச்சரியமே. கடவுளை வாயார வாழ்த்தி மிக இனிமையாய்ப் பாடிக்கொண்டிருந்தவருக்கு, வீணையின் இசையும் இசைத்துப்பாடப் பாக்கியம் கிடைத்தது, சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பெய்தாற்போல் இருக்குமன்ருே!

லூத்தருக்குத் தமது சரீரத்தில் ஏற்பட்டிருந்த காயம் ஆறியிருந்தபோதிலும், தமது ஆத்துமாவிலுண்டான காயத்தினின்று உதிரம் பெருக்கெடுத்தோடவாரம்பித்தது. அதாவது, தாம் சாஸ்திரியார் என்ற மேன்மையான பட்டம் பெறுவதற்குச் சில தினங்களுக்கு முன்னர், வித்தியாபட்டம் பெறுவதற்குரிய சகல பரீட்சையும் கொடுத்துத் தேர்ந்திருந்த அவருடைய சிநேகிதர் ஒருவர், திடீரென்று வியாதிப்பட்டார்; கொஞ்ச நேரத்திற்குள் மரணமென்னும் கஷ்டமான கடைசிப் பரீட்சையைக் கொடுக்கும்படியழைக்கப்பட்டார். இந்தச் சம்பவத்தைக் கண்ட மாத்திரத்தில் லூத்தருடைய உள்ளத்தில் திகிலும் ஆச்சரியமும் உண்டானதுமன்றி இந்த உலக வாழ்வு எத்தகைய அநித்தியம் நிறைந்தது என்றும், மனிதருடைய எண்ணங்களின்படி ஒன்றும் நிறைவேருதென்றும், எல்லாம் ஈசன் செயல் என்றும் அவர் மனத்தில் அழுத்தமாய்ப்பட்டது.

லூத்தர் தமது பாடங்களைப் படிக்கும் நேரம்போக மீதியான ஓய்வுநேரங்களில் கல்லூரியிலிருக்கும் புத்தக சாலைக்குப் போய், அங்குள்ள புஸ்தகங்களை யெடுத்து வாசித்துக் காலம் போக்குவார் என்று முன்னமே கூறியுள்ளோம். 'அடுத்து முயன்ருலும் ஆகும் நாளன்றி எடுத்தக் கருமங்கள் ஆகா' என்ற ஆன்ருேர் வாக்கியம் போல், தம்முடைய ஆத்துமத்திலுண்டாயிருந்த தாக விடாய் தணியும் காலம் கிட்டியது. ஒருநாள் இவர் வழக்கம்போல் புத்தகசாலைக்குப் போய் ஆங்குள்ள அநேக புத்தகங்களை ஒவ்வொன்ருய்ப் புரட்டிப் பார்த்துக் கொண்டே செல்கையில் இதற்குமுன் எக்காலத்திலும் கண்டிராதவோர் புத்தகம் அவர் கண்ணுக்குத் தோன்றினது. இது நூதனமாகத் தோன்றுகின்ற

தே? இவ்வளவு காலமும் எப்படி இது தோன்றாது மறைந்து கிடந்தது, இதை மறைத்து வைத்திருந்தவர் யார்? இதில் என்ன நூதனம் அடங்கிக் கிடக்கின்றது. இதைப் பார்த்து விட்டுப் பின்னர் இருந்தவிடத்தில் வைத்து விடுவோம் எனத்தீர்மானித்துப் புத்தகத்தைத் திறந்து நோக்கினார். 'சத்தியவேத புத்தகம்' என்று லத்தீன் பாஷையில் பெயர் தீட்டப்பட்டு அந்தப் பாஷையிலேயே எழுதப்பட்டிருக்கவும் கண்டார். லுத்தருக்குண்டான அகமகிழ்ச்சியையும் முகமலர்ச்சியையும் எவ்வாறு வர்ணிப்பது. விலையேறப் பெற்றதும் எவ்விடத்தும் தேடக் கிடையாததுமான ஓர் ஜீவரெத்தினம் தம்முடைய கையில் அகப்பட்டதினால் அவர் கொண்ட ஆனந்தம் அளவுகடந்த பரமானந்தம், ஆகையால்:—

ஆடினர் களித்தனர் அயர்ந்து நின்றனர்
ஓடினர் குதித்தனர் உருகிமாழ்கினர்*
பாடினர் பதைத்தனர் பரமநாதனை
நாடினர் நடுங்கினர் நயந்தசிந்தையால்.

"ஆ! தெய்வமே! இதுகால பரியந்தம் என்னுத்துமத்திலுண்டான தாக விடாய் தீர்க்கும் ஜீவத்தண்ணீர் நிரம்ப வைக்கப்பட்டிருக்கும் இந்தப் புத்தகத்திற்காக எவ்வளவு காலம் நான் ஆசையோடு வாஞ்சித்திருந்தும், எனக்கு உமது திருவுள்ளம் இரங்காதென்னே? இது மறை என்று பெயர் விளங்குகின்றதால் இதுவரை மறைத்து வைத்தீரோ? திருச்சபையின் அதிகாரவர்க்கத்தினரும் இந்தக் கருத்தை யுத்தேசித்தே மறைத்து வைத்தார்களோ? உமது சித்தம் என் பாக்கியம்" என்று தேவனுக்கு நன்றியறிந்த தோத்திரப்பலி செலுத்திச் சாவதானமாய் ஆசனத்திலமர்ந்து புத்தகத்தை முத்தியிட்டு கண்களில் ஒற்றிக்கொண்டு, திறந்து வெகு ஆவலுடன் வாசித்தார். விடாய்த்துக் களைத்திருந்த உள்ளம் குளிர்ந்து விடாய்தணிகின்றது, என்ன ஆச்சரியம்! என்ன சந்தோஷம்!!

அவர் சிநேகிதரில் ஒருவர் பின் வருமாறெழுதுகிறார்; "லுத்தர் இங்கே புத்தகங்களை ஒவ்வொன்றாக உற்று நோக்கும்போது; லத்தீன் பாஷையில் எழுதப்பட்டிருந்த வேத புத்தகத்தைக் கண்டுபிடித்தார், இப்புத்தகத்தை இதற்குமுன் பார்த்ததேயில்லை. சாதாரணப் பிரசங்கப் புத்தகங்களிலும், கோவிலில் நடக்கும் பிரசங்கங்களிலும், சொல்லியிராத அநேக வாக்கியங்களும் நிருபங்களும் சுவிசேஷங்களும் இங்கேயுண்டென்று, தாம் பெரிய ஆச்சரியத்தோடு கவனிக்கிறார். பழைய வேற்பாட்டை வாசிக்கும்போது சாமுவேல் அன்னாள் என்பவர்களின் சரித்திரத்தை வாசித்து ஆனந்தமடைகிறார். இவையெல்லாமவருக்கு புதிதாயிருப்பதினால், உண்மையுள்ள பராபரன், தமக்கும் ஓர்நாள் இத்தகைய புத்தகம் அளிக்கவேண்டுமென்று ஆவலோடு ஜெபிக்கிறார். இந்த மன்றாட்டை ஆண்டவர் பரிபூரணமாகக் கேட்டிருக்கிறார்,"

*மாழ்கினர் - மயங்கினர்.

உரோமைச்சபை இதுகாறும் மறைத்து வைத்திருந்த சத்திய வேதபுத்தகத்தை இவ்வாறு கடைசியில் கண்டு பிடித்தார். இது முதல் நாடோறும் வேதத்தை வெகு ஊக்கத்துடன் வாசித்தார். ஆகிலும் அது மறையானபடியால் அநேகவிடங்களில் நன்ருய்ப் பொருள் விளங்க வில்லை. என்ருலும் அவர் ஒன்றுமட்டும் நன்ருய் அறிந்து கொண்டார். அதாவது, தாம் எந்த விதமாக இருக்க வேண்டுமென்று ஆண்டவர் தமது பரிசுத்த வசனத்தில் எதிர் பார்க்கிருரோ அந்த விதமாகத் தான் இருந்த தில்லை என்பதே. மற்றும் அவர் அறிந்து கொண்டது என்னவெனில் தாம் தண்டனைக்கே பாத்திரரான பாவியென்பது. தேவ அருள் எப்டிக் கிடைக்கும் என்பதும், மனச்சாட்சியில் நல்ல சமாதானம் உண்டாகும் விதம் எவ்வாறென்பதும் அவருக்கு இன்னும் தெரியவில்லை.

1505-ம் ஞு லுத்தர் சாஸ்திரியார் எம். ஏ. பட்டம் பெற்றுத் தமது தந்தையின் விருப்பப்படியே சட்ட சாஸ்திரம் பயில ஆரம்பித்தார். அவ்வருடம் ஜூன்மீ தமது தாய்தந்தையரைப் பார்க்க ஆர்வங் கொண்டு மன்ஸ்பெல்டுக்குச் சென்ருர். கல்வியில் தேர்ந்தவராய்ப் பெரிய வித்தியாபட்டதாரியாய் இவர் தமது சொந்தவூரேகினூரானபடியால், வனத்திலுறையும் வண்டினங்கள் மலரின் தேனைப் பருக வெண்ணி வந்து மொய்ப்பனபோல் இனஜன பந்துமித்ராதிகள் ஆங்குற்றனர். அறிவுடையொருவனை அரசனும் விரும்பும் அன்ருே?

"ஈன்றபொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ருேன் எனக்கேட்ட தாய்"

என்றபடி அவருடைய அன்னையும் ஆருயிர்த் தந்தையும் கொண்ட உவகைக்கு ஓர் எல்லையிருந்திருக்குமோ? சாணையில் பிடிக்கப்பட்டுப் பட்டங்கள் தீர்ந்த வயிரமணியை யாவரே மதியாதார்? தந்தையானவர் தமது மைந்தரின் பால்ய பருவத்தில் அதிகக் கண்டிப்பாய் "மிலாறைக் கையாடாதவன் தன் மகனுக்குச் சத்துரு" என்ற மறைமொழியை அனுஷ்டித்து வளர்த்து வந்தவரானபடியால், தமது கண்டனையுந் தண்டனையுமே மைந்தனை இத்துணைதூரம் உயர்ந்த வித்தியார்த்தியாக்கின தென்று உள்ள மகிழ்ந்து மெய் புளகித்தார். பால சிங்கத்தைக் கிழச் சிங்கம் தழுவிக்கொண்டதுபோல் தனையராகிய கவிச் சிங்கத்தைத் தழுவிக்கொண்டு அவரோடு பல இன்னுரையாடினூர். பிதா பிதாவடைவான அன்பைக் காட்டினூர். தமது துயரையோட்டினூர். லுத்தரோ

"மகன்தந்தைக் காற்றுமுதவி இவன்தந்தை
என்னோற்ருன் கொல்லெனும் சொல்"

காட்டினூர். இவ்வாறு யாவரும் இன்ப சாகரத்தில் மூழ்கி யிறைவனை வாழ்த்தி இனிதுடனிருங்குங்காலை, நமது வித்தியார்த்தியாரின் உள்ளத்தில் குடிகொண்டிருந்த ஒரு சஞ்சலம் அவர் மனோநிலையைக் கெடுத்தது.

வித்தைக் கடலைக் கரைகண்ட லூத்தரின் மனோநிலை கெடுவதற்குக் காரணமென்ன? (மிருஷா கண்ட வுவம தரிசனம் போலும்) புத்தர் கண்ட காட்சிபோல் இவர்கண்ட வோர் பயங்கரமான காட்சியே. அதாவது பல குஷ்டரோகிகளின் பயங்கரமான தோற்றமே, அவருடைய ஆத்துமத்தை ஊடுருவிச் செல்லும் வாளாயிற்று. மரணத்தின் பயங்கரத்தை அதிகரிப்பித்ததால், அந்த ஆத்ம காயத்தினின்றும் உதிரம் பொங்கி வெளிக்கிளம்பியோட வாரம்பித்தது.



மேலே காணப்படுகின்ற படம் மன்ஸ்பெல்டிலுள்ள லூத்தரின் பெற்றோருடைய குடிமனை.

பெற்றோருடன் சில நாட்கள் சந்தோஷமாக இருந்த பின்னர், எர்புர்த் பட்டணத்திற்கு மீளவெண்ணி அவ்விடத்தினின்றும் பாதசாரியாகப் புறப்பட்டு வழியில் நடந்து செல்லுகையில் 'எண்பதுகோடி நினைந் தெண்ணுவன' என்றபடி தமதுள்ளத்தில் பற்பல எண்ணங்களுதிக்கவே, கடைசியாகத் தாம் ஒரு பெரிய நியாயவாதியாகி முன்னுக்கு வரவேண்டுமென்று நினைத்துக்கொண்டே வழி நடந்தார். எவ்விதமான நினைவு உதித்தபோதிலும் தமதுள்ளத்தில் சமாதானமற்றவராகவேயிருந்தார். ஜூலைமீ 2உ எர்புர்த்திற்குச் சமீபிக்கும்போது, ஜோதிமயமான ஆயிரம் கதிர்க்கரங்களையும் நீட்டி இதுவரையில் நன்றாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்த சூரியன் சடுதியில் மறைந்தது. தினகரன் இவ்வாறு மறைந்த காரணமென்னவென்று மனத்திலுன்னுமுன் அவர் சமீபத்தில் திடீரென்றோரிடி வீழ்ந்தது. மற்றுமோரிடி மலைகளும் கற்பாறை

களும் ஊடுருவிப் பிளந்து போகத்தக்க தன்மையில் அவரைச் சுற்றிலும் விழுந்தது. மின்னுமல், குமுறுமல், மேகஞ்சுமராமல் கோடையிடிபோல் அவர் சமீபத்திலேயே வீழ்வதைப் பார்த்து இது தெய்வீகம் என்று சிந்தித்து அர்ச்: அன்னம்மாளே! அடியேனுக்கிதுததி யுதவி புரிந்தருளும் என்று வேண்டிக்கொண்டு யாது நினைக்கலுற்ருர் லூத்தர் சாஸ்திரியார்? ''என்னே! இவ்வுலக சுகபோகம் யோசிக்குங்கால் இந்திர ஜாலம்; மனிதன் இன்றைக்கிருப்பதுவோ சந்தேகம். அந்தரத்தில் தோன்றி மறைந்திடும் மின்னலைப்போல் இந்தச் சடலம் அழிந்திடும். நெல்லை விதைத்தால் அதையறுக்க ஒரு காலமுண்டு. மரத்தை வளர்த்தால் அதை வெட்டவோர் காலமுண்டு. ஆனுல் மனிதர் வாழ்நாள் என்னும் புல்லறுக்கவோ காலநிர்ணயமில்லை. நானிப்பொழுது இந்த இடத்தில் மரித்தால் பெரிய நியாயவாதியாவது எங்கே? உலகில் திரளான திரவிய சம்பன்னனுவதெங்கே?

''வையாற் செய்புணை நம்பி அனலாழி கடக்கவுன்னும் மதியிலார்போல், பொய்யாற்செய் மெய்நம்பி ஏதேதோ நினைவுற்ருய் பொறைதீர் நெஞ்சே, பையவோர் புட்பிடிக்கக் ககனமிசை வட்டமிடு பருந்துபோல, ஐயோ கூற்றுனைப் பிடிக்கும் அற்றம்பார்த் தொளித்திருப்பதறிகிலாயோ'' என்று மகான்கள் கூறியுள்ளபடியல்லவோ இதுததி இருக்கின்றது தான்படுங் கண்ணி தனக்குத் தெரியாமல் மயில் கிடந்தாடுகின்றது' என்ற முதுமொழிப்படியன்ரே இருக்கின்றது நான் வக்கீலாக வேண்டுமென்றெண்ணங்கொள்கிறது, ஐயோ! என் இந்தத் தொல்லை, என் மனத்தில் சமாதானமும் இல்லை. உலக வாழ்வும் அதிலுள்ள யாவும் அநித்தியம். மெய் மறையில் கூறியுள்ள வார்த்தைகளே சத்தியம். ஒருவன் உலக முழுவதும் ஆதாயப் படுத்திக்கொண்டாலும் தன்னுடைய ஆத்துமா நஷ்டமானுல் அவனுக்கிலாபமென்ன? தத்துவ ஞான முணர்ந்த பெரியோர் இதன் உண்மையை அறிந்தபடியாலன்ரே பற்றறுத்து ஞானிகளாய் ஜீவிக்கின்ருர்கள். துறவிக்கு வேந்தன் துரும்பு, 'அற்றதுபற்றெனில் உற்றது வீடு'. ஆகையால் நானும் பற்றறுத்து ஞானியாகவேண்டும். அதற்கு நான் செய்யவேண்டியதென்ன? உலகப்பற்றைத் துறந்து சந்நியாசியாகவேண்டும். நான் கடைத்தேறுவதற்கும் மார்க்கம் அஃதேயாகும். தொண்டர்கள் உள்ளத்தில் கடவுள் குடிகொண்டிருக்கிருர் என்று இவ்வாறு யோசித்துத் தம்மை முழுவதும் தெய்வ ஊழியத்திற்கு வாக்களிக்கிருர். சொல்லுவதெளிது செய்வதரிது என்றபடி தாம் செய்திருக்கிற வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி அதில் நிலைகொள்வாரோ? ஈசன் செயலையறியும் வன்மை யாருக்குண்டு?

லூத்தர் எர்புர்த்துக்குச் சென்றபின் தாம் வழியில் செய்த வாக்குத்தத்தத்தைப்பற்றி ஆலோசிக்கும்போது 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்றபடி அது அவசரத்தில் செய்யப்பட்டதென்றுணர்ந்தார். என்ருலும் தெய்வத்தை முன்னிலையாக்கி அவர் முன்பாகச் செய்த வாக்கை மறுப்பதெவ்விதம்? வாழைப்பழத்தைக்கொடுத்து எய்க்க அவர் சிறுபிள்ளையல்லவே, சர்வலோக நாயகன். எங்கும் நிறைந்திருக்கும்

ஆனந்தமூர்த்தி. தம்முடைய அருள் வெளிக்குள் அகிலாண்ட கோடியெல்லாம் அடக்கிக்கொண்டிருக்கின்ற வல்லபிரான் திருவுள்ளம் மெய்யாகவே இவ்விதமிருக்கும் பட்சத்தில் அவருடைய திருச்சித்தத்திற்கு விரோதமாக எதிர்த்து நிற்பது நன்றோ? அன்று. அவருடைய ஆண்மைக்கெதிர் ஒன்றுமின்று என்று பலவாறாய்த் தம்மனத்தைத்தேற்றித்




தாம் செய்த வாக்குத்தத்தம் பரிசுத்தமானது, அதைத் தவறாமல் கைக்கொள்வதே ஆண்மையென்றும், செய்த வாக்குத்தத்தத்தின்படி நிற்பதே திடச்சித்தமென்றும் அறிந்தார். தெய்வ சித்தமும் அதுவேயெனத் தெரிந்தார். சவுல் தமஸ்குப்பட்டணத்திற்குக் கிறிஸ்தவர்களைத் துன்பஞ் செய்ய வெண்ணிப்போய்க் கொண்டிருக்கையில், நினையாத பிர

காரமாய் எப்படி நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் தரிசனம் பெற்று உற்றார் உறவினர் பெற்றோராகிய எல்லாப்பற்றையும் அறுத்து, யாவராலும் நிந்தையவமானமாய் இகழப்பட்டுச் சிலுவையில் உயிர் விடுத்த நசரேயனின் சீடனானரோ அதேவிதம் மார்த்தீன் லுத்தர் சாஸ்திரியாரும்,

உற்றார்சதமல்ல ஊருஞ்சதமல்ல உற்றமற்றப்
பெற்றார்சதமல்ல பெண்டீர்சதமல்ல பீழை நெஞ்சே
நற்றாமரையைப்பழித்திடும் வெல்லை நராதிபனின்
பொற்றாமரைக்கழல் நிற்கினியென்றும் புகலிடமே. (சுயம்)

என்று மனதைத்திடப்படுத்தி, சகலத்தையுந் துறந்து தெய்வ ஊழியத்தைச் செய்ய விரும்பிச் சந்நியாசியானார்.

நாம் சந்நியாச மார்க்கத்தை விசேஷித்த விதமாக எண்ணவிடினும், எல்லாவற்றையும் வெறுக்கவும் சகலத்திலும் மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடக்கவும் வேண்டிய மனமானது லுத்தர் சாஸ்திரியாருக்கேற்பட்டது ஆச்சரியத்தோடு கவனிக்கத்தக்கதாயிருக்கிறது.

இவ்விதமான தீர்மானஞ் செய்த இரண்டு வாரங்களுக்குப்பின் 1505ஆம் ஜூலை 16ம் வாலிபர் பலர் லுத்தரின் அறையில் வந்து கூடியிருந்தனர். 'கண்டே களித்தங் குறவாடி தம்மில் களிப்பர் கற்றோரே' என்றபடி ஆங்குற்றிருந்தவர் அவருடன் கலைபயின்ற மாணவரும் சிநேகருமாவர். கலைக்கியான வல்லராகிய சாஸ்திரியாரின் கல்வியறிவை மெச்சிப் புகழாதவர் எவர்? சாஸ்திரோக்தமான சம்பாஷணைகள் உற்சாகமாய் நடைபெற்றன. சங்கீதங்களும் தேனினுமினிய பாடல்களும், அவர்கள் உள்ளத்தை மகிழ்வித்தன. இங்ஙனம் ஆனந்த சாகரத்திலாழ்ந்து ஆர்வலர்கள் இன்பம் நுகர்ந்து கொண்டிருக்கையில், சடுதியில் சாஸ்திரியார் தம்முடைய சிநேகிதர்களை நோக்கி உரத்த தொனியுடன், "என்னை நீங்கள் பார்க்கின்றதும், உங்களை நான் கண்டு களிக்கின்ற பாக்கியமும் இன்றோடு கடைசியாய் முடிகின்றது. இதுவே நம்முடைய கூட்டுறவின் கடைசிநாள்," என்றார். எவ்வளவு காலந்தான் தம்முடைய இரகசியத்தை மறைத்து வைத்திருக்கக்கூடும்? வெளிக்கு வராத மறை பொருளுமுண்டோ? மலிந்தால் கடைக்கு வருமன்றோ? ஆகையால் தம்முடைய உள்ளக் கிடக்கையை ஒருவாறாய்த் துணிந்துரைத்தார். இந்த இரகசியத்தை வெளியிடவே, இடியேறுண்ட நாகங்கள்போல் அனைவரும் சித்தங் கலங்கிப் புத்திமயங்கி அவர்களனுபவித்துக்கொண்டிருந்த இன்பமெல்லாம் துன்பமாகி, ஆற்றொணாத் துயரெய்தி யோபென்ற மகான் இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்திருந்தபொழுது அவரைக்கண்ட அவருடைய சிநேகிதர்கள், என்ன பேசுவதென்று அறியாது திகைத்திருந்த பான்மையில், சாஸ்திரியாரின் சிநேகரும் திகைத்து நின்று ஒருவாறு தேறிப் பின்னர், விஷயத்தின் உண்மையை விளங்கக் கூறுமாறு கேட்டு, விடையளிக்கப் பெற்றபின், எல்லாரும் ஏகோபித்து அந்தப் பைத்தியமான எண்ணத்தைப் பற்றற விட்டுவிடுமாறு கூறினார்கள்.

இவ்வாறு கூறி முடிந்தவுடன் பேதுரு அப்போஸ்தலனைப் போல முந்திப்பேசுஞ் சிந்தை வாய்ந்த வொருவர், லூத்தரைப் பார்த்து "சிநேகிதரே! உமக்கு இந்தப்பித்துப் பிடித்து எத்தனை நாட்களாயிற்று. உம்முடைய காரியாதிகள் மிக்க வியப்பையே உண்டுபண்ணுகின்றன. [1] மதகரியானது தாமரை நூலில் கட்டுப்பட்டு நிற்குமோ? பனையோலையைக் கிழித்துச் சங்கிலிசெய்து [2] பஞ்சானத்தைக் கட்டி வைக்கக் கூடுமோ. உம்முடைய கல்வியின் உயர்வென்ன! எம். ஏ, பட்டதாரியான நீர் எவ்விதமான மகத்தான காரியங்களையும் செய்யலாமன்றோ? உம்முடைய சாமார்த்தியத்தையும் வாய்ச் சாதுரியத்தையும் யோசிக்குங் கால், உம்மாலாகாத அருமையான காரியமும் ஒன்றிருக்குமோ! ஐரோப்பாக் கண்டத்தையே அசைக்கும் ஆற்றல் உமக்கில்லையோ? வித்துவானுக் கெது பரதேசம். சகல சாஸ்திரவிற்பன்னராகிய உமக்கு நான் கூறுவதென்னவிருக்கின்றது. உம்மை ஓர் சந்நியாசியாக மடத்தில் அடக்கி வைக்கிறதென்பது கூடாத காரியம். ஆதலால் இந்தப் பயித்தியத்தினின்றும் நீங்குவீராக" என்றார். உடனே இரண்டாவதாக மற்றொரு மித்திரர் அவரைப் பார்த்து, "நிர்மூடரும் துன்மார்க்க ஜீவியம் செய்கின்றவர்களுமாகிய சந்நியாசிகளுடன் கூடி வாழப்போகின்றீரோ" என்று கூறினர். மூன்றாவதாக மற்றுமொருவர், "எங்கள் பிரிய சிநேகிதரே! சிநேகத்திற்கு உத்தம பாத்திரம் என்று எங்களால் கருதப்பட்டவரே, முதலாவது உம்மையே நீர் துறந்தும், இரண்டாவது எங்களனைவரையும் மறந்தும் துறவியாகின்றீரோ?" என்றார். (கடைசியாக) மற்றுமொருவர் "அருமைச் சிநேகிதராகிய லூத்தர் சாஸ்திரியாரே! நீர் யார் யாரை மறந்துவிட்டாலும் உமது தந்தை தாயரை மறந்துவிடலாமோ 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்ற முதுமொழிப்படி நீர் உம்முடைய நெஞ்சத்தைக் கல்லினும் வல்லதாக்கிக் கொண்டால் மகா கஷ்ட சஞ்சலங்களினிடைப்பட்டு, உம்மை இவ்வளவு தூரம் கல்வியில் முன்னேற்றுவித்த தந்தையைக் கனவிலும் மறக்கலாமோ? மாதா வயிறெரிய மகேஸ்வர பூசை செய்து பிரயோசனமென்ன? மேலும் சந்நியாசம் என்கிற வார்த்தையே உமது தந்தைக்கு அருவருப்பையுண்டுபண்ணக் கூடியதென்பது நீர் நன்குணர்ந்த விஷயமன்றோ" என்றார்.

"எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு".

என்ற நீதியையுணர்ந்த அதிபுத்திமானுன லூத்தர் அவர் கூறிய மொழிகளைச் செவியேற்காது விடுத்தனர். கூர்மையற்ற பாணங்கள் சுத்த வீரன் அணிந்திருக்கும் மார்க்கவசத்தைத் துளைத்துச் செல்லுமோ? அவர்கள் ஆட்சேப மொழிகளெல்லாம் அந்தரத்திற் பறந்தேகின. குருவியானது குன்றை முட்டி, நிலைபெயர்க்க வெண்ணினதுபோல் முடிந்

1 யானை. 2 சிங்கம்.

தது சிநேகிதர் கூறிய மாற்றங்களனைத்தும். லூத்தரோ தம்முடைய பிடிவாதமான தீர்மானத்திலே நிலைத்து நின்றார்.

மறுநாள் அதே சிநேகிதர்களோடு அகுஸ்தீனர் மடத்திற்கு முன்பாக நிற்கின்றார். கதவும் திறக்கப்படுகின்றது. லூத்தர் மடத்திற்குள் நுழைகின்றார். என்ன ஆச்சரியம். சிநேகிதர் மனம் பதைத்து 'நமக்கும் லூத்தருக்குமிருந்த சிநேகபந்தம் இன்றோடு ஒழிந்தது' என்று கன்றிழந்த காராம் பசுவைப்போல் கண்களினின்றும் தாரைதாரையாய் நீரொழுகிய வண்ணமே தத்தம்பதிக்கு மீண்டனர். லூத்தரின் அந்தரங்க மனக்கருத்தையறிய வொண்ணாது.

இவ்வாறு சகலத்தையுந்துறந்து லூத்தர் சந்நியாசம் பூண்டதற்குக் காரணமென்னவென வினவினால், அதற்குச் சமாதானம் என்ன?

"எல்லாருடைய இரட்சிப்புக்காக இந்த வாக்கைக்கொடுத்தேன். நான் பராபரனுக்கு ஊழியம் செய்யவும், அவரது அருளைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டுமென்கிற நோக்கத்துடன் சந்நியாசம் புகுந்தேன்" என்று அவர்தாமே கூறியிருக்கின்றார்.

துவக்கத்தில் மடத்தில் லூத்தருக்குத் தம்முடைய நோக்கத்திற்கேற்ற வண்ணம் மனதில் சமாதானமிருந்தது. தம்மேல் தகப்பனருக்குக் கோபமும் தாயாருக்கு ஆற்றொணுத் துயரமும் இருக்கின்றதென்று நன்குணர்ந்தார். என்செய்வார் பாவம்! பவுலப்போஸ்தலன் தமஸ்குவிற்குப் போகும்போது எப்படி தேவனுடைய சத்தத்தைக் கேட்டு அவருக்கடிமையானரோ அதே விதமாய் லூத்தரும் எர்புர்ட் நகரத்துக்கேகும் வழியில் நடந்த சம்பவத்தைக்கொண்டு தாமும் அழைக்கப்பட்டதாய்த் துணிந்தார். அழைக்கப்பட்டது மாத்திரமல்ல, தெரிந்துகொள்ளபட்டதாகவும் நிச்சயித்தார். இவ்விதமான துணிவோடும் நிச்சயத்தோடும் தாம் மனிதனுக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதே செம்மையும் நியாயமுமானது என்று உள்ளத்திலோர்ந்து, சமாதானமடைந்திருந்தார்.

'தந்தை சொன்மிக்க மந்திரமில்லை' என்ற நீதியையுணர்ந்த கல்விமானனபடியால் தம்முடைய தந்தையின் அபிப்பிராயம் எவ்வாறிருக்குமோ என்றையுற்று அவருக்கும் தமது கருத்தையோர் நிருபத்தின் வாயிலாகத் தெரிவித்தார். இயமனுக்கு எழு பிள்ளைகள் கொடுத்தாலும் உயிரோடு ஒரு பிள்ளை கொடுக்க உலகில் எவர்தான் சம்மதிப்பார். ஆகையால் மைந்தனின் சிந்தை இவ்வண்ணம் மாறிவிட்டதற்காக மனங்கவன்ற தந்தை தாம் இதற்கு எவ்வாற்றானும் உடன்பட வியலாதென மறுத்து மகனர்க்கு விடையளித்தார். "கர்த்தர் என் வீட்டில் உள்ள பொருள்களையெல்லாம் கொள்ளை கொண்டுபோகும்போது எடுத்துக்கொண்டு போகாதே என்று அவரைத் தடுக்கிறவன் யார்" என்ற பரிசுத்த யோபின் வாக்கியம்போல் கர்த்தர் நமது லூத்தர் சாஸ்திரியாரைக் கருவிலே திருவுடையராக வமைத்து அவரைக்கொண்டு மகத்தான காரியங்களைச் செய்யத் திருவுள்ளம் கொண்டிருக்கின்றபடியால், யார் மறுத்தாலென்ன? வெறுத்தாலென்ன? எவரும் அவருடைய சித்தத்

திற்கு விரோதமாய் எதிர்த்து நிற்கக்கூடுமோ? ஹான்ஸ் லூத்தர் தம்முடைய சித்தத்திற்கு விரோதமாகத் தமது தாசனாகிய லூத்தரைத் தடுக்கிறார் என்றறிந்து, தம்முடைய விரலை ஒரு சிறிது அந்தக் குடும்பத்தின் மேல் நீட்டினார். நீட்டவே, அவருடைய குமாரரில் இருவர் வைசூரி என்னும் ஒருவகைக் கொள்ளைநோயால் மரித்தனர். தமது சிரேஷ்ட புத்திரராகிய மார்த்தீன் லூத்தரும் இம்மாரி நோயால் மாண்டனர் என்ற வதந்தியும் இவர் செவிக்கெட்டிற்று. அந்தோ! என்செய்வார் பாவம்! உடனே சிந்தை நொந்தவராய்த் தமது மைந்தருக்கு ஒரு நிருபம் எழுதினார். அது எறக்குறையப் பின் வருமாறு:—

"பிரிய குமாரனே, தேவன் உன்னைக்கொண்டு எதோ ஒரு மகத்தான வேலையைச் செய்யத் திருச்சித்தங்கொண்டிருக்கிறபடியால், அவருக்கு விரோதமாய் நான் எதிர்த்து நிற்கக்கூடாது. நீ பாலியனாய் இருக்கும்போதே, சந்நியாசம் என்ற வோர் கிளர்ச்சி உனதுள்ளத்தில் தோன்றிக்கொண்டிருக்கக் கண்டும், அதை நான் அப்போதைக்கப்போது தடுத்து வந்தேன். இப்போதோ அது பலமாய் வேரூன்றி மரமாய் முளைத்து வெளிக்கிளம்பி விட்டபடியால், நான் இனி ஒன்றும் செய்யவியலாது. ஆகையால் நான் உனக்குக்கூறும் கடைசி வார்த்தைகளாவன:—

"ஊக்கமே பிதா உவ்வு தாய்[1] உணர்ந்த மெஞ்ஞான
நோக்கமே ஒரு நேசு ப்ப ரு த்[2] தோழனாய்த் தயையின்
நீக்கமே மணத்துணைவியாய் நெடும் பொறை[3] மகனாய்
ஆக்கமேவிய அறத்துறவோரொடுவாழ்வாய்
ஊக்கவித்தினால் உதித்த மெஞ்ஞானமே மரமாய்
வீக்க நற்றவவேர்விழப் பொறை தயை கவட்டாய்
நீக்க முற்றியே மகிழ்வுபூத்து உயர்ந்தவான் நிலைவீட்
டாக்க நற்கனியுறுத்திவாழ்ந்து உணர்வின மேல்கனிவாய்"

"ஆண்டவர் உனக்கு நல்ல முடிவைத் தந்தருள்வாராக."

உன் தந்தை ஹான்ஸ் லூத்தர்.

தந்தையானவர் இத்தகைய கடிதம் வரைந்திருந்தால் தனையருக்கு மட்டில்லாத மனமகிழ்ச்சியுண்டாகியிருக்குமன்றோ? மடத்தில் ஏற்பட்ட வொழுங்குப்படி, மற்ற சந்நியாசியர்களைப்போலத் தாமும் நவசந்நியாசியாக வொருவருடமிருக்க வேண்டியதிருந்தது. மனத்தாழ்ச்சி என்பது எழுதலையான சுகுணங்களுக்கும் முதன்மையானதாலும், சம்மனசுகளைக் கெடுத்ததும், ஏழுதலையான பாவங்களுக்கும் முதன்மை பெற்றதுமான அகங்காரம் என்னும் பாவத்திற்கெதிரிடையானதாலும், மடத்தில் லூத்தர் சாஸ்திரியார் தாழ்மை என்னும் உடையைத் தரித்துக்கொண்டார். அப்படி அவர் தாழ்மையை அனுசரித்து வருகிறார் என்பதற்கு அறிகுறியாகத் துடைப்பம் பிடித்துக் கோயில், சந்நியாசிகளின் அறை முதலியவற்றைக் கூட்டிச்சுத்தஞ் செய்துவருவார். வே

1 நல்லதவம். 2 இணைபிரியாத. 3 பொறுமை. மேற்கவியைக் கீழ்க்கவியோடு பொருத்திப் பார்த்தால் பொருள் நன்றாய் விளங்கும்.

லைகள் தீர்ந்த ஓய்வு நேரங்களில் தமக்காறுதலாக எதாவது புத்தகத்தை யெடுத்து வாசித்துக் காலங்கழிக்கலாம் என்று ஒருநாள் வாசித்துக் கொண்டிருக்கும்போது வன்கண்மைவாய்ந்த வோர் சந்நியாசி அவரை நோக்கி "நீ புத்தகத்தை யெடுத்துப்படிப்பதினுல் மடத்துக்கு மகா லாபகரமோ? நாங்களெல்லாரும் கஷ்டப்பட்டதுபோல நீயும் கஷ்டப் படவேண்டும். இக்கணமே ஒரு சாக்கை வாங்கிக்கொண்டு, வீடு வீடாய்ப் பிச்சை எடுத்து வரக்கடவாய்" என்முன். இவ்வாறு சந்நியாசி கூறிய கடுமொழிகளைக் கேட்ட லுத்தருக்கு எவ்வாறிருந்திருக்கும்.

"இன்மை இடும்பை யிரந்து தீர்வாம் என்னும்
வன்மையில் வன்பாட்டதில்",
"ஆவிற்கு நீர் என்றிரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்ததில்".

"என்று மேலோர் கூறியுள்ளதை நீதி சாஸ்திரத்தில் நான் படித்திருக்கி றேனே: வறுமை தீர்தற்கு நெறி இரவுத் தொழில் செய்வதல்லவே. தருமம் செய்வதாயினும் ஒருவன் தன் முயற்சியால் சம்பாதித்து, அத ஞல் வரும் ஊதியத்தைக்கொண்டு அறம் செய்யவேண்டும். இரந்து செய்யுமாறு எந்த நீதி நூலில் கூறப்பட்டுள்ளது. ஐயோ! நான் கீழ்ப் படியாவிடின் என்னை அகங்காரி என்று கூறுவார்களே. எதிர்ப்பேச் சில்லாத கீழ்ப்படிதலே மடத்தின் முதற்கடமை- ஆதலால் இதோ நான் பிச்சைக்குப் போகப் புறப்படுகின்றேன்" என்று கூறிக்கொண்டு கல்விமான்களில் மேன்மைபெற்ற கல்விமான், தாழ்ச்சியோடும் கீழ்ப் படிதலோடும் பிச்சைகேட்கப் புறப்படுகிருர். அவரை யறிந்த பலர் ஆச்சரியத்தோடும் இகழ்ச்சியோடும் நோக்குகின்றனர். வேறு சிலர் அவருடைய தாழ்ச்சிக்காகப் புகழ்ந்து அவரைப் பார்க்கின்றனர்.

எர்புர்த்திலிருந்த எட்டு மடங்களிலும் அகுஸ்தீன் சந்நியாச மடமே உத்தமமானது. ஏனெனில் ஆங்குள்ள சந்நியாசிகள் வேத புத் தகத்தை வாசிக்குமாறு ஏவப்பட்டார்கள். சிவப்பான தோலில் கட்டப் பட்ட வேதபுத்தகம் அவர்களுக்கு இரவலாகக் கிடைத்தது. லுத்தரோ அந்த வேதபுத்தகத்தைத் தமது கண்ணின் கருவிழியைப்போற் போற்றி அதை வாசித்து வந்தார். நவசந்நியாசத்தில் ஒரு வருடம் முடிந்த பின்னர் மடத்தின் ஐக்கியத்தில் லுத்தர் சந்ந்யாசியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

மடத்தில் 70 சகோதரர் கூடவிருக்க அவர் மடாதிபதிக்கு முன் பாக முழந்தாட்படியிட்டு "மார்ட்டீனுகிய நான், சர்வவல்லமையுள்ள பராபரனுக்கும், அர்ச்: கன்னிமரியம்மாளுக்கும், மடாதிபதியாகிய உமக்கும் முன்பாகக் கொடுக்கும் உறுதி வார்த்தைப்பாடாவது": "நான் எனது மரணபரியந்தம் தரித்திரனுகவும், விரத்தனுகவும், அர்ச்: அகுஸ் தீன் மட ஒழுங்குப்படி இருந்து வருவேனுகவும்" என்பதே.

இந்த வார்த்தைப்பாட்டை அவர் கொடுக்கவும் மடத்திலிருந்த சகோதரர் யாவரும் அவரை வாழ்த்தி இப்போது நீ பரிசுத்த ஞானஸ் நானம்பெற்ற மாசில்லாக்குழந்தையைப்போல் இருக்கிருய் என்றுர்கள்.

மாசில்லாக் குழந்தைப்போல் என்கிறார்களே, அப்படி இருக்கவேண்டியது கிரமந்தான். ஆனால் நான் அப்படியிருக்கிறேனா?



சந்நியாசப்பட்டம் பெறும்போது அவருக்கிருந்த மகிழ்ச்சியின் அளவை யாரால் அளவிடக்கூடும். "உலகத்தில் ஒருநாளும் பெறக்கூடாத பாரி

சுத்தமும், பரிபூரணமும், துர்எண்ணம், துர்ஆசை யென்பவைகளை மேற்கொள்ளும்படியான தேவனுடைய அருளும், நற்பிரியமும் பெற்றுக்கொண்ட நிச்சயத்தையுமடைவேன்" என்று உவகை யெய்தினர். உலகப்பற்றைத் தாம் விட்டு விடவேண்டுமென்று எத்துணைதூரம் முயன்றாலும், உலகம் அவரை விட்டதாகக் காணப்படவில்லை. உலகத்தின் பற்பல காரியாதிகள், பழைய சிநேகிதர், இலௌகீகக்கல்வி, ஆதியபந்தங்கள் அவரைப் பலமாய்ப் பிணித்திருக்கின்றன. பழைய துர்எண்ணங்களும் ஆசாபாசங்களும் உள்ளத்தில் குடி கொண்டிருக்கின்றன. பழைய வஸ்திரங்களைக்கழற்றி ஏழைகளுக்குக் கொடுத்து விட்டார் என்கிலும், இதயத்தின்கண் உறையும் பழைய சிந்தைகளையறவே கழித்து ஓட்டிவிடக் கூடவில்லை. மடத்தின் அறையிலும்கூட உள்ளத்திலுள்ள பழைய துர்ச்சிந்தையாகிய வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டேயிருக்கிறார். இதைப் போக்குவதற்காக அல்லும் பகலும் என் பாவமே! என் பாவமே!! என் பெரும் பாவமே!!! என்று ஓயாமல் புலம்பிக்கொண்டிருக்கிறார். சரீரத்தை யொடுக்கி வாட்டும் உபவாசத்தை வெகு கண்டிப்பாய் அனுசரித்தும் அவருடைய மனோபாரம் குறைந்தபாடில்லை; ஆறுதலுமில்லை. ஒரு வாரத்திற்கொரு முறை பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டுமென்கிற ஒழுங்கிருந்தபோதிலும், குருப்பட்டம் பெற்றவோர் குருசுவாமியாரிடம் இவர் பலதடவைகள் போய்ப் பாவசங்கீர்த்தனம் செய்வார். அந்தக் குருவானவரும் லுத்தருக்குத் திடநம்பிக்கை யுண்டாக்குமாறு தைரியம் கூறி வந்தார். அவர் கூறியவை வருமாறு: "கிறிஸ்துவின் பாடுகளும் புண்ணியங்களும், கன்னிமரியாளும் சகல அர்ச்சிய சிஷ்டரும் பட்டபாடுகளும் புண்ணியங்களும், இந்த மடத்தின் புண்ணியமும், உன் அறிக்கையின் மனத்தாழ்மையும், உன் இருதயத்தின் நொறுங்குண்ணுதலும், நீ கிறிஸ்துவினிமித்தம் செய்ததும், செய்யப்போகிறதுமான நற்கிரியைகளும்; ஆகிய இவைகள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து உனக்குப் பாவமன்னிப்பைச் சம்பாதிக்கவும், உன் புண்ணியத்தையும் கிருபையையும் அதிகரிப்பிக்கவும், கடைசியில் தக்க பலனாக நித்திய ஜீவனைக் கொடுக்கவும் கடவது" என்பதே. சொல்லப்பட்டதெல்லாம் பலனில்லாமல் போயிற்று. தனக்கிருக்கவேண்டிய அறிக்கையும், மனத்தாழ்மையும், நொறுங்குண்ணுதலும், புண்ணியம் சம்பாதிக்கும் நற்கிரியைகளும், தமக்கில்லையென்றும், தம்மிருதயம் பொல்லாததென்றும் நன்குணர்கின்றார். 'உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நாம் எரிவந்தமுள்ள தேவன்' என்கிற வார்த்தைகள் ஓயாமல் அவருடைய செவிகளில் தொனிக்கின்றன. "ஓ! என் பாவமே! என் பாவமே!! என் பெரும் பாவமே!!! கிருபையுள்ள தேவனை நான் எவ்வாறு கண்டடைவேன்" என்பதே அல்லும் பகலும் அவர் மனதை உபாதித்துக்கொண்டிருக்கின்றது.

1516-ம் வூ வித்தன்பெர்க் நகரத்துச் சர்வ கலாசாலையில் ஒரு வாலிப பண்டிதர் புதிய நம்பிக்கையும், இரட்சண்ய சந்தோஷமுமுடையவராய் ரோமருக்கு எழுதின நிருபத்தின்மேல் உபந்நியாசம் செய்ய,

மாணவரநேகர் அவர் முன்னிருந்து வெகு கவனமாயவருக்குச் செவி கொடுத்தனர். அநேக மாணவர் லைப்சிக் நகரத்துக்குச் சர்வ கலாசாலை



லுத்தர். மெலாங்தோன்.

யையும் விட்டு முன்பின் அறியாத இவ்விடத்தில் வந்து கூடுவதோர் ஆச்சரியமா? இவ்வாறு சவனமாய் கேட்டவர்களில் சிரேஷ்டமானவன் ஒரு சுவீடிஷ் வாலிப மாணுக்கனுகிய ஒலாவுஸ் பேத்ரி என்பவன். இவன் லைப்சிக் நகரத்துக் கலாசாலையைச் சேர்ந்தவனுதலினும் லுத்த ரது உபந்நியாசத்தின் கீர்த்தியும், இன்னுமதிகமாய் ஆத்மீக தேர்ச்சிய டைய வேண்டுமென்ற அவாவும் இவனை வித்தென்பேர்க் நகருக்குத் தள்ளி லுத்தரின் பாதத்தருகே கொண்டுபோய் நிறுத்தியது. ஆங்கவன் லுத்தரின் ஆத்தும அறிவு விர்த்தியடைந்த முக்கிய வருஷங்களில் தனது குருவண்டையிருந்தான். லுத்தரது ஆத்துமத்தில் உண்டான அனல் அவருடைய சீஷனின் ஆத்துமத்திலும் பற்றியது. ரோமருக்கு எழுதின நிருபம் விஸ்தரித்து முடிந்த பின்னர் கலாத்தியருக்கும் எபிரே யருக்கும் எழுதப்பட்ட நிருபங்கள் விஸ்தரிக்கப்பட்டபோது எல்லாம் புதி தாகவும், மகா எழுப்புதலாகவும் இருந்தது. ஏககாலத்தில் கோவிலி லும் லுத்தருடைய பிரசங்கங்களைக் கேட்டான். 1516-ம் 17-ம் வருஷங் களில் லுத்தர் பத்துக்கற்பனைகளையும், எழு தபசங்கீதங்களையும், கர்த் தருடைய ஜெபத்தையும் பற்றிப் பிரசங்கம் பண்ணினுர். ஆகவே, ஒலா வுஸ் சர்வகலாசாலையில் நடந்த உபந்நியாசங்களையும், சாதாரண ஜனங் களுக்குப் போதிவிக்கும் முறையையும் தன் குருவினிடம் கற்றுக் கொண்டான்.

சகல பரிசுத்தவான்களின் திருநாளுக்கு முந்தின நாள் சாயந் திரம் 95 நியாயங்கள் கோவில் வாசற்கதவில் ஒட்டப்பட்டபோதும் ஒலாவுஸ் தன் குருவண்டையிருந்தான். அந்த நியாயங்களை உடனே சொந்தப் பாஷைகளில் மொழிபெயர்த்து அவைகளை எங்கும் பரவச் செய்த மாணவரில் இவனொருவனன்றே. லுத்தரின் நியாயங்களுக்கு விரோதமாய் தெத்சில் என்பவன் தனது நியாயங்களை எழுதினபோது லுத்தருடைய மாணவர் அதைப் பகிரங்கமாய்ச் சுட்டெரித்தார்கள். 24 பிராயமுடைய அம்மாணவருக்கு அக்காலம் மிக்க விசேஷித்த ஓர் கால மாயிருந்தது. இவ்வாறிருந்தும் ஒலாவுஸ் தம் கல்வி ஆராய்ச்சியைச் சற் றும் கைவிடாது 1518-ம் ஞூ பெப்ருவரிமீ 10-ம் தேதி M. A. என் னும் பட்டம் பெற்றுர். எல்லாம் படித்து முடிந்து பட்டமும் பெற்று யிற்றே. ஆனுல் அவர் தம் பிறந்தகமாகிய சுவீடனுக்குத் திரும்பினுரா? அல்லவே அல்ல. தன் நேச குருவாகிய லுத்தரை இத்தகைய காலத் தில் எவ்வாறு விட்டகல்வார்? மேலும் மெலாங்தோன் என்பவர் 1518-ம் ஞூ ஆகஸ்டுமீ வித்தென்பேர்க்கு வந்து உபந்நியாசங்கள் செய்ய ஆரம் பித்தார். எல்லா மாணவரும் இவரது உபந்நியாசத்தைக் கேட்க விரும்பி னுர்கள். கடைசியாய் 1518-ம் ஞூ நவம்பர் மீ ஒலாவுஸ் சுவீடனுக்குத் திரும்பினுர்.

இங்கவர் ஸ்த்ரெங்னேஸ் (Strengnaes) என்னுமிடத்தில் ஆலயத்தைச் சார்ந்த ஓர் பாடசாலையில் உபாத்தியாயராகித் தம் மாண வருக்கு வெகு ஊக்கத்தோடு தாம் வித்தென்பேர்க்கில் கற்ற விஷயங்

களைப் போதித்து வந்தார். அநேக வாலிப குருக்களும் இவருடைய போதகத்தைக் கவனித்துக் கேட்டார்கள். புதிய சித்தாந்தம் மெதுவாய்ப் பரவினது.

ஒருநாள் சுவீடன் தேசத்தரசனுகிய குஸ்தாவு வாஸா என்பவன் இப்புதியவிஷயங்களைப் பற்றிக்கேள்விப்பட்டு அவைகளைப்பற்றி மேன்மேலும் அறியவுன்னி ஓலாவுஸ் என்பவரைத் தம்மிடமழைப்பித்தான்.

தைரியமும் நேர்மையுமுள்ளவர்களும், கொடுங்கோலர் யாவருக்கும் எதிர் நிற்பவர்களுமாகிய இவ்விரு வீரர்களும் சந்தித்த நாள் மிக விசேஷித்தது. சுயாதீனத்தையும், சந்தோஷத்தையும் தங்கள் தேசத்திற்கு அளிக்கவேண்டுமென்பதே அவர்களிருபேருடைய ஒன்றுன இலக்கு என்பதை உணர்ந்தார்கள். இவ்வாறவர்கள் தங்கள் பொதுவான வேலையாகிய சுவீடன் தேசத்துத் திருச்சபையின் சீர்திருத்தலைத் துவக்கினர்கள்.

தங்கள் தேசத்தையும், திருச்சபையையும் பாப்புவின்கையினின்று விடுதலையாக்கித் தங்கள் தேசத்திற்குச் சுயாதீனத்தை யளிக்கவேண்டுமென்பது அவர்களின் நோக்கம். தேவ வசனம் சுத்தமும், தெளிவுமாய்ப் பிரசங்கிக்கப்படவேண்டும். ரோமான் மார்க்கத் தப்புப் போதகங்கள் நீங்கவேண்டும். சந்நியாச மடங்களில் தங்கள் நாட்களை வீணுய்ச் செலவிடும் ஆண்களும், பெண்களும் மடத்தை விட்டகன்று பிறருக்கு உபயோகமான வேலைகள் செய்யவேண்டும். தேசத்திற்குத் திருச்சபை சேர்த்து வைத்தபொக்கிஷம் தேவையாயிருந்தது. டேனிஷ்காரரிடமிருந்து தேசத்தை விடுதலையாக்க அதிகம் செலவானது. இப்போது எல்லாம் புதுப்பித்துக் கட்டப்பட வேண்டியதாயிருந்தது.

குஸ்தாவு அரசன் சந்தோஷத்தோடு ஓலாவுசைத் தம் உடன் வேலைக்காரராயிருக்கும்படி யழைத்து "இனி நீர் இச்சிறிய பட்டணமாகிய ஸ்த்ரெங்னேஸிலிருக்க வேண்டியதில்லை. என்னேடு தலைமை நகருக்கு வந்து ஸ்தாக்கோமிலிருக்கும் சிரேஷ்ட ஆலயத்தின் பிரசங்க மேடையினின்று சுவீடிஷ்காரருக்குப் பராபரனுடைய சுத்தவசனத்தைப் போதிவியும்" என்றுன்.

இப்படியாக அரசனழைக்க ஓலாவுஸ் சந்தோஷத்தோடு அவருக்குப் பின் சென்றுர். இப்போதவர் அநேகரிடத்தில் பேசக்கூடும். அவர் சொல் எங்கும் மதிக்கப்படவுங்கூடும்

ஓலாவுஸ் தாம் ஸ்தாக்கோமில் செலவிட்ட அந்த முதல் முக்கிய நாளை ஒருபோதும் மறந்தாரில்லை.

சுவீடன் தேசத்தாருக்கவர் தம் பிள்ளைகளோடு அன்பாய்ப் பேசி அவர்களுக்கு நற்புத்தி புகட்டுமோர் தகப்பனைப் போலிருந்தார். அவர் ரோமான மார்க்கக் குருக்களைப்போல் சாதாரண சனங்களுக்கு யாதொரு நன்மையும், ஆறுதலும் உண்டாகாவண்ணம் லத்தீன் பாஷையில் பேசாமல் யாவரும் நன்கு கேட்டு அறிந்துகொள்ளுமாறு தம் சொந்தப் பாஷையில் வெகு எளிய நடையில் உள்ளான மனதோடு போதித்து வந்தார். அவ்வாறே ஜனங்கள் யாவரும் அவருக்குக் கவனமாய்ச் செவி

கொடுத்து அவர் சொன்ன யாவற்றையும் கிரகித்துக்கொண்டார்கள். சகலரும் கர்த்தரின் சமுகத்தில் சுயாதீனமுள்ளவரென்றும், கிறிஸ்துவையன்றி வேறெவனும் பராபரனிடத்தேகுவதற்கு மத்தியஸ்தனல்லவென்றும், அறிக்கையோடும் ஜெபத்தோடும் மனுஷ மத்தியஸ்தமின்றித் தேவனிடத்தில் செல்லலாமென்றும் போதித்தார்.

அநேகர் இச்சூட்சும சமாசாரத்தைக் கேள்விப்பட்டு ஆனந்தங்கொண்டனர். ஆனால் சிலரோவெனில் இதென்ன புதிய போதனை? அப்படியானால் பாப்புவை நீக்கிப் போடுகிறதா? நமது முன்னோர்கள் வாழையடி வாழையாய் வணங்கிவந்த பரிசுத்தவான்களை இனித் தொழ வேண்டாமா? இது அஞ்ஞான மார்க்கத்திலும் கேடுகெட்ட ஓர் மார்க்கமாயிருக்கிறதே என்று சொல்லி சீற்றங்கொண்டார்கள். அன்னவரனைவரும் ரோமான் மார்க்கத்தைச் சேர்ந்தவர்.

நாட் செல்லச் செல்ல இக்குரோதம் மேலிட்டது. ஒருநாள் ஓலாவுஸ் பிரசங்கமேடையேறும்போது அவர்மேல் கல்லெறிகிறார்கள். தம்மேல் கல்மாரி பெய்வதைக் காணும்போது அவர் முகம் வெளுக்கிறது. ஒன்றும் செய்யாது அமைதியாய் நின்று பேசுகிறார். கற்கள் எத்தனை வேகமாய் வருகிறதோ அத்தனையாயவர் வார்த்தைகள் பலப்படுகின்றன. நாளடைவில் அவரது வார்த்தைகள் ஜனங்களின் மனச்சாட்சியின் ஆழத்திலே பதிகின்றன.

மெதுவாகக் கிரியை நடக்கிறது. அவருடைய சொந்தத் தாயாரே அவரைப் பின்பற்றுகிறதில்லை. அவரொருக்கால் தன் தாயை நோக்கி, "அம்மா, நீங்கள் லத்தீன் ஜெபங்களை நேசிக்கிறதற்குத் தக்கதாக அவைகளைக் கிரகித்துக்கொள்கிறீர்களா?" என்று கேட்க அதற்கவள் "இல்லை, ஆனால் அவைகள் கர்த்தருக்குப் பிரியமானவையென்று நான் அறிவேன். ஆகையால் எனக்கு அவைகளின்மேல் திருப்தியுண்டு" என்று மறுமொழி பகர்ந்தாள்.

சுவீடிஷ்காரர் பக்திவிநயமுள்ளவராதலினும் இப்புதிய உபதேசம் அவர்களுக்கு வெகு கஷ்டமாயிருந்தது. தங்கள் முற்பிதாக்கள் வணங்கிவந்த பரிசுத்தவான்கள் மேலும் அவர்கள் வாஞ்சித்த லத்தீன் பாஷைகள் மேலும் மிக உறுதியான நம்பிக்கை வைத்தார்கள்.

ஆயினும் ஓலாவுஸ் பேத்ரி மிக வல்லமையாய்ப் போராடினார். ரோமான் மார்க்க கொள்கையோடு சம்பந்தமுள்ள கெட்ட ஆவிகள் மேலுள்ள நம்பிக்கையையும், மூடபக்தியையும், அசுத்த ஆவி தங்கள் சரீரத்தையும், ஆத்துமாவையும் பயமுறுத்துகிறதென்ற தப்பான எண்ணத்தையும் ஜனங்களிடத்தினின்று நீக்க விரும்பினதுமன்றிக் கடவுள் தங்களண்டை எப்போதுமிருக்கிறார், யாவரும் சொந்த சாதாரண ஜெபத்தினால் அவரை அணுகலாமென்பதை அவர்களுக்கு உணர்த்தவும் விரும்பினார்.

தம் போதகத்தை யாவரும் நன்கறியுமாறு புதியேற்பாட்டைச் சுவிடிஷ் பாஷையில் மொழிபெயர்த்தார். ஓலாவுஸ் தம் தேசத்தவர்க்கு அளித்த கொடைகளில் இதுவே பிரதான மென்னலாம். இப்போது

யாவரும் பரிசுத்த வேதாகமத்தின் முக்கிய பாகத்தை வாசித்து அதிலடங்கிய ஆறுதலையும் சந்தோஷத்தையும் கண்டு பிடிக்கக் கூடும். அங்கு தேவனையும், கிறிஸ்துவையும் பற்றிய தெளிவும் இலகுவுமான வார்த்தைகள் காணப்பட்டன. இவைகளையெல்லாம் பார்க்க ஜனங்களுக்கு எத்தனை ஆச்சரியம்!

ஆனால் பாப்புவைப்பற்றியாவது, பரிசுத்தவான்களின் வணக்கத்தைப்பற்றியாவது யாதொன்றும் அங்கு சொல்லப்படாததால் ரோமான் மார்க்கத்தார் மூர்க்க வெறிகொண்டு ஒலாவுசைப் பயங்கரமாய் எதிர்த்தனர். ஆனால் அவர் அமைதியோடும் தைரியத்தோடும் தம்மைக் காத்துக்கொண்டார்.

அவர் அநேக பிரயோஜனமான பிரபந்தங்களை எழுதினதினால் புத்தகங்களை வாசிக்கவும் அவைகளிலடங்கியுள்ள விஷயங்களை அறியவும் கூடிய வழக்கத்தை சுவீடிஷ்காரருக்குள் உண்டுபண்ணினார். இனி மதத்தைப்பற்றிய முக்கிய விஷயங்கள் பேராசைகொண்ட குருக்களால் மறைக்கப்படாமல் வெளியாக்கப்பட்டன.

கடைசியாய் முழுச் சத்திய வேதாகமும் மொழிபெயர்க்கப்பட்டது. ஒலாவுசின் சகோதரரும் சுவீடன் தேசத்து முதல் பிரதம அத்தியட்சருமாகிய லொரெந்தியுஸ் பேத்ரி (Laurentius Petri) ஒலாவுசுக்கு நண்பரும் உடன் வேலையாளருமாயிருந்தார். ஒலாவுஸ் புத்தகங்கள் மாத்திரமல்ல, அநேக பாடல்களையும் எழுதினார். அவரெழுதிய சுவீடன் தேசத்துச் சரித்திரத்தில் தமது தேசாபிமானத்தையும், புத்தகம் எழுதும் திறமையையும் வெளியிடுகிறார்.

இவ்வாறு பாப்புவையும் அவருடைய அநுசாரிகளையும் மேற்கொள்வதற்கான முடிவான போராட்டத்திற்குச் சீக்கிரமாய் காலம் நெருங்கி வந்தது. சுவீடன் தேசத்தரசனும் சாமான்ய ஜனங்களின் ஒரு பெரும் பாகமும் ஒலாவுசோடு சேர்ந்தார்கள். ஒலாவுஸ் சந்நியாச மடங்களைத் திறந்து ஆங்குள்ளவருக்கு உலகத்திற்குப் பிரயோஜனமான வேலைகளைக் கற்பிக்க விரும்பினார். முக்கியமாய்ச் சுத்த சுவிசேஷம் சுவீடன் தேசத்தில் பிரசங்கிக்கப்பட வேண்டுமென்று ஆசித்தார். இப் பெரிய வேலையில் ஜனங்கள் யாவரும் தம்மோடு சேரவேண்டுமென்பது அவருடைய எண்ணம்.

இப்படியாகச் சீர்திருத்தக்காரனாகிய அரசனும், ஜனங்களின் பிரதிநிதிகளும் 1527-ம் ஆு வஸ்த்ராஸ் என்னும் நகரத்து ராஜ்ஜிய சங்கத்தில் வந்து கூடினர். ஒலாவுஸ் தாம் முடிவான போராட்டத்திற்கு முன்பாக நிற்கிறாரென்பதை உணர்ந்து ஜனங்களுக்கு நன்மையுண்டாகும் பொருட்டும், தம் வார்த்தைகள் பயன்படுமாறும் கர்த்தரை நோக்கி ஜெபித்தார்.

போராட்டம் பலத்தது. அத்தியட்சர்மாரும், பிரபுக்களும் புதிய எண்ணங்களை ஏற்றுக்கொள்ளமாட்டோமென்று மறுத்தனர். அவர்கள் சற்றேனும் இடங்கொடாததைக் கண்டு அரசன் கோபத்தோடு மந்திர ஆலோசனைச் சபையினின்று நீங்க சங்கத்தாரனைவரும் இனி இணங்கத்

தான் வேண்டுமென்று அறிந்து தேவனுடைய வசனம் சுத்தமாகவும், தெளிவாகவும் பிரசங்கிக்கப்படவேண்டுமென்றும், திருச்சபை பாப்புவின் கையினின்று விடுதலையாக்கப்படவேண்டுமென்றும் ஆலோசனைச் சங்கத்தில் தீர்மானித்தார்கள்.

ஒலாவுசின் எண்ணம் சித்திபெற்றது. தமது போராட்டத்தின் பலனினால் உண்டான ஆசீர்வாதத்தைத் தமது ஜீவிய காலத்திலேயே கண்டார். சுவீடன் தேசத்தார் மார்க்க விடுதலை பெற்றனர். தேவாராதனையில் தங்கள் சொந்த பாஷையிலேயே பாடல்கள் பாடி ஜெபித்தனர்.

ஆனால் இத்தோடவர் வேலை முடியவில்லை. தம் தேசத்தை முன்னுக்குக் கொண்டுவரும் விஷயத்தில் முன்னிருந்ததைப் பார்க்கிலும் அதிகமாய்த் தம் தேசத்தரசனின் உடன் வேலையாளரானார். இருவரும் திடச்சித்தமும் தைரியமுமுள்ளவர்களாயிருந்தார்கள். சில சமயங்களில் ஒலாவுஸ் தம் எண்ணம் அரசனுடைய சித்தத்திற்கு ஒவ்வாதென்று அறிந்தும் அவைகளைத் தைரியமாய் அரசனிடத்தில் வெளியிடுகிறார். இருவருக்கும் தங்கள் தேசத்திற்குச் சந்தோஷத்தை விளைவிக்க வேண்டுமென்ற ஒரு நோக்கமிருந்த போதிலும் அதை நிறைவேற்றும் விஷயத்தில் அவர்கள் கையாடின வகை வேறுபடுகின்றன.

கடைசியாய், குஸ்தாவு அரசனுக்கு ஒலாவுஸின் உண்மையின் மேல் சந்தேகமுண்டாகிறது. அரசன் தமக்கு விரோதமாய் நேரிடும் ஒரு சதியாலோசனையைப் பற்றித் தம் நண்பன் அறிந்தும், அதைத் தமக்கு வெளியிடவில்லை யென்று நினைத்துக் கொள்கிறான். ஒலாவுசுக்கு இச்செய்தி பாவ அறிக்கைகளைக் கேட்பதினால் தெரிய வந்தது. ஒரு குரு பாவசங்கீர்த்தனத்தில் அறிக்கை கேட்ட சங்கதிகளை எவருக்கும் வெளியிடக் கூடாதாகையால் அரசனுக்கு அவரதை அறிவிக்கவில்லை. அரசனோ தம் நண்பன் இதை அறிந்தும் தமக்கு அதைப்பற்றிச் சொல்லவில்லையே என்று அவர்மேல் துவேஷங்கொண்டு அவரைக் கச்சேரிக்கு முன் கொண்டுபோய் நிறுத்துகிறான். எல்லாரும் ஒலாவுசின் கெதி என்னவாகுமோவென்று பயப்படுகிறார்கள். ஒலாவுஸ் மாத்திரம் அமைதியாயிருக்கிறார். தாம் நிரபராதி என்பதை அவர் அறிவார். நியாயத் தீர்ப்பின் நாளன்று அவர் ஒரு ராஜ துரோகியாய் எண்ணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பெற்றார்.

ஆனால் இப்போது அரசன் சற்று யோசித்துத் தீர்ப்பை நிறைவேற்றப் பயப்படுகிறான். சுவீடன் தேசத்துச் சீர்திருத்தக்காரரைக் கொல்வது இலகுவல்ல. அரசன் அவரைக் கொல்ல விரும்பாமல் பயமுறுத்த எண்ணியதால் அவர் இக்கொடிய தண்டனை விதிக்கப்பெற்றும் சற்றுங் கலங்காததைக் கண்டு அவரை விடுதலை பண்ணுகிறான்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட அன்றிரவு மறுநாள் காலையில் தான் மரிக்கவேண்டுமென்று ஒலாவுஸ் அறிந்தும், சற்றேனுங் கலங்கவில்லை. பிறகென்கிலும் அவர் கலங்காமல் அமைதியாகவேயிருந்தார். இப்போது விருத்தாப்பியராயிருந்த படியால் முன்போல் உழைக்கக் கூடவில்லை. ஆனால் அவரைக்கொண்டு தேவன் சுவீடன் தேசத்தில்

கொளுத்தின தீபம் நன்ருய் எரிவதினுல் முழுச்சனமும் சுத்த சுவி சேஷத்தைப் பெற்று தங்கள் பரம பிதாவண்டை மனுஷ மத்தியஸ்த மின்றி நேரே செல்கிருர்களென்பதற்காக ஆனந்தங்கொண்டார்.

## தேடுகிறவன் கண்டடைவான்.

துன்பம் உச்சம் எய்தும்போது சகாயம் சமீபமாய் வந்தடையும். அருட் கடலாகிய தேவன் தமதடியார்களுக்கு உதவிபுரியத் திருவருள் கொண்டால் அதற்குத் தகுந்தவரைத் தெரிந்துகொண்டு அன்னவர் வாயிலாகத் தமது ஒத்தாசையை அனுப்புவதே அவருடைய அளவில்லாத ஞானத்திற்கழகு. அங்ஙனம் நமது லுத்தர் சாஸ்திரியாருக்கு வற்ற காலத்தில் உதவிபுரியுமாறு, தேவனுல் தெரிந்து கொள்ளப்பட்டவரும் ஒத்தாசை செய்தவரும், அகுஸ்தீனர் வகுப்பின் பல சந்நியாச மடங்களை மேல் விசாரணை செய்து வந்த ஜான் ஸ்தௌபித்ஸ் என்பவர்.

மேன்மக்கள் மேன்மக்களே என்ற ஆன்ருேர் வாக்கைப்போல், ஸ்தௌபித்ஸ் சாஸ்திரியார் இயற்கையில் மேன்மையான குலத்துதித்த மேன்மகனுனபடியால், நற்குண நற்செய்கைகள் நல்லொழுக்கம், வாய்மை அகத்தூய்மை தெய்வ பக்தி பிறநேசம் முதலிய யாவும் நன்கமையப்பெற்றவர். 'அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்.' ஆகையால் அரசனுகிய சக்சோனிய நாட்டு நியமனப் பிரபு பிரதரிக்ஞானி, அவரை மகா கண்ணியமாய் மதித்து நடத்தினுர். 'அகத்தினழகு முகத்தில் தோன்றும்.' ஆதலால், அன்றலர்ந்த செந்தாமரைபோன்ற அவரது முகமே, அவருடைய வுள்ளக் கிடக்கையைக் காட்டும் ஸ்படிகக் கண்ணுடி என்றியம்பலாம். புறம்பானதும் உள்ளானதுமான பாடுகளில் சோதிக்கப்பட்ட மெய்க் கிறிஸ்தவ லட்சணங்கள் பொருந்தப் பெற்றவராய் இருந்தபடியால், போராடுகிற மார்த்தீன் சகோதரனுக்குதவி செய்யத் தக்கவரானுர்.

சக்சோனிய நாட்டு அகுஸ்தீனர் மடங்கள் அனைத்தையும் மேல் விசாரணை செய்து வந்தவராகிய ஸ்தௌபித்ஸ் ஓர் நாள், எர்புர்த்துக்கு விசாரணைக்காகச் சென்று எவனும் அறியக்கூடாத பைத்தியம் பிடித்திருந்த லுத்தர் சாஸ்திரியாரிடத்தில் சென்று அவரைப் பாவசங்கீர்த்தனத்துக்கு அழைத்தார். அழைக்கப்பட்டவர் வந்தபின்னர் கீழ் வருமாறு வினவிக் கூறினுர். "ஏன் இவ்வாறுன்னை உபாதிக்கிருய்? உன்னையே நீ சோதித்தறியாது பரிபூரணத்தையடைய விரும்புகிருய், பிரமாண்டமான ஒரு வரையைத் தாண்டுவது எப்படி அசாத்தியமோ, அதுபோலப் பரிபூரணத்தை யடைவது அசாத்தியமென வுனக்குத் தோன்றுகின்றது. நியாயப்பிரமாணமோ தன்னைத் தாண்டவேண்டுமென்கிறது. மனிதன் தான் தாண்டிவிடக்கூடுமெனப் பெருமையாய்க் கூறுகிறுன். அங்ஙனம் கடக்க இயலாதென்று மனச்சாட்சி கடிந்துரைக்கின்றது. அவநம்பிக்கையானது ஒன்றுமியலாதெனவுணர்ந்து, அவையெல்லாவற்றையும் விட்டுவிடுகிறேன் என்கிறது. எவனும் தன்னைத்தான் பரிசுத்தனும் பக்தனும் ஆக்கமுடியாது. ஒவ்வொரு

வனுக்கும் ஒத்தாசை செய்யக்கூடியவர் ஒரே ஒருவரிருக்கிறார். அவரா லன்றி உன்னை நீயே பரிசுத்தனுக்க முடியாது; அவர் இயேசுகிறிஸ்து என்பவரே. தமது ஒன்ருன குமாரனுகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம், நமது பரம பிதா நமக்குப் பாராட்டியிருக்கும் மட்டற்ற நன்மைகளை தியானித்துக்கொள். "பொன்னுல் பிரயோசனம் பொன்படைத்தார்க் குண்டு, பொன்படைத்தார் தன்னுற் பிரயோசனம் பொன்னுக்கங்கே துண்டு"? அதுபோல கிறிஸ்து தம்மைத்தாமே நமக்காகத் தந்து நம்மை மீட்டுக்கொண்டாரே, நம்மைக்கொண்டு அவருக்கென்ன பயன்? பிதா வாகிய சருவேஸ்பரன் தம்முடைய சுத்தக் கிருபையினுலே நம்மை இரட்சிப்பதற்கு தமது ஏக சுதனை நமக்கு இரட்சகராக அனுப்பினுரே யல்லாது, நமது புண்ணியத்திலுலாவது பாத்திரத்திலுலாவது அல்ல வே. இது விஷயங்களைச் சற்று சிந்தித்துப் பார். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திவ்ய திருப்பாதங்களைத் தவிர வேறு புகலிட மில்லை யென்பது கரதலாமலகம். அவருடைய கமல பாதங்களை உறுதி யாகப் பிடித்தால் நித்தியமான ஆறுதலடையலாம் என்பது நிச்சயம்" என்ருர்.

"உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கண் இடுக்கண் களை வதா நட்பு" என்ற நீதி வாக்கியப்படி ஸ்தௌபித்ஸ் நல்ல சமாரியனைப் போல, லூத்தரின் மனச்சாட்சியின் பெருங் காயங்களில் ஞான பிரசங் கங்களடங்கிய ஆறுதலின் எண்ணெயை வார்த்துக் காயங்களை ஆற்றினுர்.

ஸ்தௌபித்ஸ் சாஸ்திரியாரும் லூத்தரும் உட்கார்ந்திருந்த ஓர் தினத்தில், தந்தையடைவான அன்போடு, லூத்தரைப்பார்த்து, அவரு டைய மனோ வேதனையைக் குறிப்பாகவுணர்ந்து, "மார்த்தீன் சகோதர னே நீ மறுபடியும் சிந்தாகுலக்கடலில் மூழ்கிச் சிந்தை நொந்திருக்கிரு யே" என்ருர். லூத்தர் பிரத்தியுத்தாரமாக, "சஞ்சலம் நிறைந்த இத் தாரணியில் நான் சந்தோஷமாய் இருப்பது எங்ஙனம்" என்ருர்.

மீண்டும் ஸ்தௌபித்ஸ் லூத்தரை நோக்கி "சகோதரனே இவையெல்லாமிரகசியமான காரியங்கள். இப்போது வெளிப்படை யாக ஒன்றும் விளங்காது; ஆகிலும் இத்தகைய சோதனைகள் உனக்குப் பிரயோசனமும் அவசியமுமானவைகள். ஒன்றுமில்லாமையினின்று உலகங்கள் யாவையும் உண்டு பண்ணின உன்னத பராபரன் உன்னைக் கொண்டு உலகத்திற்குப் பிரயோசனமான பெரிய காரியங்களை நடப் பிக்கத் திருவுளங்கொண்டிருக்கின்ருர். பொற்கொல்லர் பொன்னைப் புடமிடப் புடமிடப் பொன்னுனது எவ்வாறு மாற்றுயர்கின்றதோ அவ்வாறே நீயும் அவர் திருவுள்ளக் கருத்தை நிறைவேற்றத் தகுதி யுள்ளவனுய் விட்டாயெனத்தாம் அறிகின்றமட்டும் உன்னைப் புடமிட்டுப் பார்ப்பார். இவ்விதச் சோதனைகளின் அப்பியாசங்கள் உன்னை ஏற்ற கருவியாக்கித் திடப்படுத்தும்" என்ருர்.

ஸ்தௌபித்ஸ் சாஸ்திரியார் ஆறுதலான வார்த்தைகளால் மட்டு மல்லாது, லூத்தருக்கு ஒத்தாசை செய்யவும் பார்த்தார். அதாவது எர்

புர்த்திலிருந்த லூத்தரை வேறு விதமாய்ப் பணிபுரியுமாறு வித்தன்பர்க்குக்கு மாற்றினார்.

கீழ்க்கண்ட படம் ஸ்தௌபித்ஸ் என்பவரைக் காட்டுகின்றது. அதன் பக்கத்திலிருப்பது எர்புர்த் மடத்தில் லூத்தர் வசித்த இடத்தைக் காட்டுகின்றது.



அக்காலத்தில் வித்தன்பர்க் அற்பக் கீர்த்தியுமற்ற ஓர் சிறிய கிராமம். நியமனப் பிரபுவின் கோட்டையும், புதிதாய்க் கட்டப்பட்ட கோட்டையாலயமும் ஆண்டிருந்தும், ஏனைய வீடுகளெல்லாம் சிறிய மரக்குடிசைகள் போன்றிருந்தமையால் அதனைப் பட்டணமென்றியம்புதற்கிலக்கணம் ஒரு சிறிதுமின்று. 'நாசரேத்தில் நன்மையுண்டோ' என்று சத்திய வேதத்தில் கூறப்பட்டப்படி, 'வித்தன்பர்க்கில் நன்மையுண்டோ' வென்றியம்பும்பான்மையிலிருந்தது.



அங்ஙனமிருந்தும், அவ்வூரிலிருந்து நன்மையுண்டாகக்கூடிய நற்காலம் புதிதாய்த் துவக்க நேரிட்டது. புனலின் பசையற்று, அகோர அக்கினிமயமாய் விளங்கி, இதோ பாலைவனம் என்று காட்டுபவர் விரலையும் தீய்க்கும் தன்மை வாய்ந்த ஓர் வனாந்தரத்தின் கண், தெள்ளிய அலைகளைச் சுருட்டும் தீம்புனல் நதிகள் அபரிமிதமாய் எங்கணும் பாய்ந்து பாலையைச் செழிப்பித்தால் எவ்வித வனப்புகள் அமைந்து விளங்குமோ, அஃதே போல் வித்தன்பர்க் என்ற கல்விப்பசையற்ற வனாந்தரத்தில், கல்வி யென்னும் ஜீவ தண்ணீர் பாய்ந்து செழிப்பித்து அதனையோரின்பப் பரதீசாக்கிற்று.

பதினாறும் நூற்றாண்டின் துவக்கத்தில், சக்சோனிய நாட்டில் கல்லூரி என்பதே கிடையாது. 'கல்வியே அறவழிகாட்டும் ஆண்மகன்' என்றறிந்த பிரதரிக்ஞானி, வித்தன்பர்க்கில் ஒரு கல்லூரியை ஸ்தாபிக்க முயன்றார். 1502-ம் ஜூலத்தில் ஆரம்பித்து 1505-ம் வருடத்தில், கொள்ளை நோயின் கொடுமையால் மீண்டும் அந்தக்கல்லூரி தொடர்ந்து நடை பெறக்கூடாது க்ஷீணதசையடைந்தது. ஆண்டு கலை பயின்ற ஏழை மாணவர் என் செய்குவர். தாங்கள் கற்கும் கல்விக்கிடையூறெய்தாவண்ணம் கல்லூரியிருக்கும் வேறிடங்கட்கேக வேண்

டியதவசியமன்றோ? ஆங்கு கலைபயின்ற மாணவர் கூட்டத்தை அவ் விடம் விட்டகலாது நிறுத்துவதற் குபாயமென்ன? இரும்பைக் காந்தம் இயற்கையில் எவ்வாறு இழுத்துக் கொள்ளுகின்றதோ அவ்வாறே மாணவர் மனோநிலையை ஆக்ரிஷித்துக்கொள்ளும் இயல்புடைய ஓராசிரியனிருந்தால், அன்னவர் யாண்டுமேகாது ஆங்குத் தங்குவர். நல்லாசிரியரிலக்கணம் வாய்ந்தவர் ஒருவரைத் தேடிக் கொணரவேண்டும் என்கில்,

"குலன் அருள், தெய்வங் கொள்கை, மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம், மலை, நிறை கோல், மலர் நிகர் மாட்சியும்
உலகியலறிவோடுயர் குணம் இனையவும்
அமைபவன் நூலுரையாசிரியன்னே"

என்றிலக்கணம் கூறப்பட்டிருத்தலின் இவ்விலக்கணத்திற்குப் பொருத்தமுடையவாசிரியர் யாவரென்று ஸ்தௌபித்ஸ் ஆலோசித்தார். அவ்வாறாலோசித்துப் பார்த்ததில், எர்புர்த் மடத்திலிருக்கிற துக்கம் நிறைந்த அந்த வாலிபப் பண்டிதர் மார்த்தீனே மேற்கூறிய விலக்கணத்திற்குத் தகுந்த இலட்சியம் எனக் கண்டுணர்ந்தார்.

1508-ம் ஆண்டிறுதியில் மார்த்தீன் சந்நியாசியார் வித்தன்பர்க்குக்கு மாற்றப்பட்டார். ஆங்கு அகுஸ்தீனர் மடமிருந்ததால் அம்மடத்திலேயே சந்நியாசியாகவிருந்துகொண்டு, நாடோறும் காலைவேளையில் கல்லூரி மாணவர்க்கு ஓர் பாடம் போதித்துக்கொண்டுவந்தார். 1509-ம் ஆண்டு துவக்கத்தி லோர்நாள் கருங்கோபுரம் என்னும் பெயர் விளங்கிய மடத்தின் புத்தகசாலையில் உட்கார்ந்து, பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் எழுதின ரோமர் நிருபத்தின் முதலாம் அதிகாரத்தைக் குறித்துத் தியானித்துக் கொண்டிருந்தார். அதிலவர் வாசித்திருந்தது 17 வாக்கியங்கள். அப்போது திடீரென்று அவராத்துமாவில் ஓரொளி பிரகாசித்தது போன்றிருந்தது.

இதற்கு முன்னர் கண்டிராத வோர் சங்கதியைக் கண்டார் அஃதென்னையெனின், பிள்ளைப்பத்தியான விசுவாசத்தில் பராபரனின் பிதாவடைவான கரத்தில் நம்மை யொப்புவிப்பதும், இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் அவரிடம் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வதுமே, இரட்சிப்பின் மார்க்கமென்பது கண்டார்.

லுத்தர் இம்மார்க்கத்தைக் கண்டதுமன்றி அதிற் சென்று சமாதானத்தையும் பெற்றார். தாம் அனுபவித்த அகோர ஆத்துமப்பாடுகளைக் குறித்துப் பின்னர் நினைத்தபோதெல்லாம் அவர் கூறினது என்னவென்றால் "நாவாலுரைக்கக் கூடாததும் எழுதுகோல் முனையால் எழுதக்கூடாததுமான அத்தனை அகோர நரகவேதனைகளைச் சகித்தேன். அவற்றை உண்மையாய் அனுபவித்தவனல்லாது வேறெவனும் நம்பக் கூடாது" என்றார்.

102-ம் ஞானப்பாட்டில், பேயால் கட்டுண்டு சாவுக்கு என்ற சரணத்தையும், ஆனால் அநாதியாய்ப் பிதா என்ற சரணத்தையும் அவர் அடிக்கடி பாடித் தம்மைத் தேற்றிக்கொள்வார்.

## பரிசுத்த ரோமாபுரி.

1 சென்னாகம் நீர்பொழியத் தேன்பொழியும் 2 புன்னாகந் திருவிற்பூப்பக்
3 கன்னாகம் நீருமிழக் 4 கவிநாகம் வெருண்டஞ்சக்கல்லூரேந்த
5 கொன்னாக மொப்பமணி கொழித்தருவிபாய்ந்தோடக் கொழுஞ்செவ்வாய்ப்
6 பொன்னாக மொட்பவனர் புகழித்தாலியநாட்டுப் பொலிவிதன்றே. [பப்

என்று நாவலர்விதத்தோதும் வளங்களமைந்த இத்தாலிய நாட்டின் தலை நகரும், இல்லறந்துறவற மென்னப்படுமிரண்டறங்களும், அருட்செல்வம், பொருட்செல்வம், கல்விச்செல்வமாகிய மூவகைச் செல்வங்களும், இடத்தாலும், உண்டியாலும், உடையாலும், அறத்தாலும், கல்வியாலும், பொருளாலும், துணைவராலும், வரும் ஏழு வகை இன்பங்களும், சிறந்து விளங்கா நின்றதுமான, நகருக்கு நமது மார்ட்டீன் சந்நியாசியார் 1510-ம் ஞூ நவம்பர் மீ நூர்ன்பெர்க்குப் பட்டணத்தானை ஆண்டென் கிரேஸ் என்ற அகஸ்தீன் சந்நியாசியோடு புறப்பட்டுப்போனார்.

நாகம் விண், குரங்கு, புன்னை நாற்மூசு மலைபாம்பியானை. என்ற சூடாமணி 11-வது நிகண்டு நோக்கத்தக்கது.

இம்மா நகரத்தின் மாட்சி இம்மட்டோ? பரிசுத்த திரித்துவத்தின் இரண்டாமாள் பூலோகத்தில் மனுடனாக அவதரித்து வேதமாக விதித்த தேவநூலெல்லாம், தனக்கு ஒரு திருவிளக்காக ஏந்திக்கொண்டு, தானும் மற்றத் திசைகளுக்கெல்லாம் அருள் பொருந்திய விளக்காய்த் தோன்றி பூவுலகமெல்லாம் கிறிஸ்துவின் தெய்வீக ஞான ஒளி வீசும் ஒப்பற்ற சந்திரவட்டக் குடையால் கிறிஸ்தவர்குழாங்களை நிழற்றும் இணையற்ற மேன்மை வாய்ந்த தலைநகர். திருச்சபையின் வித்துக்களாகிய அநேக வேதசாட்சிகளின் உடல்களையும் அப்போஸ்தலரில், மேன்மையும் தலைமையும் வகித்திருந்தவராகிய பேதுரு அப்போஸ்தலனின் பரிசுத்த சரீரத்தையும் தன்வயிற்றில் அடக்கியிருக்கிற மாநகர்.

மகோன்னத தேவனும் பொன்னாட்டதிபனும் உலக ரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் பாததூளிகள் பட்டுப் புனிதமடைந்ததும், கிறிஸ்து, தமது பொறுமையை ஏராகப்பூட்டி செங்குருதி நீர்பாய்ச்சிச் சேறாக்கி; ஆசை என்னும் விதையை வித்தி கிறிஸ்தவர் என்னும் நாற்று முதன் முதல் நட்டதுமாகிய பரிசுத்த பலஸ்தீனா தேயத்திற்கும், அதின் தலைநகராகிய எருசலேமிற்கும் மற்றும் பல திவ்ய ஸ்தலங்களுக்

1 பேகங்கள். 2 புன்னைமரங்கள். 3 மலை. 4 குரங்கு. 5 பாம்பு. 6 தேவலோகம்.

கும் போய்த் தரிசிக்க நம்மிலனேகர்க்கு ஆர்வமிருக்கலாம். அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ளத் தகுந்த சமயம் நமக்குக் கிடைத்தால் எத்தனை சந்தோஷமிருக்குமோ அத்தனை சந்தோஷம் நமது மார்த்தீன் சந்நியாசியார்க் கிருந்ததென்னலாம். ஏனெனில் பலதடவைகள் உரோமையைச் சந்திக்க ஆசைகொண்டிருந்தும் அது சாத்தியப்படாமற் போனபடியால், விரும்பித்தேடிய விலையேறப்பட்டவோரரும் பொருள் வலிய வந்து கிட்டினாற்போலவும், அந்தகன் ஒருவன் செந்தாமரைக்கண் பெற்றது போலவும் தமக்கு உரோமைக்குச் செல்லும் சிலாக்கியம் கிடைத்ததற்காக அகமகிழ்ந்து உள்ளம் பூரித்தார். எர்புர்த் மடத்தின் பிரதிநிதியாக, ஒரு முக்கிய காரியத்தைக் குறித்துப் பேச ஆங்குச் செல்கின்றார். அவரது மட்டடங்கா வுவகை பிரயாணத்தின் சிரமத்தைப் பரிகரிக்கின்றது.

தற்காலத்திலேற்பட்டிருக்கிறது போலக் காலத்தில் பிரயாணச் சௌகரியங்களில்லை யாதலால், இந்த இரண்டு சந்நியாசிகளும், பாதசாரிகளாகவே வழி நடக்கிறார்கள். ஆங்காங்கு வழிகளில் ஏராளமான மடங்களிருந்தமையால், அவர்களுக்குச் சாப்பாட்டுச் செலவு முதலிய பிரயாணச் செலவுகளில்லை. தங்கள் கையில் உடன் கொண்டேகிய பணம் 10 பவுன் ஆகும். உரோமையில் தாங்கள் அமர்த்தும் நியாயவாதிக்குப் பிரதிப் பிரயோசனமாக அளிப்பதற்கே அத்தொகையைக் கொண்டேகினர். 1511-ம் ௵ ஜனவரி ௴த்தில் ரோமாபுரி எய்தினர். பாப்புவின் பட்டணத்தைக் கண்ட மாத்திரத்தில், லூத்தர் முழந்தாழ்படியிட்டுப் பட்டணத்திற்கு நேராகக் கைகளை நீட்டிக் கண்களை ஏறெடுத்துப் "பரிசுத்த ரோமாபுரியே வாழ்க" என்று வாழ்த்தினர்.

பரிசுத்த உரோமாபுரியே யென்று தாம் வாழ்த்தின இதுததி பரியந்தம், பரிசுத்த நகரம் என்று மதித்திருந்தவர் ஏறக்குறையவொரு௴ ஆங்குத் தங்கியிருக்க நேர்ந்ததால், தாம் நினைத்திருந்த மேலான நினைவிற்கு நேர்விரோதமாக நினைக்க நேர்ந்தது. ஏழுமலைக்கள்ளி என்று கூறப்பட்ட பூர்வீக அக்யான உரோமையைச் சேர்ந்த பல ஆட்சேபங்களுக்குரிய காரியங்களை ஆங்குக் கண்டார். ஆண்டிருந்த சகல விசேஷித்த ஆலயங்களையும், முக்கிய ஸ்தலங்களையும் சந்தித்துப் பத்தியாய்ச் செபம் செய்தார். அநேக மகத்தான திருவிழா ஊர்கோலங்களில் உடன் சென்றார். தேவாராதனைகள் நடை பெற்ற ஆலயங்களுக்கேகினார். எருசலேமில் பிலாத்துவினரண்மனைக்கு முன்னிருந்ததும், அப்பால் தேவதூதரால் ரோமாபுரிக்குக் கொண்டு வரப்பட்டதும், "பரிசுத்த படி" என்றழைக்கப்பட்டதுமான இருபத்தெட்டுப்படிகள் மேலும் முழந்தாழிலேறி ஒவ்வொரு படியிலும் பக்தியோடு கர்த்தருடைய ஜெபத்தை ஜெபித்தார். இவைகளை எல்லாம் செய்து முடித்த பின்னர், தமதிருப்பிடம் சேர்ந்து இரவில் நித்திரை செய்யுமாறு படுத்துக் கொண்டதற்பின், பிலாத்துவின்படிகள் மெய்யாகவே யெருசலேமிலிருந்து, ரோமைக்குச் சம்மனசுக்களால் கொண்டு வரப்பட்டனவோ, அல்லது உலகினருரைக்கும் பலவிதமான கட்டுக்கதைகளில் இதுவுமொன்றோ? என்ற



லூத்தர் சாஸ்திரியார்.

யிர்ப்புத்தோன்றினது. அன்றியும் உரோமாபுரியின் பரிசுத்தத் தன்மை யையும், பாப்புவின் தூய ஜீவியத்தையும் பற்றிக் கண்டதும் கேட்டது மான விஷயங்களில் சந்தேகம் ஏற்பட்டது. பாப்புக்களின் துன்மார்க்க ஜீவியத்தைப்பற்றி எண்ணில்லாக் கதைகளைப் பலரும் இயம்பக் கேட் டறிந்தனர். உரோமையில் அக்காலத்திலிருந்த, மற்றக் குருக்களின் நிர்விசாரங்களையும், அவர்களுள்ளத்தில் குடிகொண்டிருந்த பணப் பே யையும் பார்த்து மிக்க மனவேதனையடைந்தார்.

உலகப்பிரசித்தி பெற்று விளங்கும் இந்நகரத்தின் தன்மையைக் குறித்து மாருக்கூரின் அதை நம்புவோர் யாவர், அங்ஙனம் கூறுவோ ரைப் பித்தர் என்றன்றோ எளனம் புரிவர் அந்நகரமாந்தர். மோக்ஷ நரகங் களின் சுகதுக்கங்கள் எவ்வாறிருக்கும் என்று கேட்பவர்க்குப் பதில் யாது கூறுவது. அதனதனனுபவிக்கே அதனதன் சுகந் தெரியுமன்றிப் பிற ரதன் சுகமறியார். அங்ஙனமே உரோமையின் தன்மையை நேரில் கண்டறிந்தோரன்றி, யாவரேயறியவல்லர். அந்நகரத்தின் விர்த்தாந் தத்தை மார்ட்டீன் லுத்தர் சாஸ்திரியார் தாம் நேரில்கண்டு கேட்டறிந் தவரானபடியால் அடியில் கண்ட செய்யுட்களின் கருத்திற்கிணங்கக் கூறி யுள்ளார்.

1 "மோகமல்கு *ரோமாபுரி மூதெயில் முயங்கும்
வாகைதீள் கொடிக்குலங்கள் விண்துயல்வருமாபு
மாகம் வேட்டுழல் மதியவீர் வரம்பில்சிற்றின்ப
போகமுண்டிவண்வம்மின் என்றழைப்பதுபோலும்"

2 "தீவினைக்கொரு களஞ்சியம் தீக்குணமன்றும்
பூவினுக்கறுபோக மாளிகை புலைபுரக்கும்
கோவினுக்கரசிருக்கை மாந்தருக்கொரு கொப்பம்
ஜீவனுக்கெலாம் கேடுரோமாபுரிச்சிறையே"

3 "பாதகத்தொழில் பயிலிடம் பாதலம்புகுத்தும்
வேதனைப்பயிர்விளைபுலம் வியன்பிரபஞ்சச்
சாதகத்திரள் குழுமிய தனிப்பெருங்கோட்டம்
சோதனைப்படுகிடங்கு ரோமாபுரிச்சூழல்"

4 "பஞ்சதந்திரம் பயிலுவர் காமநூல்படிப்பர்,
தஞ்சமாக்கிய வுடைமையைத் தமதெனச்சாதிப்பர்
நஞ்சமன்ன தீவினையெலாம் நயந்தனுட்டிப்பர்
வஞ்சமல்குவாய் மொழியினுல் புதைபடமறைப்பர்."

இன்னும் அந்த உரோமாபுரியின் தன்மையைக் கூறப்புகின் விரியுமென் றஞ்சி இம்மட்டோடு விடுத்தனம். சிற்றின்ப சுகபோகங்களை நுகர்வதே

* ஈண்டுச் சந்தர்ப்பம் நோக்கி மாயாபுரியென்ற மூலபதம் ரோமா புரி யென்று மாற்றப்பட்டிருக்கின்றது.

அந்நகரமாந்தர்க்குப் பொழுதுப்போக்கு. பக்திமான்களைப் பயித்தியக்காரர் என்பர். அன்னவர்க்கு ஆங்கு மதிப்பில்லை. குருக்களுக்கு உண்டாட்டமும், மடவர்க்கு உரையாட்டமும், குடியருக்குக் களியாட்டமும், பரத்தையர்க்குக் கொண்டாட்டமும், பொருளிலர்க்குத் திண்டாட்டமும், கெருவிகட்குச் சிரசாட்டமும் ஆண்டு நிறம்பக் காணலாம்.

இங்ஙனமாக உரோமையிலிருக்கும் அவபக்தியும் துன்மார்க்க ஜீவியமும், லூத்தரின் மனதை எவ்வளவோ வேதனைப்படுத்தினலும்; பாப்புவுக்கும் உரோமன் சபைக்கும் விரோதமாக எழும்ப அவர் மனம் எட்டுணையும் துணியவில்லை. திருச்சபை முழுதும் கெட்டுப்போகாதபடி சீர்திருத்தப்பட வேண்டுமானல் ஆண்டவர் தாமே அதற்கென்று லூத்தரைத் திடப்படுத்தி ஏவ வேண்டியதாய் இருந்தது.

1511-ம் ஹு ஜனவரிமீ மார்த்தீன், ஆண்டெடன் சந்நியாசிகள் உரோமை போய்ச் சேர்ந்து அடுத்தமீ திரும்பினர்கள், அவர்கள் உரோமையினின்றும் மீண்டபோது அகுஸ்புர்க் பட்டணத்தின் மார்க்கமாகச் செல்ல நேர்ந்தது. அப்பட்டணத்தில் உர்சுலா அம்மாள் என்ற ஒரு ஸ்திரி அன்னபானதிகள் ஒன்றுமின்றிச் சுத்த உபவாசமாயிருந்து நாட்களைக் கழித்து வருகின்றாள் என்ற செய்தி உலகப்பிரசித்தம். இந்தப் புதுமையான காரியத்தை ஆங்குச் சென்ற இருவருக்கும் காண்பிக்கக் கருதி, ஆண்டிருந்த ஓர் குருப்பிரசாதி அவர்களை அழைத்தேகினர். ஜனத்திரளோ இந்தப் புதுமையையும் அந்த அம்மாளின் அர்ச்சிய சிஷ்டத்தன்மையையும் கண்டு, மீளவெண்ணிப் பெரியதோர் விழாவினைக்காண்பான் எகுந்தன்மையில், கும்பல் கும்பலாய்ச் செல்லாநின்றதுமன்றி; அம்மாதினை வணங்கியும் சென்றது. "ஒரு நாளுணவை யொழி யென்றால் ஒழியாய்" என்னும் செய்யுளுக்கேற்ப இது காலபரியந்தம் கேட்டறிந்திராத லூத்தர் இவ்வாச்சரியத்தைப்பற்றி ஐயுற்றார். நீலத்தொட்டியில் தவறி விழுந்து சாயந்தோய்த்துக்கொண்ட நரியின் கதையும் புலியின் தோலைப் போர்த்துக்கொண்ட பசுவின் கதையும், அவர் ஞாபகத்திற்கு வந்ததால், உலகத்தை மோசம் போக்காமலும், தானும் மோசத்திற்குள்ளாகாமலும் இருக்குமாறு அம்மாதினை எச்சரித்தார். இந்த அம்மாளின் அர்ச்சியசிஷ்டத்தனம் சீக்கிரத்தில் வெளிப்பட்டுப் பட்டணத்தைவிட்டு துறத்துண்டாள். அக்காலத்திலிருந்தது போல் இக்காலத்திலும் அத்தகைய எத்தர்கள் பலர் அச்சபையில் உளர்.

பின்னர் லூத்தர் சாஸ்திரியார் தாம் ரோமாபுரிக்குச் செய்த பிரயாணத்தைக் குறித்து யோசித்தபோது யாது புகன்றார் என்றால் "எனக்கு நூறாயிரம் பொன் கிடைத்திருந்தாலும் போகாதிருக்கத் தெரிந்திருக்கமாட்டேன். பாப்புவின் அக்கிரமத்தை நான் கண்ணால் காணவில்லையானல் இத்தனை தெளிவாக எழுத முடிந்திராது. இப்போது நான் கண்டதற்கே சாட்சி கொடுக்கிறேன்" என்றார். "செய்யரைச் சேர்ந்துளாரும் செய்யராய்த்திகழ்வரன்றே" என்றபடி உலகப்பிரசித்தியாய் மகா பரிசுத்தமாய் மதிக்கப்பட்ட உரோமைக்கு லூத்தர் சென்று மீண்டதால், அவர் பரிசுத்தவான் என்று எண்ணப்பட்டு யாவ

ராலும் நன்கு மதிக்கப்பட்டார். 1511-ம் ஞு மார்ச் மீ மீண்டும் வித்தன்பர்க்கில் தமது அலுவலைத் துவக்கினர். அதன் அடுத்த ஞு அக்டோபர் மீ வேத சாஸ்திரத்தைப் போதிக்க ஆரம்பித்தார். ஒவ்வொரு நாளும் காலையில் 6 மணி துவக்கி 7 மணி வரைக்கும் சங்கீதத்தையும் ரோமர் நிருபத்தையும் விஸ்தரிப்பார்.

"செவ்விதினுரைப்ப அவ்விருநாலும் ,மையறுபுலமை மாண்புடைத்தாகும்."
"கொடுத்தாலும் நிறை வொழியக்குறைபடாது."

என்ற மேலோர் வாக்கேபோலத் தாம் வேத சாஸ்திரத்தை மற்றையோருக்கும் போதிப்பதினல் அவருக்கு வேத சாஸ்திர ஞானம் அதிகத் தெளிவுற்றது.

வித்தன்பர்க் தேவாலயத்தில் அவர் பிரசங்கித்த போது ஏராளமான ஜனசமூகத்தினர் பிரசங்கமாரியைக் கேட்டானந்திக்கத் தேனைப் பருகும் வண்டினங்கள் போல வந்து எங்ஙனம் மொய்த்தனரோ அங்ஙனமே கல்லூரியிலும், வேத சாஸ்திரம் விஸ்தரிக்கும்போது மாணவராகிய வண்டினங்கள், தேனினுமினிய இயேசுவின் நாமமாகிய தீந்தேனைமிக்க ஆர்வத்துடன் வந்து பருகினர். உன்னதமான தீபஸ்தம்பத்தில் ஏற்றப்பட்டிருக்கிற தீபத்தின் ஒளியானது எவ்வாறு நாற்றிசையிலும் ஒளி வீசுமோ அவ்வாறே வித்தன்பர்க்கிலிருந்து லுத்தர் சாஸ்திரியாருடைய ஞானப் பிரசங்கத்தின் ஒளி நாற்றிசையிலும் வீசிப் பிரகாசிக்க ஆரம்பித்தது.

## யோவான் தேத்சேல்.

வித்தன்பர்க் நகருக்கு சிலமைல் தூரத்திலிருக்கிற ஒரு ஊரில் எங்கணும் பெரிய குழப்பமாயிருக்கிறது. ஆலயங்களின் *சிகரி மேல் தூங்கிக்கொண்டிருக்கும் வெண்கல மணிகள் டாண்டாம் டாண்டாம் ஜனங்களே நீங்கள் மனைகளில் தரிகொள்ள வேண்டாம் வேண்டாம், சீக்கிரமாய் வந்து சேருங்கள் என்று கூறும் தன்மையில் மணிகள் அடிபடுகின்றன. விசேஷித்த பெரியதோர் தெருவில், ஜனத்திரள் கூட்டமாய் ஞானப்பாட்டுகளைப் பாடிக்கொண்டு ஊர்வலம் வருகின்றது. குருக்களும் சந்நியாசிகளும் எரிகிற மெழுகுவர்த்திகளைத் தங்கள் கரங்களிற் பிடித்துக்கொண்டு முன்னகச் செல்ல, அந்நகர சங்கத்தாரும், குடியானவர்களும், பாற்கடலின் அலைகள் வானில் தவழும் பான்மையில் வெண்டுவெஜங்களைப் பிடித்துக்கொண்டு அவருக்குப் பின்னகச்செல்ல, ஆண்பால் பெண்பாலாகிய இருதிரத்து மாணவர் குருவும் போதகாசிரியரும் மற்றும் மகளிர்கள், வேலைக்காராதியோரும் அவர் பின்னலேக, வாத்திய கோஷம் ஒருபால், சங்கீத கோஷம் ஒருபால்

*கோபுரம்.

மந்திரங்களை ஜெபிக்கும் கோஷம் ஒருபால் முழங்கக் கடல் முழக்கும் இடிமுழக்கும் தம்மில் மாறு கொள்ளும் வண்ணம் ஊர்வலம் நடைபெற்றது. என்ன, ஆச்சரியத்தையும் வியப்பையுந்தரத்தக்க சம்பவம்! ஏன் இத்தனை பிரக்யாதியான ஊர்கோலம்.?

நகரசங்கத்தாருக்கு ஓர் விசேஷித்த சமாச்சாரம் வந்திருக்கிறது. அதாவது "பராபரனின் கிருபையும் அர்ச்: பாப்பானவரின் கிருபையும் உங்கள் நகரத்தின் வாயிலுக்குப் புறத்தே நின்றது" என்பதே. ஆங்கு வந்திருக்கிற செய்தியானது அத்தனை மேன்மையுடைத்தானதால், நகரமாந்தர் அனைவரும் வருகின்ற பரிசுத்தமானதை யேற்றுக் கொள்ளவேண்டியது அவசியமன்றோ?

அதோ! எதிர்பார்க்கப்பட்ட பரிசுத்த பிரயாணியானவர், அரசன் ஒருவன் ஊர்வலம் செல்லுகையில் எவ்வாறு வீரர்கள் பரிகளில் இவர்ந்து அணியணியாய் முன்னாகச் செல்வாரோ, அங்ஙனமே பரிமாக்களிலிவர்ந்து வீரர் பலர் முன்னாகச்செல்ல, விசித்திர விநோதமாய்ச் சித்திரிக்கப்பட்டவோர் அழகிய வண்டியில் ஐந்துருப்புக்களையும் அடக்கிக்கொள்ளும் ஆமையைப்போல் பொறிவாயில் ஐந்தவித்த யோகியர் இவரைப்போன்றவர், அவனியில் எவருளார் என்று கண்டோர் இயம்பும்வண்ணம், வெகு அமரிக்கையாய் உட்கார்ந்திருக்கிறார். வெள்ளிக்கம்பிகள்போல் நரைத்திருக்கிற உரோமத்தாலும் திரைத்திருக்கிற மேனியாலும், சுமார் 60 வயதுடையவராகக் காணப்படுகின்றார். சந்திர பிம்பத்தை கரியமுகில் மறைப்பதுபோல் தம்முடைய சரீரத்தை கருப்பங்கி தரித்து மறைத்திருக்கிறார். கொழுத்துப் பருத்த சரீரமுடையவரானபடியால் இம்மகான் எத்தகைய உபவாசமும் யோகாப்பியாசமும் உடையராய் இருந்திருக்கவேண்டும் என்பது நாம் கூறாமலே வாசகர் அறிந்துகொள்வாரென நம்புகின்றோம். இம்மகாப் பிரவுவின் நாமதேயம் யாதென்றறிய வாசகர் ஆர்வமுறுவரன்றோ? இவர் தான் இவ்வதிகாரத்தின் தலைப்பில் காட்டப்பட்ட யோவான் தெத்செல் என்ற திரு நாமம் பூண்டவர்.

மேலே கூறப்பட்ட ஊர்கோலம் இவரை எதிர் சென்று அழைப்பதற்காகவே நடைபெற்றது. வெகு கௌரவமாகத் தாம் ஏறிவந்த வண்டியினின்று இறங்கினமாத்திரத்தில் வரவேற்கும் பொருட்டுச் சென்றிருந்த அநேக குருப்பிரசாதிகளும் நகரசங்கத்தாரும் அவரைத்தழுவி மினவிக் கொண்டனர். ஆலயத்திலோயாது அடிபடும் மணியோசை ஈங்கு வம்மின், வம்மினென்றழைப்பதுபோல் முழங்கா நிற்க ஊர்கோலத்தில் ஆங்குச் சென்றிருந்தோரனைவரும் வந்தவரையுடன்கொண்டு ஆலயத்திற்கு மீண்டனர். ஏதோ ஒன்று வெகு பூசிதத்துடன் இரத்தாம்பரப்பட்டு மெத்தையின்மேல் வைக்கப்பட்டதாய் ஒரு குருவின் சிரமேல் தாங்கப்பட்டு, யாவருக்கு முன்னர் ஆங்குக் கொண்டேகப்படுகின்றது. அஃதென்ன அர்ச்சியசிஷ்டப் பண்டம்? அதுதான் உரோமைத் தலைவராகிய பாப்பானவரின் நிருபம். நமது

யோவான் தெத்செலுக்கு இவ்வகைய மதிப்பையளித்ததும், திரளான ஜனங்களை நாடெங்கும் கூட்டுவித்ததும் திருச்சபை சீர்திருத்தப்பட வேண்டியது அவசியந்தானென்று பேதைமாக்களுக்கும் அறிவைக் கொளுத்தின காரண பீடமும் அந்நிருபமன்றோ!

இதோ, எண்ணிலா ஜனத்திரள் ஆலயத்திற்குட் பிரவேசிக்கின்றது. தெத்செல் பீடத்துக்கு முன்பாக நின்றுகொண்டு தனதருகில் சிவப்பு வர்ணம் பூசப்பட்ட பெரிய சிலுவையொன்றை நிறுத்துகின்றான். குருசின் இருமருங்கிலும் பாப்புவின் அடையாளம் அணிந்துள்ள பட்டுக்கொடியைப் போடுகின்றான். ஆங்கு நிறுத்தப்பட்ட சிலுவையின் முன்பாக பெரிய இருப்புப் பெட்டி ஒன்று வைக்கப்பட்டது. அஃது ஓர் உண்டியல் பெட்டிபோன்ற மேல் நோக்கின துவாரமுள்ளது.

இவைகளுக்குப் பின்னர் அந்த மகாத்மா பிரசங்கத் தொட்டியிலேறி, ஆலயங்கொள்ளாமல் நிறைந்திருந்த ஜனக்கும்பலை நோக்கி, உரத்த சத்தத்துடன் வெகு ஊக்கமான பிரசங்கம் செய்கின்றார். "குருக்களே மேன்மக்களே, வீட்டெஜமான்களே ஊழியக்காரரே, ஆடவர்களே, பெண்டீரே, எழைகளே; இன்று நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபையும், அர்ச். பாப்புவின் கிருபையும், உங்கள் மத்தியில் வந்திருக்கின்றது. இதோ நமது பாப்பானவரின் அடையாளம் தரித்திருக்கிற அர்ச்சிய சிஷ்ட சிலுவையைப் பாருங்கள் அதுவே பாவமன்னிப்புச் சீட்டுகளின் சிலுவை. பிரியமான கிறிஸ்தவர்களே, நமது அருமை ரட்சகர், இவ்வுலகத்தை மீட்டு இரட்சிக்கக், கல்வாரி மலைக்குத் தமது திருத்தோளில் சுமந்தேகின சிலுவையை நாம் எவ்வளவு உயர்வாய் மதிப்போமோ; எப்படி அந்தச் சிலுவையைக் கொண்டு கிறிஸ்துவின் மூலமாய் பாவமன்னிப்பு வந்ததோ? அத்தன்மையாகக் காணப்படுகிற திருச்சபையின் தலைவரும் கிறிஸ்துவின் பதிலாளியுமான நமது பாப்பானவர் உங்கள் மத்தியில் அனுப்பியிருக்கிற இந்தச் சிலுவையினால் பாவமன்னிப்பு வந்திருக்கிறது என்பதையுணருங்கள். இம்மாற்றத்தைக் குறித்து நீங்கள் எட்டுணையும் ஐயப்படவேண்டாம். இன்றுதினம் நீங்கள் செலுத்தும் பணத்திற்குப் பூரணமான பாவமன்னிப்பையடைந்து ஒப்புரவாக்கப்படுவீர்கள். உங்கள் பணப்பெட்டிகளைத் திறந்து பணங்களைக் கொண்டுவாருங்கள். இத்தகைய ஞானப் பலன்களை நமது பாப்பானவர் இன்னுமொரு முறை உங்கள் தேயத்திற்கு அளிப்பார் என்பது என்ன நிச்சயம்?

இதுவே உங்களுக்கு நல்ல சமயம், காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவும், கதவுள்ளபோதே அடைத்துக்கொள்ளவும் வேண்டுமல்லவா? எற்ற சமயத்தை விட்டுவிடாதேயுங்கள் பாவமன்னிப்பும் நித்திய ஜீவனும் இன்னும் ஒருமுறை இத்தனை எளிதாய்க்கிடைக்கும் என்று எண்ணுதிருங்கள். ஆகையால் உங்கள் ஆத்துமங்களுக்கும், இறந்துபோன உங்கள் நண்பரின் ஆத்துமங்களுக்கும் இன்றே இரட்சிப்பைத்தேடுங்கள். இந்நாள் இரட்சிப்புக்கேற்ற நன்னாள். இந்த நாள்தான் நற்பிரி

யமான காலம். ஈங்கு கூடியிருக்கிற சகல கிறிஸ்தமான பிரிய சகோதரர்களே, சகோதரிகளே, குருக்களே, பிரபுக்களே கேளுங்கள், கேளுங்கள், உத்தரிக்கிற ஸ்தலத்தில் அவதி வேதனைப்படுகின்ற உங்கள் சொந்தக்காரரும் நண்பரும், உங்களிடத்தில் ஒத்தாசை கேட்கிறார்களே, ஐயோ! மகனே, மகளே, உன் தாய் தந்தையரைப்பார், புருஷனே உன் பெண்சாதியைப் பார் உன்னிமித்தம் வேதனைப்படுகிறாள். நீ கொடுக்கிற பணத்தினால் அவள் அந்த அக்கினியினின்றும் விடுபட்டு நித்யானந்தமாகிய மோட்ச வீட்டையடைகின்றாள். இந்தப் பெட்டியில் காசு கலீரென்று விழுந்த சத்தம் கேட்ட அதே நிமிஷத்தில் ஆத்துமம் உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்து விடுபட்டு மோட்சத்திற்கேறுகின்றது. இவ்வளவு எளிதான விதமாய் சருவேஸ்பரனின் அளவற்ற கிருபையை நீங்கள் பெற்றுக்கொள்ளாமல் அசட்டையாய் விட்டுவிட்டால் நன்றிகெட்டவர்களாவீர்கள். உங்களுக்கு ஐயோ! வென்று உபந்நியாசமாரி பொழிந்தான்.

கள்ளன் பிள்ளையை வெள்ளம் கேட்டால், பள்ளம் பள்ளம் என்று சொல்லும் என்ற முதுமொழியை யாவரும் அறிந்திருக்கிறார்கள்; நமது தெட்சல் யாருடைய பிள்ளை யென்பதை வாசகர்கள் நன்குணர்வாராதலால், அவனவ்வண்ணம் தனது பிதாவாகிய பாப்புவின் மனக்கருத்துக்கியையக் கூறியிருப்பான் என்பதை ஈண்டுக்கூறவும் வேண்டுமோ?

ஆலயத்திற்கு வந்து கூடியிருந்த ஜனத்திரளுக்குத் தான்கொண்டிருந்த பணத்தாசையின் அளவிற்கு மேற்பட்ட விதமாய் பிரசங்க மாரியைப் பொழிந்த பின்னர் கீழிறங்கி பணப்பெட்டியை யண்மி, கிண்கிணீர் என்னும் ஓரோசை யாவரும் தத்தம் செவியில் கேட்கும் வண்ணம் ஒரு பணத்தைப் பெட்டியில் போட்டான்.



ஈங்கிருக்கின்ற படம், தெத்செல் என்பவனுடைய பணப்பெட்டியைக் காட்டுகின்றது. அப்பெட்டி இன்றளவும் காப்பாற்றப்பட்டிருக்கின்றது. தேவாலயத்தில் வியாபாரம் ஆரம்பித்தது. என்ன வியாபாரம்? பாவ மன்னிப்புச் சீட்டு வியாபாரம்; நீ முந்து நான் முந்து என்று ஒருவரோடொருவர் அடிபிடியாய்ச் சீட்டு வாங்கு

கிறார்கள். எளிதான மார்க்கத்தில் இரட்சிப்புக் கிடைக்கிறது, பண மூட்டையைக் கட்டித் தனது பக்கத்தில் கிழப்பூதம் போல் காத்துக் கொண்டிருக்கும் ஒரு குருவினிடம், சுருக்கமாய்த் தமது பாவங்களை அறிக்கையிட்டவர்கள் பாவ மன்னிப்புச் சீட்டைப் பெற்றார்கள். அதினால் தேவனின் அருளும் பாவ விமோசனமும் பெற்றுக்கொண்டார்களாம். ஆ என்ன பரிதாபம்! என்ன பயங்கரமும் துணிகரமுமான கள்ளப் போதகம்!! உலக ரட்சகராகிய இயேசுக்கிறிஸ்து பொன்னினாலும் வெள்ளியினாலும் அல்ல விலை மதிக்கக் கூடாத தமது திரு இரத்தத்தினால் உலகத்தை மீட்டு ரட்சித்து ஐந்துகாயக் கிருபைக்கோட்டையில் பாவிகளுக்கு அடைக்கலங்கொடுக்கச் சதா நித்தியராய் கண் விழிப்போடு காத்துக்கொண்டிருக்கையில், கிருபையின் எத்தனங்களை வியாபாரம் செய்யத் துவக்கிவிட்டது அந்தோ கொடுமை! கொடுமை!! பெரிய கொடுமை!!

ஓ, கிறிஸ்துவின் திருச்சபையே! உனது ஆதிநிலைமையினின்று எவ்வளவு தூரம் வழி விலகிப் பாதாளத்தை நோக்கி நடக்கிறாய். மெய்யாகவே, பரிசுத்த ஸ்தலத்தில் பாழ்க்கடிப்பின் அருவருப்பு நிற்கின்றது; உனதாண்டவரும் தேவனும் உத்தம போதகருமான கிறிஸ்து, ஒரு தடவை எருசலேம் தேவாலயத்தில் வியாபாரம் செய்தவரை மிலாறினால் அடித்துத் துறத்தினாரே; இங்கே ஆலயத்தில் நடை பெறுகிற பாவமன்னிப்புச்சீட்டு வியாபாரம் மகா கேவலமானதென்று உனக்கு உணர்ச்சியற்றுப் போனதென்ன? ஆடுகள், புறாக்கள் முதலிய பிராணிகளை அல்ல விலையேறப்பெற்ற ஆத்துமாக்களையன்றோ பணத்திற்கு விற்கின்றாய், நம்மை ஒப்புரவாக்குகின்ற வேலை இயேசுக் கிறிஸ்துவினுடைய தாயிருக்கச் சொற்பப் பணத்திற்கு ஒப்புரவாக்குதலும் பூரண மன்னிப்பும் விற்கப்படுகின்றது எங்ஙனமாகும்? குணப்பட்டு விசுவாசிக்கிறவன் இரக்ஷிக்கப்படுவான் என்று சத்திய வேதத்தில் கூறப்பட்டிருக்கக் குணப்படுதலும் விசுவாசமுமின்றி பணமானது இரக்ஷிப்பைக் கொண்டு வந்திருக்கிறது. காத்தருடைய நீண்ட பொறுமையின் காலத்திற்கு முடிவில்லையோ? தம்முடைய வீட்டைக் கள்ளர் கெபியாக்கினவனைத் தண்டிக்க நீதியின் செங்கோலைப் பிடித்திருக்கிற தமது வலக்காத்தில் மிலாறுடன் வரமாட்டாரோ?

## 95 நியாயங்கள்.

1514–ம் ஞூல் லுத்தர் சாஸ்திரியார் பாவ மன்னிப்புச் சீட்டுகளின் துர் உபயோகத்திற்கெதிராகப் பிரசங்கிக்க ஆரம்பித்திருந்தார். தெட்சல் தான் செய்கிற காரியத்தில் நாணமென்பதொரு சிறிதுமின்றிப் பாவமன்னிப்புச்சீட்டை விற்று, ஜனங்களை மோசம் போக்குகிறான் என்றதையறிந்த லுத்தர், 1517–ம் ஞூ இந்த அமார்க்கத்தைத்தடுக்க பலமாய்த் தமதிதயத்தில் ஏவப்பட்டார்.

லுத்தர் தாம் விசாரணை செய்து வந்த சொந்தச் சபையாரில் அநேகர் வித்தன்பர்க் பட்டணத்திற்கேகி ஆங்குப் பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்பனை செய்யும் தெத்சலிடம் பணங்களைச் செலுத்திச் சீட்டு வாங்கியிருந்தார்கள். லுத்தருடைய சபைக் கிறிஸ்தவர்களில் அநேகர் அவரிடம் பாவசங்கீர்த்தனத்திற்கு வந்தார்கள். ஆண்டெய்தின கிறிஸ்தவர்களை நோக்கி, நீங்கள் உங்கள் பாவங்களை விட்டு நீங்கிப் பிரத்தியாரிடம் அநியாயமாகக் கவர்ந்த பொருள்கள் உண்டானால் அவற்றையுந் திரும்பக் கொடுத்துத் தீர்த்துச், சுத்த ஜீவியம் செய்ய வேண்டுமென்று போதித்தார். அந்த ஜனங்களோ அவரிடம் தங்களுடைய சீட்டுகளைக் காட்டிப் பரிபூரணமான பாவமன்னிப்பும் ஒப்புரவாகுதலும் தங்களுக்குண்டென்று சலஞ்சாதித்தார்கள்.

ஜனங்களின் உள்ளத்தில் இவ்விதமான துர்ப்போதகம் பலமாய்க் குடிகொண்டபடியால் லுத்தர் சாஸ்திரியார் என் செய்வார் பாவம்! கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் விடம் அதிகரிக்கின்றது, வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தவனெல்லாம் பிழைத்துக்கொண்டான், அல்லவா? லுத்தர் சாஸ்திரியார்? இத்துர்ப்போதனையை அறிந்த பின்னர் மௌனமாய் இருக்கலாமா? வீடானது தீப்பற்றி எரியும்போது அதை அவிக்காமல் சும்மா இருப்பது எப்படி? பாவமன்னிப்பு, ஒப்புரவாக்குதல், என்னும் பரிசுத்த வார்த்தைகள் மூட பக்தி, பொய் மோசம், என்பவைகளால் தகாதவிதமாய் உபயோகிக்கப்படும்போது அவ்வாறிருத்தல் கூடாது. கலசம் பிறந்தால் நியாயம் பிறக்கும். உலக ரக்ஷகராகிய அர்ச். திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வேஸ்பரன் அகோர ஆத்ம வேதனையடைந்து கள்ளனைப்போல் கட்டுண்டு, சிலுவையில் தமது விலைமதிக்கக்கூடாத திரு இரத்தத்தைச் சிந்தித் தமது பிதாவின் சித்தத்தை முடித்து மன்னிப்பைச் சம்பாதித்தார். அத்தன்மையில் சம்பாதிக்கப்பட்ட மன்னிப்பை விலைமதிப்ப தெவ்வாறு? யாதெய்தினு மெய்துக, மனமே அஞ்சற்க; நியாயவாதி லோக விரோதி என்றாலும் மெய்யாகவே நியாயமான விஷயத்தில் கோழைத்தனமாயிருத்தல் கூடாது. நீதியினிமித்தம் போரில் புறங்கொடாத வீரனைப் போல் போராட வேண்டும், என்ற பிடிவாதமான தீர்மானத்துடன் தம்முடைய சீர்திருத்த வேலையில் தைரியத்துடன் பிரவேசிக்கின்றார்.

அக்டோபர் மீ 31-ம் வ நடுப்பகல் நேரத்தில் லுத்தர் வித்தன்பர்க் கோட்டை ஆலயத்திற்கேகி ஆங்கு உயர ஏறுகிறார். பாவமன்னிப்புச் சீட்டுகளின் துர்உபயோகத்திற்கு விரோதமாகத் தாம் லத்தீன் பாஷையில் எழுதியிருந்த 95 நியாயங்களடங்கிய ஓர் கடிதத்தைத் தம்முடைய கரத்தில் பிடித்திருக்கிறார். இக்கடிதம் உலகத்தில் எத்தகைய பெருங் குழப்பத்தை யுண்டுபண்ணுமென்பதை யெவரறியார். தமது நியாயங்களனைத்தையும் லத்தீன் பாஷையில் எழுதியிருக்கிறார். அப்பாஷையில் அவர் எழுதியுள்ள நோக்கமானது குருக்களையும் கல்வி கேள்விகளில், சிறந்த பண்டிதர்களையும் தற்கத்திற் கழைக்க வேண்டுமென்பதே. பாப்பானவர் சொன்னதெல்லாம் உண்மை என்றும் இம்மையில்

தண்டனைகளை எல்லாம் மன்னிக்க அதிகாரமுள்ளவர் என்றும், லுத்தர் நம்பினாலும் பாவத்தின் கடனையும் மறுமையிலுண்டாகும் தண்டனையையும் நீக்க பாப்பானவருக்கதிகாரமுண்டென்று தெத்சல் வாதிக்கும்போது லுத்தர் அதை மறுக்கிறார்.



22-ம் பக்கம் படத்தில் நடுவே, லுத்தர் தமது நியாயங்களைக் கோவில் கதவில் ஆணிகளால் அடிக்கிறதைப் பார்க்கிறோம். இடது பக்கத்தில் தெத்செல் பிரசங்கிக்கிறதையும், ஒரு மனுஷன் அவனுடைய பெட்டியில் பணத்தைப் போட்டு ஒரு பாவமன்னிப்புச் சீட்டை வாங்குவதையும், வலது பக்கத்தில் லுத்தரின் மாணவர் தெத்செல் எழுதிய

எதிர் நியாயங்களைச் சிகியில் போடுகிறதையும் பார்க்கிறோம். அம்மா ணவரில் சுவீடன் தேசத்துச் சீர்திருத்தியாகிய உலாவு பேட்ரிக் என்கி றவர் ஒருவர். அதன் கீழே பாவசங்கீர்த்தனத்துக்கு வந்த சபையார், தாங்கள் வித்தன்பர்க்கில் வாங்கின பாவமன்னிப்புச் சீட்டைக் காட்டி, அதுவே தங்கள் பாவமன்னிப்புக்காதாரமென நம்பியிருக்கும் போது, அன்னவர்க்கு மீண்டும் பாவமன்னிப்புக்குரிய ஆசீர்வாத வார்த்தைகளைக் கூறவொண்ணுதென லுத்தர் மறுக்கிறதையும் பார்க்கிறோம். இத் தோடு 45-ம் பக்கப் படத்தையும் ஒப்பிட.

ஈண்டு லுத்தர் இந்நாளில் பாவமன்னிப்புச் சீட்டுகளுக்கு விரோ தமாக எழும்பினது தைரியத்தையும் துணிவையும் காட்டுகின்றது. ஆயி ரம் பாம்பை ஜெயிக்க ஓர் தேரை முயற்சிப்பது போல இருக்கிறது. 'சிற்றுளியால் கல்லுந் தகரும்' 'அலர்கதிற் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்' என்ற ஆன்றோர் வாக்கொப்ப, நியாயம் எவ்வாற்றாலும் வெற்றி கொள்ளும் என்ற மனோதிடமே, நம்முடைய சாஸ்திரியாருக்கு வெற்றி யை அளிக்கும் சருக்குள்ள பட்டயமாயிற்று.

அடுத்தநாள் நவம்பர் மீ முதல் வ சகல பரிசுத்தவான்களின் திருநாளாய் இருப்பதினுல், கணக்கில்லா ஜனத்திரள் வித்தன்பர்க் கிற்கு வருவார்களென்று பிரதரிக் ஞானியாகிய நேமகப்பிரபு பெருந் தொகை செலவு செய்து ஏராளமான அர்ச்சியசிஷ்டப் பண்டங்களைச் சேகரஞ் செய்து வித்தன்பர்க் கோட்டையாலயத்தில் வைத்திருந்தார். அவைகளின் தொகை 5005. அவற்றின் முக்கியமான சிலவற்றை யீண்டு கூறுவாம். துளிர்த்த ஆரோன்கோலினேர்பாகம், கர்த்தர் மோசேக்குத் தரிசனையானபோதிருந்த எரிகிற ஒரு கொம்பு முதலிய வை. நவம்பர் மீ முதல் வ யில் இப்பண்டங்களை யெல்லாம் ஆலயத் தில் காணலாம். இவைகளைத் தியானித்துச் செபம் செய்வோருக்குப் பாவமன்னிப்புக் கிடைக்கும் என்பது அன்னவர் கொள்கை. முந்தின தினமாகிய அக்டோபர் மீ 31 ம் வ மாலையில் ஓர் விசேஷித்த ஆரா தனை நடைபெறும். அவ்வாராதனைக்கேகும் கல்விமான்களெல்லாம் லுத்தரின் நியாயங்களை வாசிக்கலாம். இவ்வித நியாயங்களைத் தாம் கதவத்தில் ஒட்டியிருக்கும் விஷயமாய் அரசனுக்குச் சினமுண்டாகு மென்று லுத்தருக்குத் தோன்றினும், தம்முடைய மனச்சாட்சிக்குக் கீழ்ப்படிந்து தமது பிரதிக்கினை தவருமல் எப்படிச் சந்நியாசம் புகுந்தா ரோ, அப்படியே இப்போது யோவான் தெட்சலுக்கு விரோதமாகக் கிளம்பித், தமக்கு நேரிடக்கூடிய கஷ்ட நஷ்டங்களை எட்டுணையும் நோக் காது திடத்துடனிருக்கின்றார்.

அர்ச்சிய சிஷ்டப் பண்டங்களை வணங்க ஆலயத்திற்கு மற்றவர் களுடன் சென்று அவற்றைப் பார்ப்போம்.

'ஆயிரமுகத்தானகன்றதாயினும் பாயிரமல்லது பனுவலன்றே' என்ற இலட்சணப்படி நமது லுத்தர் சாஸ்திரியாரின் 95 நியாயங்களுக் கும் முன்னதாகப் பாயிரம் ஒன்று வரைந்துள்ளார்; அது வருமாறு "சத்தி யத்தை நாடி அதைத் தெளிவிக்க வேண்டுமென்றுன்னி, வித்தன்பர்க்கில்

கீழ்க்கண்ட நியாயங்களைப்பற்றி ஓர் தர்க்கத்தை ஏற்படுத்தத் தீர்மானித்து இருக்கின்றோம். தத்வ சாஸ்திரத்திலும், வேத சாஸ்திரத்திலும், பாண்டித்தியம் வாய்ந்துள்ள பண்டித சிகாமணியும், கல்லூரி வேத சாஸ்திரப் போதகாசிரியருமாகிய வந்திக்கத்தக்க போதகப்பிதா



மார்ட்டீன் லுத்தர் சாஸ்திரியார் அக்கிராசனம் வகிப்பார். நேரே தர்க்கத்திற்கு வரக்கூடாதவர்கள் லிகித மூலமாகத் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஆமேன்" என்பது.

"தோன்றாத் தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற்புகழ்தல் தகுதியன்றே" என்றிலக்கணமியம்பினும்

"மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்
தன்னுடை யாற்ற லுணரா ரிடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதிலும்
தன்னை மறுதலைப் பழித்த காலையும்,
தன்னைப்புகழ்தலும் தகும் புலவோர்க்கே"

என்ற விதியை யனுசரித்தே நமது சாஸ்திரியார் ஈண்டுப் பாயிரத்தில் அங்ஙனம் கூறியுள்ளார் என்றறிஞர் உணர்வார்களாக.

1. முதல் 7 நியாயங்கள் குணப்படுதலையும் பாவசங்கீர்த்தனத்தையும் பற்றிப் பேசுகின்றன, நம்முடைய ஆண்டவரும் போதகருமாகிய இயேசுக்கிறிஸ்து "குணப்படுங்கள் ஏனெனில் வான ராஜ்யம் சமீ

பமாய் இருக்கிறது” என்றியம்பும்போது விசுவாசிகளின் முழு ஜீவியமும் ஓயாத குணப்படுதலாய் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்.

2. கிறிஸ்து இவ்வாறு கூறியிருக்கிறாரேயன்றிக் குருவிற்கு முன் செய்யும் வாயின் அறிக்கையையும், குரு குறிக்கும் நற்கிரியைகளையும் நோக்கிக் கூறினதில்லை.

3. இவ்வார்த்தைகளில் ஆண்டவர் நமது இருதயத்திலிருக்கும் குணப்படுதலைக் குறித்துமட்டும் பேசுகிறதில்லை. ஏனெனில் இருதயத்தின் குணப்படுதல், புறம்பான இருதயத்தில் தன்னைக்கட்டி ஓயாமல் அடக்கிக்கொண்டேயிருந்தாலொழிய மெய்யான குணப்படுதலில்லை.

லுத்தரின் வார்த்தைகள் எத்தகைய கண்டிப்புள்ளவைகளாய்த் தோன்றுகின்றன பாருங்கள்; பிரயாசையான போராட்டத்தினால் இந்தச் சத்தியங்களை அறிந்தவர்மட்டும் இவ்வாறு கூறவியலுமேயன்றி மற்றல்ல. அவரது வெளித்தோற்றம் மட்டும் போதுமோ? போதாது, சகல காரியங்களிலும் மெய்மை வேண்டும்.

எட்டாம் நியாந்துவக்கி இருபத்தொன்பதாம் நியாயம் வரைக்கும் மரணத்திற்குப்பின் ஆத்மாவின் நிலைமை எப்படியிருக்குமென்றும், ஒருவனுடைய மரணத்திற்குப்பின் அவனுடைய ஆத்துமத்தைப் பாப்பு இரக்ஷிக்க முடியாதென்றும், லுத்தர் காட்டுகின்றார். அத்தோடு பாவ மன்னிப்புச் சீட்டுகளின் வியாபாரத்தின் பொல்லாப்புகளைத் தெளிவாய்க் காட்டுகின்றார். இவைகளில் சிலவற்றை ஈண்டுக் கூறுவாம்.

“மரிக்கிறவன் தன் பாவங்களை முற்றிலும் விட்டுக் குணமாக்கப்பட்டாலொழியக் கட்டாயமாய்ப் பெரிய பயங்கரத்தை அடைய வேண்டும்.”

“உத்தரிக்கிற ஸ்தலத்தின் வேதனை இவ்வளவென்றறிகிறதற்கு இந்தப் பயமே போதுமானது”

“பாப்பு சகல தண்டனைகளையும் பூரணமாய் மன்னித்தால் தாம் விதித்த தண்டனைகளை அவர் மன்னிக்கக் கூடியதல்லாமல் வேறன்று”

“பாப்பு அளிக்கும் பாவமன்னிப்பினால் ஓர் மனிதன் மோட்சத்தை அடைகிறான் என்றும் பிரசங்கிக்கிற பாவ மன்னிப்புச் சீட்டு வியாபாரிகள் எல்லாம் மோசம் போகிறார்கள்”

“பணம் பெட்டியில் விழுந்த மாத்திரத்தில் உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படுகிற ஆத்மமானது உடனே வேதனையினின்றும் விடுதலையடைகின்றது என்றும் போதிக்கிறவர்களின் போதகமெல்லாம் மனித போதகமன்றிச் சுத்த மெய்ம்மறையின் போதகமன்று”

“பணம் பெட்டியில் விழ விழப் பொறாமையும் பொருளாசையும் மிஞ்சுகிறதொழிய ஆத்மா ஈடேற்றம் அடைகிறதில்லை என்பது திட்டம்”

தெத்செல் முதலிய பாவ மன்னிப்புச் சீட்டு வியாபாரிகளின் மோசம் காதலாமலகம் போல் காட்டப்பட்டபடியால் தங்கள் இலாபம் குறைந்து போயிற்றென்று, மட்டுக்கு மிஞ்சிச் சீற்றங் கொண்டனர்.

முப்பதாம் நியாயம் துவக்கி எண்பதாம் நியாயம் மட்டும் ஜீவனோடிருக்கின்றவர்க்குக் கிடைக்கும் மன்னிப்பைப்பற்றி லுத்தர் பேசுகின்றார்.

உண்மையாய்த் தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறவன் பாவ மன்னிப்புச் சீட்டின்றிப் பாவக்கடனுக்கும் தண்டனைக்கும் பூரண விடுதலையடைகிறான்.

கோயில் பீடத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டு பாப்புவின் அடையாளத்தை யணியப்பெற்ற சிலுவை, கிறிஸ்துவின் சிலுவையைப் பார்க்கிலும், வல்லமை உடைத்தானது என்று போதிக்கிறவன் தேவ தூஷணஞ் சொல்லுகிறான்.

கடைசியில் 81-ம் நியாயந் துவக்கி 95-ம் நியாயம் வரையில், பாவ மன்னிப்புச் சீட்டுகளின் துர் உபயோகத்தினால் திருச்சபைக்கும் பாப்புவுக்கும் உரிய உள்ளான மகிமைப் பிரதாபம் குறைபடுகின்றது என்று காட்டுகின்றார்.

பாவ மன்னிப்புச் சீட்டு வியாபாரிகள் மானமற்ற விதமாய் இவ்வாறு பிரசங்கிக்கிறதினால், பெரிய படிப்பாளிகளுங் கூடப் பாப்புவின் கனத்தையும் மகிமையையும் காப்பாற்றவும், சாதாரண ஜனங்களின் ஆட்சேபங்களுக்கும், கோட்சொல்லுதலுக்கும் பதில் சொல்லவும் மகா கடினமாயிருக்கிறது. உதாரணமாக, பாப்பு சகடக்கால் போன்ற நிலையற்ற பணத்தினிமித்தம் கணக்கற்ற ஆத்மாக்களை உத்தரிக்கிற ஸ்தலத்தினின்றும் இரக்ஷிக்கக் கூடுமென்றால், சுத்த தயவினாலும், பரிசுத்த அன்பினாலும் பிறர் சிநேகத்தாலும் ஏவப்பட்டு ஆத்மாக்களின் கொடிய கஷ்ட நிஷ்டூரங்களைப் பார்த்து என் ரக்ஷிக்கக் கூடாதென்று ஆட்சேபிப்பார்கள் அல்லவா? "சமாதானம் என்பதொரு சிறிதுமில்லாதிருக்க, சமாதானம் சமாதானம் என்று கூறும் சகல கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும் ஐயோ! சிலுவையில்லாதிருக்கச் சிலுவை சிலுவை என்று கிறிஸ்தவர்களுக்குக் கூறும் சகல தீர்க்கதரிசிகளுக்கும் ஆசீர்வாதமா? நித்ய மரணதண்டனையும் நரகமும். கிறிஸ்தவர்கள் தங்கள் சிரசாகிய கிறிஸ்துவைப் பின் செல்லுமாறு போதிக்கப்பட வேண்டும். மோசமில்லை, சமாதானம், என்கிற வாய்மையற்ற ஆறுதலை நம்புவதைப்பார்க்கிலும், அநேக வுபத்திரங்களின் வழியாக அவருடைய இராச்சியத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமென்று நம்புவதே உத்தமம்."

இந்த நியாயங்களைப்பற்றி லுத்தருடன் தர்க்கிக்கத் துணிந்தவன் ஒருவனுமில்லை. கல்லூரி மாணவர் யாவரும் லுத்தரின் மனோதிடத்தைக் குறித்துப் புகழ்ந்து, மனமகிழ்ந்து. அவருடைய நியாயங்களை அச்சுவாகனமேற்றிப் பிரசித்தப்படுத்தினார்கள். அவைகள் ஒரு பக்ஷத்திற்குள் கர்மானிய தேய முழுவதும் ஒரு மாதத்திற்குள் ஐரோப்பாக் கண்டத்தின் தென்பாகத்திலும் பிரசித்தமாயின. வானவர்கள், அவற்றைப் பிரசித்தப்படுத்தின பான்மையில், விறைவில் நாடெங்கும் பரவின.

அரண்மனை, கோட்டை, கல்லூரி, மடம், சந்தை, சத்திரம் முதலான விடங்களெங்கணும், லுத்தரின் 95 நியாயங்களைப் பற்றியே பேசப்பட்டது. அநேக விஷயமாகப் பேச யத்தனித்தும், துணிவுறாமல் விட்டுவிட்டதை, லுத்தர் பிரயத்தனித்தார். 95 நியாயங்களின் முக்யாம்ஸம் யாதெனில், நாம் தேவனண்டை சென்று, இயேசுக் கிறிஸ்துவினிமித்தம் அவருடைய அருளைப் பெறக்கூடுமென்பதே. பிரயாசைப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களும், மனுஷீகச் சட்டத்தின், அடிமைத்தனத்தின் கீழ் வாதிக்கப்பட்டவர்களும் இந்தச் சுவிசேஷத்தை ஆவலோடேற்றுக்கொண்டார்கள். தெத்செலும் அன்னுன் தோழருமோ, சீற்றம் மிஞ்சிப் பாப்புவிற்கு முன்பாக, லுத்தர் மேல் அவர் பதிதன் என்று சொல்லி, அவர் மேல் சாபம் கூறினுர்கள். மூன்று வருடங்கள் பரியந்தம், விசாரணை நடைபெற்றது; பாப்பு லுத்தரை ரோமாபுரிக்குத் தருவித்து, விசாரணை செய்யத்தலைப்பட்டார். அத்தருணம், ஆங்குச் சென்றிருந்தால், நிச்சயமாகவே, பதிதனென்று தீர்மானித்து, நெருப்பால் சுட்டெரிக்கப்பட்டிருப்பார். சக்சோனி நாட்டு நியமகப்பிரபுவின், ஒத்தாசையினுல், கர்மானிய தேயத்தில் விசாரணை நடந்தது. கடைசியில் 1521-ம் ஷு ஜனவரி மீ 2-ம் உ விசாரணையின் தீர்மானம் முடிவுக்கு வந்தது. "லுத்தர் திருச்சபைக்குப் புறம்பாக்கப்பட்டார்." இந்தத் தீர்மானத்தினுலே பாப்பு தம்மையும், தமது சபையையும் தீர்மானித்திருந்தார்.

1517-ம் ஷும் லுத்தர் அடித்த ஆணியின் தொனி நாளது பரியந்தம் தொனித்துக்கொண்டிருக்கின்றது. அந்தத் தொனி திருச்சபையின் சீர்திருத்தலின் ஆரம்பத்தையும் உலக சரித்திரத்தில், புதிய காலத்தின் துவக்கத்தையும் குறிக்கின்றது.

## வோர்ம்ஸ் நகரப் பிரயாணம்.




மார்ட்டீன் சகோதரன் மீளவும் தூரப் பிரயாணமாகவிருக்கின்றுர். இப்போதோ அவர் உரோமையை நோக்கிச் செல்கின்றதில்லை. முன்னர் உரோமையின் கீழ்ப்படிதலான புத்திரனுகவிருந்தவர் இப்போது சபைக்குப் புறம்பாக்கப்பட்டவராக இருக்கின்றுர். உலகினர் யாவராலும் அறியப்படாதிருந்தவோர் சந்நியாசி, இப்போது திருச்சபையோரனைவராலும் அறியப்பட்டவரும், அநேகரால் நேசிக்கப்பட்டவரும்,

அநேகரால் பகைக்கப்பட்டவருமாயிருக்கிறார். வொர்ம்ஸ் நகரை நோக்கிப் பிரயாணஞ் செய்கிறார். ஒரு வாரத்திற்குமுன் அதாவது 1521-ஷ மார்ச்சு-மீ 26-உ 5-ம் கார்லு சக்கரவர்த்தியின் தூதன் வித்தன்பர்க்கிற்கு வந்து அடியில் கண்ட நிருபத்தையீந்தான்.

"கனமும் அன்பும் பக்தியுமுள்ளவரே! நாமும் ஈங்குக் கூடியுள்ள மகா ராச்சிய சங்கத்தாரும், நீர் சிலகாலமாகப் பரிசுத்த புஸ்தகங்களையும் போதனைகளையுங் குறித்து விசாரணை செய்யத் தீர்மானித்திருப்பதால், நீர் பூரண சுகத்தோடு ஈண்டு வரவும், உமதூருக்கு மீண்டேகவும் கூடும்படிக்கு இத்துடன் உமக்கு ஒப்புக் கொடுக்கப்படும் பாதுகாப்புச் சீட்டையேற்படுத்தியிருக்கிறோம்; இந்தச் சீட்டுத் திட்டமாய்க் குறிக்கிறதியாதெனில், நீர் உடனே உமது பிரயாணத்திற்குத் தயார் செய்து 21 நாட்களுக்குள், தடையின்றி இங்கு வந்து சேர வேண்டும். பலவந்தத்திற்காவது அநியாயத்திற்காவது நீர் பயப்படாதேயும்; நம்முடைய பாதுகாப்பை உறுதியாய்க் காப்பாற்றுவோம்" என்று தெரிவித்து, "நம்முடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து வருவீர் என்று எதிர் பார்க்கிறோம். அதனால் நீர் நம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவராவீர்." "நமக்கும் இராச்சியத்திற்குமான வொர்ம்ஸ் நகரில் கி. பி. 1521-ஷ மார்ச்சு மீ 6 உ நம்முடைய அரசாட்சியின் இரண்டாம் வருடத்தில் இஃதெழுதப்பட்டது. கார்ல்."

லுத்தரின் சிநேகிதரில் பலர், அவர் தம்மைச் சத்துருக்களின் கரங்களில் ஒப்புக்கொடுக்கக் கூடாதென்று தீர்த்தார்கள். சக்கரவர்த்தியவருக்குப் பாதுகாப்புச் சீட்டை யளித்திருந்தும், நூறு வருடங்களுக்கு முன்னர் இதைப்போல் பாதுகாப்புச் சீட்டைப் பெற்ற ஜான் உஸ் என்பவர் பிடிக்கப்பட்டுப் பதிதனாகச் சுட்டெரிக்கப்பட்டார் என்பதையவருக்கு நினைப்பூட்டினார்கள். லுத்தரோ "என் சத்துராதிகள் வித்தன்பர்க்கிலிருந்து வொர்ம்ஸ் நகரமட்டும், வான பரியந்தம் எரிகிற அக்கினியைக் கொளுத்தினாலும், நான் இராயனால் அழைக்கப்பட்டதினால், கர்த்தருடைய நாமத்தை முன்னிட்டு ஆங்குச் சென்று, துஷ்ட மிருகத்தின் வாயில் அதின் பெரிய பற்களுக்குள் நின்று கிறிஸ்துவை அறிக்கையிட்டு, அவருடைய நடத்துதலின்படி இருக்க மனதாயிருக்கிறேன்" என்றார். லுத்தர் எல்லாவற்றையும் பார்க்கப் பராபரனுக்குப் பயந்து, அவரைச் சிநேகித்து அவர் பேரில் நம்பிக்கையாயிருநததால், எப்போதும் தைரியமாக இருந்தார். அவசியமானால் தமது ஜீவனையும் கொடுக்கத் தயாராயிருந்தார். தமதாத்மாவிலிருக்கிற தைரியத்தையும், விசுவாசத்தையும், சில வருடங்களுக்குப்பின், தமது கீத கீதத்தில் பாடிக் காட்டியிருக்கிறார். "கர்த்தர்தான் எங்கள் துர்க்கமும்" முதலியன.

இதோ! இப்பொழுது ஒரு சாதாரண இரதத்தில் பிரயாணமாகவிருக்கிறார். அவரோடு அம்ஸ்தொர்ப்பு என்கிற சிநேகிதனும், மற்றும் இரண்டுபேரும் உட்கார்ந்திருக்கிறார்கள். இரதத்திற்கு முன், சக்கரவர்த்தியின் தூதன் தனது தூதகோலத்தின் உடை தரித்தவனாக ஒரு வேலைக்காரனைப்போல் குதிரை ஏறி வருகிறான்.

125955

இரதம் எர்புர்த்திற்குச் சமீபமாய் எகும்போது துரகவீரரின் ஒரு வகுப்பு, எதிராக வருகிறது. அன்னவர் மித்துருக்களா, சத்துருக்களா.? அவர்கள் கல்லூரியின் தலைவரும், 40 பெரியோரும், லூத்தருக்கு மரியாதை காட்ட எதிர்கொண்டு வருகிறார்கள். பட்டண வாயிலிலும், சந்தைகளிலும், தெருக்களிலும், கும்பல் கும்பலாய் ஜனக்கூட்டம் கூடியிருக்கிறது. அடுத்த ஞாயிற்றுக்கிழமை, லூத்தா தமக்கு நன்றாய்த் தெரிந்த மடத்துக் கோயிலில், ஏராளமான கூட்டத்திற்குப் பிரசங்கிக்கிறார். யோவான் எழுதின சுவிசேஷம் 20-ம் அதிகாரம், 19-ம வசன முதலிய வசனங்களிலடங்கிய பிரசங்க வாக்கியம், உயிரோடெழுந்த இரட்சகர் சீஷர்களுக்குத் தரிசனையாகி "உங்களுக்குச் சமாதானம். பிதா என்னை அனுப்பினதுபோல் நானும் உங்களை அனுப்புகிறேன்." என்றார் என்பதே.

அவருடைய வல்லமையான பிரசங்கத்தைக் கேட்டவர்களிலொருவன்; "சந்நியாசக்கோலம் புரிந்த லூத்தரை எர்புர்த்தில் பிரசங்சங்கிக்கக் கேட்டேன். கோவில் மெத்தையானது, வந்திருந்த ஜனத்திரளைத் தாஙகக்கூடாத அளவில் ஜனங்கள் வந்திருந்தார்கள். மெத்தைக் கட்டிடம் அசையவாரம்பித்ததினால், இடிந்து போகுமென்று எல்லாரும் நினைத்தார்கள். சிலர் பலகணிகளை யிடித்து அவற்றின் வழியாக வெளியே குதிக்க யோசிக்கும்போது, லூத்தர் அவர்களை யமர்த்தி, நீங்கள் அஞ்சாதிருங்கள். பிசாசு உங்களைப் பயமுறுத்தப் பார்த்தும், உங்களை மோசமணுகாது என்றார். ஒரு மோசமும் நடக்கவில்லை." என்றெழுதி யிருக்கிறான்.

லூத்தர் சாஸ்திரியார் வொர்ம்ஸ் நகருக்குப் பிரயாணஞ் செய்கையில் வழியில் பல கஷ்டங்களிருந்தும், ஓர் தடவை பலமான வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தும் லூத்தர் தமக்குக் குறிக்கப்பட்ட தேதியில் வொர்ம்ஸ் நகரஞ் சேர்ந்து, ஏப்பிரல் மீ 16 உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஓர் சின்ன வண்டியில் நகர் வாயில் மார்க்கமாய் உட்பிரவேசித்தார். பெயர் பெற்ற இந்தச் சந்நியாசியைக் காணவேண்டி ஆர்வமுடையவராய் அபரிமிதமான ஜனங்கள வீதிகளிலே நின்றார்கள். லூத்தா இறங்க வேண்டிய மடத்திற்கு முன்பாக வண்டி போய் நின்றது. வண்டியை விட்டுக் கீழிறங்கும்போது "ஆண்டவர் என்னோடிருப்பார்" என்ற வார்த்தைகளைக் கூறிக்கொண்டிறங்கினார்.

மறுநாள் அருணோதயத்தில் சக்கரவர்த்தியின் தூதன் ஒருவன் லூத்தரிடம் சென்று, அன்று சாயந்திரம் 4 மணிக்கு அவர் சக்கரவர்த்திக்கும் இராச்சிய சங்கத்திற்கு முன்பாக, சக்கரவர்த்தி வசிக்கும் அத்தியக்ஷர் அரண்மனையில் ஆஜராக வேண்டுமென்றாக்கியாபித்தான். அன்று சாயந்திரம் சுமார் 4 மனிக்கு லூத்தர் புறப்படும்போது தெருக்களில் நடக்க இடமிராதபடி ஜனத்திரளின் கும்பல் செறிந்திருந்தது. ஆகையால் லூத்தர் பெரிய வீதிகளின் மார்க்கமாய்த் தாம் செல்லக் கூடாதவராய் ஓர் பின் வாயில் வழியாகச்சென்று சில சிறுவீதிகளின் மூலமாய் அரண்மனைக்கேகினார்.

இராஜ்ய சங்க மண்டபத்திற்குட் பிரவேசிக்கும் போது கீர்த்தி பெற்றவோர் யுத்தவீரன், லூத்தரை வெகுவாய் தைரியப்படுத்தினுன். அவன் அவரை முதுகில் தட்டிச் "சின்னச் சந்நியாசியே, சின்னச் சந்நி யாசியே, நானும் என் வீரரும் கொடிய யுத்தங்களிலும் அனுபவித் திராத அத்தனை அகோர பயங்கர யுத்தத்திற்கு நீ யேகுகின்ருய். ஆகி லும் நீ சரியான மார்க்கத்தில் சென்று, உனது மனத்தைரியத்தை உன்னை விட்டகற்ருதிருந்தால், கர்த்தர் உன்னைக் கைவிடமாட்டார்." என்ருன்,

இரண்டு மணி நேரங் காத்திருந்த பின்னர் லூத்தர் சக்கரவர்த்தி யின் ஆசனத்திற்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டார். அவரைச் சுற்றிலும் என்ன பிரகாசம்! என்னமகிமை!! இதோ! சக்கரவர்த்தி தமது சகல மகிமையோடும் நவரத்தின கசிதமான அரியாசனத்தில் ஆங்கு வீற்றிருந்தார். சக்கரவர்த்தியின் ஒரு மருங்கில், நியமனப் பிரபுக்களும், சிற்றரசர்களும், மற்றும் பல சீமான்களும் தங்கள் தங்கள் அந்தஸ்தின் பிரகாரம் உடை தரித்தவர்களாய் வீற்றிருந்தனர். பிரதான அத்தியக்ஷர் களும், அத்தியக்ஷர்களும், மற்றும் திருச்சபையின் உயர்தர உத்தியோ கஸ்தர்களும் மற்ருேர் மருங்கில் வீற்றிருந்தனர். பூலோக சக்கரவர்த்தி தமது பரிவாரத்துடன் கொலு வீற்றிருந்த மாட்சிமையான காட்சி லூத் தரின் மனதை ஒரு நிமிடநேரம் பேதிப்பித்தது. ஆண்டு வீற்றிருந் தோர் அனைவருடைய நாட்டங்களும் லூத்தரின் மேல் நாட்டமாயிருந் தன. பெரிய அமைதியுண்டாயிருந்தது.

பாப்புவின் அநுசாரிகளில் ஒருவன் தனதிருக்கை விட்டெழுந்து, உரத்த தொனியுடன், "மார்த்தீன் லூத்தரே, பரிசுத்தரும், மகா வல்லப மும் மகிமைப் பிரதாபமும் வாய்ந்துள்ளவருமான மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியவர்கள், மா இராஜ்ய சங்கத்தின் ஆலோசனையின் பேரில் உன்னை மீண்டுத் தமது அரியாசனத்திற்கு முன்பாகவழைத்து, இரண்டு காரியங்கள் கேட்கிருர். முதலாவது இந்த மேஜையின் மேலிருக்கிற புத்தகங்கள் உன்ஞல் பிரசுரிக்கப்பட்டனவா? இண்டாவது அவற்றின் பொருள்களை மறுக்கிருயா, அன்றி ஒத்துக்கொள்ளுகிருயா?" என்று வினவினுன்.

லூத்தரிக்கடாவிற்கு விடைபகருமுன், வித்தன்பர்க்கைச் சேர்ந்த இரோணிமூஸ் ஷொர்க் சாஸ்திரியார் முந்தப் புத்தகங்களின் பெயர் வாசிக்கப்படக் கடவதென்று சபையோர் மத்தியில் உரத்த தொனி யுடன் கூறினுர். அங்ஙனமே பெயர்கள் வாசிக்கப்பட்டன. அவற்றில் முக்கியமானவை லூத்தர் முந்தின வருடம் பிரசுரித்திருந்த மூன்று புத் தகங்களாகும். அவையாவன:— 1. திருச்சபையின் சீர்திருத்தலைப் பற்றிக் கிறிஸ்தவ ஜெர்மனி தேயத்து மேல்குலத்தாருக்கு எழுதிய நிரு பம். 2. திருச்சபையின் பாபிலோனியச் சிறையிருப்பு. 3. கிறிஸ்தவ சுயாதீனம் என்பவைகளே.

லூத்தர் தாம் எழுதிய நூற்களின் பெயர் வாசிக்கப்பட்ட மாத் திரத்தில் வாய் திறந்து பேசவாரம்பித்தார். முதன் முதல் அமர்ந்த

தொனியுடன் கொஞ்சம் பயந்தவர்போல விடைபகர்ந்து அப்புத்தகங்களைத் தாமே பிரசுரித்ததாக வொப்புக்கொண்டார். அப்பால் இரண்டாங் கேள்வியைக் குறித்து யாது பதிற் கூறுகிறூர். "இதுவோ, விசுவாசத்தையும், ஆத்துமாக்களின் இரட்சிப்பையும், வானத்திலும் பூமியிலும் உயர்ந்ததும் மகா முக்கியமானதுமான தேவ வசனமென்கிற பொக்கிஷத்தையும் குறித்ததாயிருக்கிறது. ஆதலால் நான் யோசனையில்லாமல் அதைக் குறித்துப் பேசத் துணியேன்; தேவ வசனத்திற்குச் சங்கைக் குறைவும் என் ஆத்தும இரட்சண்யத்திற்கு மோசமும் எய்தாவண்ணம் யான் பதிலளிக்கத் தக்கதாக, சக்கரவர்த்தியவர்கள் அடியேனுக்குத் தவணை யளித்தருளப் பிராத்தித்துக் கொள்ளுகிறேன்," என்ருர்.

சக்கரவர்த்தி இராஜ்ய சங்கத்தாரோடாலோசித்து லூத்தரின் வேண்டுகோளுக்கிணங்க ஒருநாள் தவணை கொடுத்தார்.

தவணை பெற்றுக்கொண்ட லூத்தர் தமதிருப்பிடமாகிய மடத்திற்குத் திரும்பி வந்து அன்றிரா முழுவதும் ஜெபத்திலும் தியானத்திலும் போக்கினுர். சில சமயத்தில் உரத்த தொனியுடன் தமதுள்ளக் கிடக்கையை ஜெபத்தில் வெளியிட்டார். ஓர் சிநேகிதன் அவருடைய ஜெபத்தின் சில வார்த்தைகளைக் குறித்து வைத்திருக்கிருர். லூத்தரின் உள்ளான இருதயத்தில் திட நம்பிக்கையும் பெலனும் கிடைத்தது. அவருடைய நம்பிக்கையான ஜெபம் அதையவருக்களித்தது.

மறுநாளில் இராஜ்ய மண்டபத்திற்கேக நேரமாகும் போது, அவர் வேத புத்தகத்தைத் திறந்து, அதிற்றமது கரத்தை வைத்து, வலது கரத்தை வானத்திற்கு நேராக வுயர்த்தித் தாம் சுவிசேஷத்திற்கு உண்மையாயிருந்து, தமது விசுவாசத்தை யறிக்கையிடவும் தேவையானல், தம்முடைய சொந்த உதிரத்தால் தமதறிக்கையை உறுதிப்படுத்தவும் ஓர் பரிசுத்த ஆணையை யிட்டார்.

சாயந்திரம் 4 மணிக்குச் சக்கரவர்த்தியின் தூதன் லூத்தரை அழைப்பித்தான். ஜனக் கும்பலின் நெருக்கத்தினுல் இரண்டு மணி நேரம் அதிகமாய்த் தாமதிக்கலாயிற்று. லூத்தரோ வெகு அமைதியாயிருந்தார். சதாகாலமும் பராபரனைத் தியானித்த வண்ணமாயிருந்தபடியால் பராபரனும் அவரோடிருந்தார்.

சூரியன் அஸ்தகிரியடைந்தான், மாலை யென்னும் பெண் கையிலேந்திய இருள் என்னும் குழவி யெங்கணும் பரவினது. இருளை யகற்றத் தீபங்களை யெங்குமேற்றினுர்கள். இராஜ்ய மண்டபத்தில் எரியும் தீபங்களின் கதிர்ப்பிரபைகள் பலகணி வழியாய் வெளிச் சென்று லூத்தரிருந்த வெளிப்புறத்தில் வீசினது.

கடைசியாய்க் கதவங்கள் திறக்கப்பட்டன. லூத்தர் மண்டபத்துட் பிரவேசித்தார். இப்போது லூத்தருக்கு மனமயக்கமும், அச்சமும் அணுவளவுமின்று. மனதில் சமாதானமுள்ளவராய்த் தமது புத்தகங்களின் பொருளைக் குறித்துத் தைரியமாகவும் மனத்தாழ்மையாகவும் உபந்நியாசித்தார். "நான் தப்பான போதகத்தைப் போதித்ததாக எவ

ஞவது அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் எழுதியுள்ள பரிசுத்த வேதாகமங்களைக் கொண்டு ரூபிக்கக் கூடுமானல் மறுப்பேன், அன்றேல் ஒருக்காலும் மறுக்க முடியாது" என்றார்.

பெரும்பான்மையர் வெகு பிரமிப்போடு இந்த வுபந்நியாசத்தைக் கேட்டார்கள். சற்றுநேரம் சென்ற பின்பு பாப்புவின் அநுசாரிகளில் ஒருவன் எழுந்து மகா கோபாவேசமாய், "நாங்கள் கேட்ட கேள்விக்கு நீ விடை பகரவில்லை. தெளிவும் திட்டமுமான உத்தரவு வேண்டும். மறுப்பாயோ அல்லவோ?" என்று கேட்டான்.

லூத்தர் மாறுத்தரமாகச் சத்திய வேதத்தின் சாட்சியினலாவது மற்றத் தெளிவான நியாயங்களினலாவது என் தப்பிதத்தை ரூபித்தாலொழிய நான் கூறிய பரிசுத்த வேத வசனங்களில் நிலைத்திருக்க வேண்டும். என் மனச்சாட்சி தேவ வசனத்தில் கட்டுப்பட்டதாயிருக்கிறது. என்னல் மறுக்க முடியாது, அப்படிச் செய்ய என் மனம் எனக்குத் துணிவளிக்கவில்லை. ஏனெனில் மனச்சாட்சிக்கு விரோதமாய் நடப்பது கஷ்டமும் புத்தியீனமும் மோசமுமாயிருக்கின்றது. ஆண்டவர் எனக்குத் துணைபுரிவாராக. நான் இங்கு நின்று வேறுவிதமாய்ச் செய்ய முடியாது ஆமேன்" என்று கூறி முடித்தார். பெரிய அறிக்கை செய்தாயிற்று, சற்று நேரத்திற்கப்பால், லூத்தரை யனுப்பிவிட்டார்கள். எட்டு மணிக்கு அவர் மடத்தில் பிரவேசிக்கும்போது தமது கரத்தை நீட்டி "முடிந்தது, முடிந்தது" என்று உரத்துக்கூறினர். ஆண்டவர் ஆச்சரியமான விதமாய்த் தமதூழியக்காரனை ஸ்திரப்படுத்தி, தேவ வசனத்திலும் விசுவாசத்திலும் அவரைப் பாதுகாத்து வந்தார்.

1868-ம் வூத்தில் சீர்திருத்தலைக் காட்டும் ஓர் ஞாபகச் சின்னம் இயற்றப்பட்டது. 12 வெண்கலச் சுரூபங்கள் செய்யப்பட்டன. நடுவே லூத்தர் வானத்தை அண்ணாந்து பார்க்கிறவராக நிற்கிறார். அவரைச் சுற்றிலும் சீர்திருத்தலின் முன்றூதர் நிற்கிறார்கள். அப்புறம் பிரதரிக்ஞானி என்கிற நியமகப்பிரபு, மெலாங்தோன் முதலிய லூத்தரின் உடன் தோழர்களிருக்கின்றார்கள். நிதானமாக இந்த ஞாபகச் சின்னம் வொர்ம்ஸ் நகரில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. லூத்தரின் சுரூபத்தின் கீழ், "நான் இங்கு நின்று வேறு விதமாய்ச் செய்யக் கூடாது. ஆண்டவர் எனக்குத் துணைபுரிவாராக" என்கிற வார்த்தைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஏப்ரல் மீ 26 உ யாதொரு மோசமின்றி லூத்தர், வொர்ம்ஸ் நகரைவிட்டுப் புறப்பட்டார். அடுத்த மாதத்தில் பாப்புவின் ஏவுதலின் பேரில், லூத்தர் இராஜ்யத்திற்குப் புறம்பாக்கப்பட்டார். "ஒருவனுகிலும் அவருக்கு அன்னபானதிகள் கொடுத்து அவருக்குத் துணை செய்யக் கூடாது. அவரைக் கொன்று போடுகிறவனுக்கு தண்டனையில்லை." என்று பிரசுரிக்கப்பட்டது. அவர் முன்னர் சபைக்குப் புறம்பாக்கப்பட்டது போல் இப்போது இராஜ்யத்திற்குப் புறம்பாக்கப்பட்டார். லூத்தர் பிள்ளைக்கொத்த விசுவாசத்தில் யாவற்றையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தார். கர்த்தரோ அவரைக் கைவிடவில்லை.

## வர்த்புர்க் கோட்டை.



பிரதரிக்ஞானி என்ற பிரபுவின் சேனை லூத்தரை வழிமறித்து வர்த்புர்க் கோட்டைக்கு ஏகுதல்.

1521-ம் வருஷம் மே மீ 24உ லூத்தர் தமது இரதத்தில் பிரயாணமாயிருக்கும்போது, கடவுள் தம்மை ஆச்சரியமான விதமாய்க் காப்பாற்றினதைக் குறித்து நன்றி பாராட்டி சதாகாலம் தமது நினைவில் வைத்திருந்தார். இரண்டு சிநேகிதர் அவருடன் வண்டியிலிருந்தார்கள். திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. குதிரைவீரர் பலர் சேர்ந்து வந்து, லூத்தரை வண்டியினின்றிழுத்து, ஓர் போர்ச்சேவகனணியும் சால்வையை யவர்மேல்போட்டு, ஒரு பரியின்மேலேற்றி உடனே புறப்பட்டார்கள். நடுநிசியில் ஓர்பலத்த கோட்டையண்டை வந்து சேர்ந்தார்கள். புரிசையின் கதவங்கள் திறக்கப்பட்டன. லூத்தர் உட்பிரவேசித்த மாத்திரத்தில் மறுபடியும் கதவங்கள் சாத்தப்பட்டன.

லூத்தர் பிடிபட்ட வதந்தியெங்கணும் பரம்பினது. அவருடைய பகைவரும் நண்பரும் அவர் இறந்ததாக வெண்ணினார்கள். "ஐயோ என் தேவனே லூத்தர் மரித்தாராகில் யாரெமக்கினிச் சுத்தசுவிசேஷத்தைப் பிரசங்கிப்பார்" என்று லூத்தரின் பிரபந்தங்களால் சமாதானத்தை

யும் விடுதலையையும் கண்டடைந்த, பெயர்போன சித்திரக்காரனாகிய ஆல்பர்ட்வீரர் எழுதினர்.

லுத்தரைப்பிடித்துச் சென்றவன் ஒரு சத்துருவல்ல. அவரது மித்திரரும் சொந்த அரசருமாகிய பிரதரிக் ஞானியென்பவர். லுத்தர் மேல் எழும்பியிருக்கும் கொந்தளிப்புத் தீருமட்டும் அமைதியாயிருக்குமாறு, நிர்பயமான ஓரிடத்திற்குக் கொண்டுபோகுமாறு திட்டஞ்செய்திருந்தார். அவ்வாறே அவர் ஐஸ்னக்குப்பட்டணத்திற்குச் சமீபமான வர்த்புர்க்கோட்டையில் மறைத்து வைக்கப்பட்டார். சந்நியாசக்கோலத்திற்குமாருகப் போர்வீரனின் உடையும், கழுத்தின்மேல் பொற்சங்கிலியும், பக்கத்தில் பட்டயமும் அணிந்திருந்தார். வொர்ம்ஸ்நகரில் உடனிருந்த கோட்டையதிபதி தவிற இந்தக்கைதி யாரென்று மற்றையோரெவருமறியார்.

பத்துமாதங்களாக லுத்தர் ஆங்குத்தங்கியிருந்தார், அக்காலத்தை அவர் வீணாய்ப்போக்கவில்லை. கர்த்தர் தமக்குள்ளும் தம்மைக்கொண்டும் நடப்பித்த செயல்களைப்பற்றி அமைதியாய் தியானித்து. மற்றும் செய்ய வேண்டிய வேலைகளையும் உணர்ந்தறியச் சமயமிருந்தது. இங்கு வெகு ஜெபத்தோடும் போராட்டத்தோடும் கணக்கில்லா ஜனங்களுக்குப் பேராசீர்வாதத்தை யளிக்கவோர் முக்கியமான வேலைசெய்தார். அதாவது புதியஏற்பாட்டை முழுவதையும் மூலபாஷையினின்று சுயபாஷையில் மொழி பெயர்த்தார். இனிததாகமுள்ள எவனும் நேரே ஜீவநதியண்டை சென்று தடையின்றி விடாய்தணித்துக் கொள்ளலாமல்லவா?

## ஏனவூர்ச் சத்திரம்.

ஏனவூரில் கறுப்புக்கரடி யென்று பெயர்கொண்ட வோர் சத்திரமுளது. 1525-ம் வருஷம் மார்ச்சு மீ 25௳ சுவித்சர்லாந்து தேயத்திலிருந்து வித்தன்பர்க் கல்லூரியில் கலைபயிலச்சென்ற மாணவரிருவர் ஆங்குத்தங்கினர்கள். இம்மடத்தில் லுத்தரைச் சந்தித்த சந்திப்பைக் குறித்து அம்மாணவர்கள எழுதியிருக்கிற தெவ்வாறெனில், “நாங்கள் மடத்தைச்சேரவும் ஓர் மேஜையண்டையில் ஒரு புருஷன் உட்கார்ந்து சிறு புத்தகமொன்றை வாசித்துக்கொண்டிருந்தார். அவர் எம்மை வெகு பட்சமாய் ஏற்றுக்கொண்டு, தமதருகில் உட்காருமாறழைத்தார். எமது சப்பாத்து மிகவும் அசுசியாயிருந்ததினால் நாங்கள் உட்பிரவேசிக்கத் தைரியங்கொள்ளாமல், வாயிலண்டையிலுட்கார்ந்திருந்தோம். அவரது அன்பையும் அனுதாபத்தையும் நோக்கிச்சற்று திடங்கொண்டு அவரையண்மி, மேஜையண்டை யுட்கார்ந்தோம். அவர் போர்வீரனினுடை தரித்துப் பட்டயம் உடையவராயிருந்தபடியால், யுத்தஞ்செய்கிற ஓர் உயர்குலத்தான் என்று நினைத்தோம். அவர் தமது வலதுகரத்தால் பட்டயத்தின் உறையைப்பிடித்து இடது கரத்தால் புத்தகத்தைத் தாங்கியிருந்தார், எங்களைக்குறித்து விசாரிக்கத்துவக்கினர். “நீவிர் சுவித்ஸர்லாந்து தேயத்தினரோ”? என்று வினவினர். ஆம், என்று நாஙகள்

பதிற்கூற, "நீவிர் வித்தன்பர்க் ஊருக்கேகினல், நம் தேயத்தினர் இருவரை ஆண்டுக்காண்பீர்". என்ருர்.

அப்பால் நாங்கள் அவரை நோக்கி, ஐய, மார்த்தீன் லுத்தர் சாஸ்திரியார் இப்போது வித்தன்பர்க்கில் இருக்கிருரா? அன்றி வேறெங்காகிலும் இருக்கிருராவென்று கேட்டோம். எமது வினவிற்குத்தரமாக, லுத்தர் வித்தன்பர்க்கில் இல்லையென்பது நிட்சயமாய் நானறிவேன். ஆகிலும் சிலதினங்களுக்குட் அங்குச்செல்வார் எனக்கேள்வி; பிலிப்பு மெலாங்தோன் என்பார் ஆங்கிருக்கின்ருர். அன்னவரிடம் கிரேக்கப் பாஷையையும் மற்றச் சாஸ்திரிகளிடம் எபிரேயப் பாஷையையும் நிவிர் கற்றுக்கொள்ளலாகும். ஏனெனில் இவை சத்திய வேதத்தை அறிந்து கொள்வதற்கேற்ற கருவிகளாம் இவ்விரு பாஷைகளையும் அவசியம் கற்கவேண்டும்" என்ருர். இம்மாற்றங்களுக்கு உத்தரமாக, ஆண்டவருக்குத் தோத்திரம், கர்த்தர் ஜீவனையும் சுகத்தையும் கொடுத்தால், நாங்கள் லுத்தர் சாஸ்திரியாரைப் பார்த்துக் கேட்கும் மட்டும் இளைப்பாற மாட்டோம். ஏனெனில் அவரினிமித்தமே இந்தத் தூரப்பிரயாணத்தைச் செய்கிறேம் என்றேம்.

இவ்வாறு நாங்கள் சம்பாஷிக்கவே, சம்பாஷணையின் வாயிலாக இவர் கல்வி கேள்விகளிலுயர்ந்த மகா மேதாவியென்றும், சாதாரணப் போர்வீரனல்லவென்றும் அறிந்தோம்.

"சுவித்ஸர்லாந்து தேயத்தில் மார்த்தீன் லுத்தரைப்பற்றி எவ்வித அபிப்பிராயம் கொள்கிருர்கள்" என்று வினவினர்.

ஐய, அவரைப்பற்றி எங்கும் பலவிதமான அபிப்பிராயங்களிருப்பதுபோல, அங்கும் சிலர், ஆண்டவர் அவரைக்கொண்டு தமது சத்தியத்தை வெளிப்படுத்தித் தப்பறைகளைத் தெளிவாக்குவார் என்று அதிகமாக அவரைப் புகழ்ந்து உயர்வாகப்பேசி, ஆண்டவரைத் தோத்தரிக்க, வேறுசிலர், விசேஷமாகக் குருக்கள் அவரைப் பாதகனுகிய பதிதனுகத் தீர்த்திருக்கிருர்கள் என்றேம்.

இங்ஙனம் வார்த்தையாடிக்கொண்டிருக்கையில் என் சிநேகிதன் அந்தப் போர்வீரன் வாசித்துக்கொண்டிருந்த புத்தகத்தை யெடுத்து வாசித்தான். அஃது எபிரேயப்பாஷையில் எழுதப்பட்ட சங்கீதப்புத்தகம். அப்போது எனது மித்திரன் 'நான் இந்த பாஷையைக் கற்றுக்கொள்ள என் கைவிரலை தெட்சணையாக அளிப்பேன்' என்ருன்.

'நீவிர் சுறுசுறுப்பாய் உழைத்தால் அதைக் கற்றுக்கொள்ளக் கூடும். நானும் அப்படித்தேறப் பிரயாசப்பட்டு நாடோறும் அப்பியசிக்கிறேன்' என்ருர் லுத்தர் சாஸ்திரியார்.

வெகுநேரங்கழிந்த பிற்பாடு சத்திரக்காரன் என்னைக் கூவினன். நான் ஒருவாறு தகாதகாரியம் ஏதுவாகிலும் செய்துவிட்டேன் என்று அழைக்கின்ருனேவெனச் சற்றஞ்சினேன். சத்திரக்காரனே, நீவிரிருவீரும் லுத்தரைப் பார்க்கவும் கேட்கவும் ஆர்வமுற்றிருக்கின்றீர்களென அறிகின்றேன், உங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற அவர்தான் லுத்தர் சாஸதிரியார் என்ருன். அவன் எமைப்பரிகசிக்கிறதாக

நினைத்து,ஐய, நீர் பரிகாசமாக அங்ஙனம்கூறி ஓர்போலி லுத்தரைக் கொண்டு எமதாசையை நிறைவேற்றிக்கொள்ளுமாறு பார்க்கின்றீரோ வென்றேன். அதற்குச் சத்திரக்காரன் இல்லை, இல்லை, அவர் லுத்தர் சாஸ்திரியார்தான். ஆகிலும் நீங்கள் அவரை அறிந்ததாகக் காட்டிக் கொள்ளவேண்டாம் என்றான்.

இவ்வாறு சத்திரக்காரன் கூறியும் நான் அவன் வார்த்தைகளை நம்பாமல், மறுபடியும் மேஜையண்டை போய் உட்கார்ந்தேன். சத்திரக்காரன் கூறினதை யென் தோழனுக்கறிவிக்கவுன்னினேன். ஆகையால் என் தோழனுடைய செவியில் மிக்க இரகசியமாக ஈங்குட்கார்ந்திருக்கிற இவரே மார்ட்டின் லுத்தர்சாஸ்திரியார் என்று சத்திரக்காரன் கூறுகின்றான் என்றேன். அவனும் அதை நம்பாமல் சத்திரக்காரன் அங்ஙனமியம்பியிரான். அவன் புத்தன் என்று கூறியிருப்பான். அஃது லுத்தர் என நின்செவியிற் கேட்டுளதுபோலும், (புத்தன் என்பவர் லுத்தருக்கு வெகு அனுகூலமாயிருந்தவரும், கல்வியிற்றேறினவருமான ஓர் சிறந்த யுத்தவீரன்) லுத்தர் சந்நியாசியாகவிருந்ததாலும் எங்களோடுரையாடினவர் போர்வீரனின் கோலமுடையவராக இருந்தமையாலும் அவர் புத்தன் என்பவராகவிருக்கலாம் என்று நானும் நினைக்கிறேன், என்று என் சிநேகன் கூறவே, இவ்வாறு நாங்கள் உரையாடிக்கொண்டிருக்கையில், அதே மடத்தில் தங்குவதற்கு இரண்டு வியாபாரிகள் வந்தார்கள்.

ஆங்கு வந்தவர்களில் ஒருவன் ஒரு புத்தகத்தை யெடுத்துத் தன்னருகில் வைத்தான். 'அது என்ன புத்தகம்' என்று யுத்தவீரன் கேட்க, "சில சுவிசேஷ நிருபவாக்கியங்களுக்கு லுத்தர் சாஸ்திரியார் செய்திருக்கிற வியாக்கியானப் புத்தகமிது. இப்போதானிப் புத்தகம் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துளது. தாங்களிதைப் பார்த்திலையோ," வென்று வியாபாரி கூறினன். அப்புதிய புத்தகத்தில் ஒன்று தமக்கும் சீக்கிரம் கிடைக்கும் என்று போர்வீரர் கூறினர்.

அதற்குள் சத்திரக்காரன் "ஐயன்மீர், போஜனவேளையாயிற்று. எல்லீரும் போஜனத்திற்கு வாருங்கள்" என்றழைத்தான்.

மாணவராகிய நாங்களிருவரும் அவனைக்கண்டு எமக்குப் பிரத்தியேகமாய்க் கொஞ்சம் சொற்பாகாரம் கொடுக்குமாறு கேட்டோம். சத்திரக்காரனோ "வாலிப சிநேகிதரே நீவிர் அவர்களோடு சும்மா சாப்பாட்டுக்குட்காருங்கள், நான் அநியாயமாய் உம்மிடம் பணம் வசூலிக்கமாட்டேன்," என்றான்.

போர்வீரர் இம்மாற்றங்கேட்டு "நீவிர் ஈங்கு வம்மின். எம்முடன் போஜனம் உண்மின். நும்கணக்கையான் கொடுக்கிறேன்" என்றார்.

சாப்பாட்டில் உட்கார்ந்து சாப்பிட வாரம்பித்தவுடன் போர்வீரர் பேசத் துவக்கினர். எங்கள் சாப்பாட்டையும் மறந்து அவருடைய அமிர்த வசனங்களையே கேட்டுக்கொண்டிருக்குமாறு அத்தனை இனிமையாகவும் எழுப்புதலாகவும் அன்புநிறைந்த வார்த்தைகளால் பேசினர். அநேக மனிதர் தேசாபிமானிகளாயிருந்து ஜனங்களின்

கஷ்ட நஷ்டங்களை நீக்கப் பிரயாசப்படுவதற்குப் பதிலாக வீணை களியாட்டுகளில் தங்கள் காலத்தையும் பொருளையும் செலவழிக்கிற தற்காக வியசனப்பட்டார்.

இவ்வாறு சம்பாஷித்துக்கொண்டு சாப்பிடுகையில் வியாபாரி களில் ஒருவரும் கொஞ்சம் வயது முதிர்ந்தவருமான மனிதன் எங்கள் சம்பாஷணையில் சேர்ந்து "நான் கல்வியறிவில்லாதவனாயினும் ஒன்று கூற விரும்புகிறேன். அதாவது லூத்தர் வானத்திலிருந்து இறங்கின தேவ தூதனாகவாவது அல்லது நரகத்தினின்றேறின பிசாசாகவாவ திருக்கவேண்டும். நான் அவருக்கு முன்பாக என் பாவங்களை அறிக் கையிடக்கூடுமானால் பத்துப் பொன்னாணயங்கள் கொடுக்கச் சம்மதிப் பேன். ஏனெனில் அவரே எனக்குத் தேவையான போதனையைச் செய்வார் என்று நான் நிச்சயித்திருக்கிறேன்" என்றான்.

அச்சமயத்தில் சத்திரக்காரன் வந்து போர்வீரர் எங்கள் சாப் பாட்டுக் கணக்கைத் தனக்குக் கொடுத்து விட்டதாகக் கூறினான். நாங்கள் அவருடைய பெருந்தன்மைக்காகவும் ஈகையுள்ள குணத்திற் காகவும் அகமகிழ்ந்தோம். அதன் பின்னர் அவர் எழுந்து எனது கரங் களைப்பற்றி, எமக்கு விடையளித்து "நீவிர் வித்தன்பர்க்கெய்திய பின் சுல்ப் சாஸ்திரியாரைக்கண்டு, அவரை நான் மினவினதாகக் கூறுங் கள்" என்றார். இதை நாங்கள் வெகு சந்தோஷமாய்ச் செய்வோம், ஆனால் யாருடைய நாமத்தில் இந்த மினவுதலைக் கூறுவது என்று வினவினோம். "வரப்போகிறவர் தங்களை மினவினர் என்று கூறி னால் அவர் அறிந்துகொள்வார்," என்று விடை பகர்ந்து தமது படுக்கை யறைசென்றார்.

மறுநாள் அவர் பரியின்மேல் இவர்ந்து வித்தன்பர்க்கிற்குச் சென்றார். நாங்கள் வேறு பாட்டை மார்க்கமாய் அதே பட்டணம் போனோம். நாங்கள் வித்தன்பர்க் சேர்ந்து ஐந்து நாட்கள் சென்ற பின் சுல்வ் சாஸ்திரியாரைப் பார்க்கச் சென்றோம். ஆண்டேகி அறைக்குட் சென்று காண்கையில், ஏனுவில் ஆங்குக் கண்ட போர் வீரர் சுல்வ் சாஸ்திரியார், பிலிப்பு மிலாங்தோன், யுஸ்துஸ் யோனஸ், அம்ஸ்தொர்ப் முதலானோருடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கக் கண்டு மட்டில்லா வுவகையெய்தி வியப்படைந்தோம். போர்வீரர் வித்தன் பர்க்கில் இல்லாதபோது நிகழ்ந்தனயாவையும் அவருக்கியம்பிக்கொண் டிருந்தார்கள்.

போர்வீரர் எங்களை வரவேற்று உபசார வார்த்தைகள் கூறி, தாம் கூறின மிலாங்தோன் சாஸ்திரியார் இவரே என்று அவரை யெமக்குக் காட்டினர்." என்று எழுதியிருக்கின்றார்கள்.

**1522-ம்** ஆண்டாகிய இந்த வருஷம், லூத்தர் சாஸ்திரியாரை நாம் பார்க்கும்போது தலையை யேறெடுத்து நிமிர்ந்து நடக்கிறார். அவருடைய கண்கள் அன்றலர்ந்த செந்தாமரைபோல் விகவிதமாகவும், வானத்து நட்சத்திரம்போல் பிரகாசமாகவுமிருந்தன.

## போர்வீரன் சங்கீதக்காரனுனது.

1522-ஆம் ஜூலை 1௨ விடியற்காலமாகிக் கீழ்த்திசை சிவந்தது எப்படித்தோன்றிற்றென்னில், அகுஸ்தீன மடத்துச் சந்நியாசிகளிருவரைக் கொல்லும்படி 5-ம் சார்லுவாகிய சக்கரவர்த்தி நினைத்த கொடுமையைக் கண்டு வானங் கோபித்தாற்போல சூரியன் உதயத்திற்கு முன்னே இரத்தம் முகத்திலே பாய்ந்த தன்மைத்துக் கீழ்திசை சிவந்தது. போர்முரசின் முழக்கம்போலக் கடல் முழங்கா நிற்கச் சூரியனெழுந்து, கொடிய சக்கரவர்த்திமேல் போர் செய்யும்படி கதிர்களையம்புகளாகவிட்டுச் சிவந்த முகத்தோடுதோன்றி, இவ்விருவருக்கு வந்த துனபங்களைத்தான் பொறுக்கமாட்டாத தன்மையிற்றோன்றிற்று. இங்ஙனம் சூரியன் கனன்றெழுந்து கதிர்க்கரங்களை நீட்டிப் பகல் செய்தான். சக்கரவர்த்தி லுத்தரின் பதிதக்கொள்கையை நெருப்பினாலும் பட்டயத்தினாலும், அடியோடழித்துவிடத் தீர்மானித்து இந்த இரண்டு சந்நியாசிகளைப் பதிதர்களாகத் தீர்த்துக் கொல்கிறதற்கு பிரிசில் பட்டணத்து மைதானத்தில், கட்டைகளையடுக்கிவைக்குமாறு பணித்திருந்தான். அங்ஙனமே செய்யப்பட்டது பெரியோராதிய பட்டணத்துச் சகல ஜனங்களும் கூடி வந்திருக்கிறார்கள். தைரியத்தோடும், விசுவாசத்தோடும், சுவிசேஷத்தைப் பிரசங்கித்த இந்த இரண்டு சந்நியாசிகளை முதற்பலியாகக் கொல்கிறான். அந்தோ! என்ன பரிதாபம், பரிதாபம்!! கிறிஸ்துவையே இலக்காக நோக்கியிருப்பதை, மற்றுமோர் கிறிஸ்தவ சக்கரவர்த்தி இவ்வாறு படுகொலை புரிவது பாபிலோனியக் கொடுமையினும் கொடியதன்றோ? இந்தப் பாதகத்தைப் பார்த்திருந்தவொரு உரோமான் சபையான், ஆட்சேபத்தோடு அதைப்பற்றியெழுதி, “இவ்விரண்டு பதிதரும், அகமகிழ்ச்சியோடும், முகமலர்ச்சியோடும் தங்களுடைய முகத்தினின்று பிரகாசந் தோன்ற அப்போஸ்தல விசுவாசத்தை அறிக்கையிட்டுப் பணிந்து உம்மையே என்கிற தோத்திர கீதத்தைப் பாடிக்கொண்டு நிற்கும்போது, சிகியும், புகையும் அவர்கள் வாயை அடைத்தது” என்றான்.

இப்பரிதாபமான படுகொலையின் செய்தி வித்தன்பர்க்குக்கு வந்து லுத்தருக்கு எட்டினபோது, அவர் கொண்ட துயரத்திற்களவு வுரைப்பதியாவராலும் கூடாது. ஆகிலும் ஓர் வகையில் பரிசுத்த மகிழ்வெய்தினர். அதாவது தேவ சத்தியத்தை யிவ்வளவாகத் துன்பப்படுத்துகிறார்கள் என்பதற்குத் துக்கமும், இரண்டு வாலிபச் சந்நியாசிகள், இவ்வளவு மனோதிடமாய் தேவ சத்தியத்திற்காக சாட்சி கொடுத்தார்கள் என்கிற மகிழ்ச்சியும் கொண்டார். அவர் உடனே ஆசனத்தமர்ந்து, அந்தப் பக்கங்களில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த ஆறுதலையும் தைரியத்தையுங் கொடுக்கத்தக்க ஓர் நிருபத்தை எழுதினர். அதின் துவககம் வருமாறு.

உலாந்து, பிரபண்ட், பிலண்டர்ன் முதலாய தேயங்களில் உள்ள கிறிஸ்துவிற்குள்ள சகல அன்பான சகோதரர்களுக்கும், சகல

7A 10 56

விசுவாசிகளுக்கும், பிதாவாகிய பராபரனாலும், கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினாலும், கிருபையும் சமாதானமும் உண்டாக.

இருளின் பயங்கரமான அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டு, சேவலமாக இங்குமங்கும் திரிந்து, அந்திக் கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்த நமக்கு இதுவரையிலும் நமது பாவங்களினிமித்தம், மறைவாயிருந்த தமது ஆச்சரியமான வெளிச்சத்தை இக்காலத்தில் மறுபடியும் வெளிப்படுத்தின, சகல இரக்கங்களின் பராபரனுக்குத் துதியும், தோத்திரமும் உண்டாவதாக, நாம் மறுபடியும், பட்சிகளின் சத்தத்தைக் கேட்கவும், புஷ்பங்கள் நமது தேயத்தில் புஷ்பிக்கவும் ஏற்றகாலம் வந்திருக்கிறது" என்றெழுதினர்.

உலாந்து தேயத்துக் கிறிஸ்தவர்கள், இந்த இரண்டு இரத்தச் சாட்சிகளின் மரணத்தினால் கிறிஸ்துவிற்குச் சாட்சி கொடுக்கச் சமயம் பெற்றதற்கு லூத்தர் அவர்களைப் பாக்கியசாலிகள் என்று கூறி "சகல வானவரும் எத்தனைச் சந்தோஷத்தோடு இவ்விருவரின் ஆத்துமங்களை நோக்கியிருப்பர்".

"இந்த இரண்டு சந்நியாசிகளும், குறைவான இச்சீவனைவிட்டு நிறைவாகரமான நித்திய ஜீவனுக்கும், நிந்தை யவமானத்தை விட்டு, ஓயாத மகிமைப்பிரதாபம் நிறைந்த பரம எருசலேமிற்கும், போக அக்கினியுங்கூட சந்தோஷமாயுதவிசெய்திருக்கும். இதுவரையில்பொய்யான அர்ச்சய சிஷ்டர்களை உயர்த்தி வணங்கினதினால், இப்போது சரியான பரிசுத்தவான்களையும், உண்மையான இரத்தச் சாட்சிகளையும், பார்க்கவும் கேட்கவும் சமயம் பெற்றதற்கு ஆண்டவருக்குத் தோத்திரம்" என்று எழுதினர்.

சற்றுநேரந்தாமதித்து மீண்டும் பேனாவைப் பிடிக்கிறார். அவருக்குள் கட்டுண்டிருந்தவொன்று விடுதலையாகின்றதுபோல், இரத்தச்சாட்சிகளின் செய்தியினால், தமக்குண்டான துக்கமும், சந்தோஷமும் அவரைக்கவிராயர் ஆக்கினது. அவ்வாறே ஆறு கவிகளடங்கிய தமது முதல் பாட்டையெழுதி, இந்த இரண்டு இரத்தச் சாட்சிகளின் செய்தியைப்பற்றிப் பாடினர். அவர் எழுதின இந்த முதற்பாட்டு அச்சிடப்பட்டு வெகு சீக்கிரம் தேயமெங்கும் பிரசித்தமானது. அதே வருடத்தில் (1523) அவர் எழுதிய இரண்டாம் பாட்டும் பிரசுரிக்கப்பட்டது. அப்பாடலின் தலைப்பில், "ஆண்டவரின் அளவற்ற கிருபையையும் மெய்யான விசுவாசத்தையும் பற்றி மார்ட்டின் லூத்தர் சாஸ்திரியார் எழுதிய ஓர் கிறிஸ்தவப்பாடல்" என்று வரையப்பட்டுளது. (கிறிஸ்தோர்களே நாம் கர்த்தரின் முதலியன 172-ம் பிரார்த்தனை.

எர்புர்த் மடத்தின் கஷ்ட நாளிலிருந்து இந்நாள்வரைக்கும் தாம் அனுபவித்து வந்த தேவனுடைய கண்டிப்பு, ஆறுதல் முதலிய யாவையும் இந்தப் பாடலின் வழியாய்க் காட்டுகின்றார்.

அதே வருடத்தில் சங்கீத சுரத்தோடு மற்றுமோர் பாடலையும் பிரசுரித்தார். அதாவது "தாழ்விலிருந்து கூப்பிடும் என் சத்தங் கேட்டன்பாக" என்ற 161-ம் ஞானப்பாடல்,

வெகு சீக்கிரத்தில் இவருடைய பாடல்கள் சர்மானிய தேயமெங்கும் பரவி, எங்கணும் பாடப்பெற்றன. அப்பால் லுத்தரும் அவருடைய சிநேகிதரில் பலரும் அநேக நவமான பாடல்களைப்பாடிப் பிரசுரித்தார்கள். 1324-ம் ஆு நான்கு விதமான பாடற் புத்தகங்கள், அச்சிடப்பட்டன. அவைகளே சுவிசேட சபையின் முதற் பாட்டுப் புத்தகங்கள் என்றியம்பலாம். அவற்றில் லுத்தர் பாடிய பாடற்றொகை இருபத்து நான்கு. அவரியற்றிய மொத்தப் பாடற்றொகை முப்பத்தேழு. அவைகள் பெரும்பாலும், 1523-24-ம் வருடங்களிலியற்றப்பட்டன.

சீர்திருத்தலின் பரம்புதலுக்கு லுத்தரின் பாடல்கள் மிகவுதவியாயிருந்தன. உரோமான் சபையாரொருவன் வருத்தத்தோடதைக் கவனித்து, "லுத்தரின் பாடல்களை எங்கும் கேட்கலாம், ஆலயங்கள், கல்விச்சாலைகளில் மட்டுமல்ல, வீடுகள், தொழிற்சாலைகள் சந்துகள், தெருக்கள், வயல்வெளிகள் முதலிய எல்லா இடங்களிலும், அப்பாடல்களின் தொனி கேட்கும்" என்றெழுதியுள்ளான்.

லுத்தர் சாஸ்திரியார் ஒரு கவிராயர் மட்டுமல்ல இயற்கையிலே சங்கீத சாஸ்திர ஞானமுள்ளவர். அவருடைய பால்யப பருவத்திலேயே சங்கீதம் பாடுவதில் விருப்புள்ளவர் என்று முன்னமே கூறியுள்ளாம். "கர்த்தர்தான் எங்கள் துர்க்கமும்" என்ற பாடலை யியற்றி அதன் பொருளுக்கேற்ப இராகத்தையுமுண்டு பண்ணினர். சங்கீத விஷயத்தில், சக்சோனி நாட்டு நியமகப் பிரபுவின் சங்கீத வித்வான் யோவான் வல்தர் என்பவர் நல்லவுதவி புரிந்தார். வல்தர் எழுதுகோலைப் பிடித்து இராகத்தை யெழுதும்போது, லுத்தர் புல்லாங்குழலைப் பிடித்து அறையில் உலாவிக் கொண்டு வாசிப்பார். ஊதும் தொனியைக் கேட்டுக் கொண்டிருக்கும் வல்தர் அதற்கியையச் சங்கீத சுரத்தை யமைத்தெழுதிக்கொள்வார்.

முதல் இரத்தச் சாட்சிகளின் மரணமே லுத்தரைக் கவிராயராக்கினதென்று மேல் கூறியுள்ளாம். இரத்தச் சாட்சிகளானவர் அவ்விருவர் மட்டுமன்று. 1524-ம் ஆு பிரேமன் பட்டணத்திற்கருகில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த ஹென்றிக் சுற்பென் என்றவோர் அகுஸ்தீன வகுப்புச் சந்நியாசி பயங்கரமான தன்மையில் கொலையுண்டான். 1527-ம் ஆு பவேரியா நாட்டில் வியோனர்ட் கைசர் என்றவோர் சபைக்குரு இரத்தச் சாட்சியாக மரித்தார். "இயேசுவே நான் உம்முடையவன் என்னை மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளும்" என்று சிகி மண்டியெரியும் புகையிலிருந்து அவருடைய கடைசி வார்த்தைகள் புறப்பட்டு வந்தன. அவருடைய மரணத்தின் செய்தியையும் லுத்தர் எழுதி அச்சிட்டுப் பிரசுரித்தார். சிலர் நினைத்தபடி கைசர் என்ப

வரின் மரண செய்தி லூத்தருக்கெட்டின போது அவர் சுவிசேஷ சபையின் பெரிய யுத்த கீதத்தை யெழுதினுர்.

("கர்த்தர்தான் எங்கள் துர்க்கமும்" 194-ம் ஞானப்) ஆவியில் லூத்தர் இந்த இரத்தச் சாட்சிகளோடு தாமும் ஒருவராய் இருந்தபடியால், கெம்பீரத்தோடு "மாற்ருன்கள் யாவையும், ஜீவனைததானும் வாங்கினுல் கேடோ இராச்சியமல்லோ எங்களுக்கிருக்கும்" என்று பாடினுர்.

## லூத்தரின் குடும்ப ஜிவியம்.



லூத்தரும் அவர் குடும்பமும்.

1536-ம் ஸு மே மீ த்தில் ஒருநாள் மாலைப்போதில், வித்தன் பர்க் அகுஸ்தீனர் மடத்துத் தோட்டத்தில் அழகிய விநோதக் காட்சி ஒன்றேற்பட்டது. சந்நியாசிகள் வசித்து வந்த மூன்றடுக்கு மெத்தையுள்ள மடம் காலியானது. ஆங்குத் தங்கியிருந்தவர் ஒரேயொருவர், அவர் நமது மார்ட்டீன் லூத்தர் சாஸ்திரியார்தான். நியமகபபிரபு மடத்தை லூத்தருக்கு சர்வ சுதந்தர பாத்தியத்துடன் கையளித்தார். சந்நியாசிகளெல்லாம் ஆண்டுத் தங்காதேகினும், மடம் காலியானபாடில்லை. "இரப்போர்க்கு வீண் சோறு பஞ்சமோ." "ஆலிலை பூவுங்காயும் அளிதரும் பழமும் உண்டேல் சாலவே பட்சி யெல்லாந்தங்குடி யென்றே வாழும்" என்றபடி, வாலிபரும், சிறுவர் சிறுமியரும் பெரியோரும்,

எஞ்ஞான்றுங் கூடிக் கெம்பீரமாய்ப்பாடி, ஞானபரனின் கருணைத் திறத்தைக் கொண்டாடி, அவர் அளித்திருக்கும் கனி வர்க்கங்களுக்காய் மனமகிழ்ந்து மட்டில்லாத இன்பவொலி முழக்கா நிற்பர்.

விசேஷமாக லுத்தர் சாஸ்திரியார் தமக்கருளப்பட்ட சிங்காரத் தோட்டத்தைக் கண்டு களிக்கிறார். அந்த நந்தவனத்தில் மந்த மாருதம் அந்தமாய் வந்துந்துந்தோறும், தமது மெய் ஸ்பரிசத்தால் உடல் புழகித்து உள்ளம் பூரித்து ஆங்கண் அங்குமிங்கும் உலாவிக் கொண்டு, கர்த்தரின் அற்புதச் செயல்களுக்கும், மட்டில்லாத மகிமைப் பிரதாபத்திற்கும், வியப்புற்றுக் களிபேருவகை யெய்துவார். ஆண்டுத் தங்கியிருந்த பட்சிசாலங்களின் தொகுதியும் அவற்றின் வனப்பும், பாகினம் ஒத்த கோகில இசையும், தெளிதேன் அன்ன அளியின் முரல்பும் அவரை மகிழ்வித்ததன்றி, நவரத்தின கசிதமாய் விளங்கும் பலவர்ணப் புஷ்பஜாதிகளின் இயற்கை யமைப்பும் அவற்றின் வனப்பும், பொற்பொடிமானும் அவற்றின் மகரந்த வீழ்ச்சியும், அவருள்ளத்தில் களிப்பென்னும் வெள்ளப் பெருக்கையுண்டு பண்ணின. ஆதவன்பரிகள் அத்தவெற்பணுகும் மாலைப்போதில் ஓர்நாள் கூடு கட்டிக்கொண்டிருந்த இரண்டு பறவைகளைக் கண்ணுற்று ஆண்டணுகினார். அவைகள் அவர் சென்ற அரவங் கேட்டு வெருண்டு பறந்தேகின. வெருண்டேகினதற்காக ஐயோ! வென்று துக்கித்து, “என் பிரிய பட்சிகளே, என்னைக்கண்டு நீங்கள் வெருண்டோட வேண்டாம், நான் உங்கள் நன்மையையே நாடுகிறேன். நீங்கள் அதையறியீர்கள். நான் கூறினும் நம்பீர்கள். இதே விதமாக நமக்கு ஏராளமான நன்மைகளைச் செய்து, தமது சொந்தக்குமாரனை நமக்காக வொப்புக் கொடுத்து, நம்மைக் கெடுக்க மனமற்ற ஆண்டவரை நம்போம்” என்றார்.

அதன்பின்னர் ஒரு சிநேகிதனோடு உலாவிக்கொண்டு, ஓர் ரோஜாமலரைத் தமதுடையிற்றரித்துப் பேசுகிறார். “மெய்யாகவே மெய்யாகவே ஓர் மனிதன் இத்தகைய ஒரே ஒரு ரோஜாமலரைச் சிருஷ்டிக்கக்கூடுமானால், அவன் எத்தனை பெரிய சீமான் ஆகக்கூடும், கடவுள் இந்தக்கரிசல் நிலத்திலிருந்து இத்தகைய அழகான வர்ணமும், இன்பகரமான சுகந்த வாசனையும் செறிந்த புஷ்பஜாதிகளை எவ்வாறு உண்டுபண்ணுகிறார் என்று எந்த மனுஷனியம்பிக்கக்கூடும், எந்தச்சிற்பியால் இத்தன்மைத்தான சித்திரவிநோதப் புட்பத்தை ஆக்கவியலும். மனிதன் தன்னால் ஒன்றும் இயற்கையில் உண்டுபண்ணக் கூடாதவன் என்று தான் உணர்ந்திருந்தாலும், ஒரு மாடானது, காட்டிலிருக்கும் லீலியப் புஷ்பங்களைத் தன் காலால் மிதித்துக்கெடுப்பதுபோல், தேவனுடைய ஈவுகளை மதிக்காமல், துர்வகையாக உபயோகித்துக் கெடுக்கிறான்”. என்றார்.

இதுசமயம் லுத்தரோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தவர், தமது பெரிய கவலைகளில் ஒத்தாசையும் ஆறுதலும், தேடிவந்த ஒரு

சபைகுரு. இவர் இன்னும் தமது கவலையான வெண்ணங்களைப்போக்கிவிடச் சக்தியற்றவராயிருக்க, லுத்தர் சாஸ்திரியார் தமதருகிலிருக்கும் சில வியோலாப் புஷ்பங்களை யவருக்குக்காட்டி "இந்த இனிய வியோலாப் புஷ்பங்களைப் பாரும். அதன் பரிமளமானது, நாம் சுவிசேஷத்தின் சுகந்த வாசனையால் நமது சபையை ஆற்றித்தேற்ற வேண்டுமென நமக்கு நினைப்பூட்டுகின்றது. அதின் அகவிதழ் ஊதா நிறமாயிருப்பதால், துன்பத்தையும் துக்கத்தையும் நினைப்பூட்டுகின்றது. பொன்மயமான அதன் உட்பாகமோ, ஒருபோதும் மாறாத விசுவாசத்தைக் காட்டுகின்றது. ஆகையால் நமது நம்பிக்கையை ஆண்டவர்மேல் ஸ்திரமாக வைப்போமாக. அழிவுள்ளதாகிய இந்தச் சீவனில் நமக்கித்தனை பெரிய நன்மைகளைச் செய்யத் திருவுள்ளங் கொண்டிருக்கிற தேவன், அழிவற்ற நித்திய சாம்பிராஜ்யத்தில் எத்தகைய நன்மைகளைச் செய்வார்" என்று தமது சிநேகிதனை ஆற்றித்தேற்றினார். (நிற்க)

"அறன் எனப்பட்டது இல்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்பில்லாயின் நன்று"

'இல்லறமல்லது நல்லறமன்று' என்ற சாஸ்திர தர்மத்தை யனுசரித்து லுத்தர்சாஸ்திரியார் சமுசார சாகரத்தில் உட்பட்ட விபரத்தை யீண்டுச் சிறிது கூறுவாம்.

லுத்தர் தாம் வதுவை செய்துகொண்ட மடமானின் பெயர் கத்தரினாள் என்ற கன்னிகை. இம்மாது, லுத்தர்சாஸ்திரியார் சந்நியாச மடத்திலிருந்ததுபோலத், தானும் 11 கன்னிகைகளுடன் கன்னிகா மடத்தில் பலவருடங்கள் இருந்தவள். இருந்த பதி நீத்து இரகசியமாக வித்தன்பர்க் எகினள். 1525-ம் ௵ ஜூன் ௴ லுத்தர் இம்மாதரசியை மணம்புரிந்தார். உரோமான் சபையிலிருந்த சந்நியாசிகளுக்கும், குருக்களுக்கும், விவாகம் விலக்கப்பட்டதா யிருந்ததால், இவ்விருவரின் கடிமணம் அநேகருக்கு இடறலை யுண்டுபண்ணினது. சபை குருவாகிய பூகனுகன்சாஸ்திரியார், அகுஸ்தீனர் மடத்தில் யுஸ்துஸ் யோனுஸ், கானக் முதலியோர் கூடியிருக்க விவாகத்தை நடப்பித்தார்.

"காதல்மனையாளும், காதலனும் மாறின்றித்
தீதில் ஒரு கருமம் செய்பவே—ஓதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கல்தான்
கண்ணிரண்டுமொன்றையே காண்."

என்று கூறப்பட்ட விலக்கணத்திற்கு இலட்சியமாக மணமக்கள் இருவரும் தம்மில் ஒத்த அன்பினராய் இல்லறம் நடாத்தினார்கள்.

கத்தரினாள் என்னும் பத்தினிப் பெண்டிர்

"மாசிலாக்குலத்துவந்தான் வருவிருந்துவப்பவூட்டும்
நேசமிக்குடையாள் கொண்கன் நினைப்பதிற்றொழுகும் நீராள்
தேசுறுவாய்மையுள்ளாள் சினந்திடலென்று மில்லாள்
பேசுதிண்கற்புவாய்ந்தாள் பெற்றதே கொண்டுவப்பாள்."

என்று கூறத்தக்க விலக்கணம் அமைந்தவள்.

கர்ப்பத்தின்கனி கர்த்தரால் வருகிற சுதந்தரம் என்றதிற்கேற்ப இவர்கள் புத்திரப் பேற்றையும் அடைந்தனர். அவர்கள் முதற்பேறான குமாரன் பாட்டன் பெயரால் ஹான்ஸ் என்றழைக்கப்பட்டான். அவன் பிறந்தநாள் தொடங்கி விசேஷமாய் லுத்தர் அவனை யதிகமாய்ச் சிநேகித்தார். ஹான்ஸ் ஒருவயதுக் குழந்தையா யிருக்கும்போது, லுத்தர் கடின வியாதிப்பட்டார். இந்த வியாதியே தமக்கு மரணகண்டமாயிருக்குமென நினைத்துத் தம்முடைய நேசப்பத்தினியை விளித்து ஆற்றித் தேற்றினார். திடீரென்று "என் அன்பான விதான்ஸ் குழவியெங்கே" என்று கேட்டார். தாயானவள் குழந்தையை அவருடைய கண்களின் முன்பு கொண்டுபோய்க் காட்ட, "என்பிரிய பத்தினியாகிய கத்தரினாளே, அன்பார்ந்த சேயனே, உம்மிருவரையும், கிருபையும் உண்மையுமுள்ள ஆண்டவருக்கு ஒப்புவிக்கிறேன். ஆஸ்திபாஸ்திகளை உங்களுக்கு நான் ஒப்புவிக்கவில்லை. என்றாலும், ஆண்டவர் உங்களைக்காப்பாற்றிப் பிழைப்பூட்டுவார்" என்று கூறினார். "நல்லோருக்கு வந்த நோயும் அற்பனுக்கு வந்த பவிசும் நில்லாது" என்றதற் கிணங்கவும், 'ஆவாரையாரேயழிப்பர்' என்பதற்கேற்பவும், அவர் இன்னும் சிலகாலம் பூலோகத்தினின்று தேவவூழியத்தைச்செய்ய, தேவன் திருவுள்ளங்கொண்டிருந்தபடியால் பகலவனைக்கண்ட பனியென நோய் நீங்கி நற்சுகமடைந்தார்.

1530-ம் ஆு இராஜ்ய சங்கத்தார் அகுஸ்தாபுரியில் கூடிய காலத்தில், சுவிசேஷ அனுசாரிகள் அகுஸ்தாபுரி அறிக்கையை ஒப்புவித்தார்கள். லுத்தர் இராஜ்ய சாபத்திற்குட்பட்டிருந்ததால், அவர் ஆங்குச்செல்லத்தடைப்பட்டு, கோபுர்க்குக் கோட்டையில் தங்கினார். அங்கிருந்து தமது முக்கிய கவலையோடு நான்கு வயதான தமது குமாரனுக்குப் பின்வருமாறு ஓர்நிருபம் எழுதினார். "எனது பிரிய சிறிய குமாரா, நீ நன்றாகப்படித்து ஊக்கமாய் ஜெபிக்கிறாய் என்று சந்தோஷத்தோடு கேள்விப்படுகிறேன். எனதருமைச் சுதனே, அங்ஙனமே நீ செய்துகொண்டிரு. நான் வீட்டிற்கு மீளும்போது உனக்கோர் நன்கொடையுடன் வருவேன்.

அழகும் இன்பமுமான வோர் தோட்டத்தையறிவேன். ஆங்குப் பொன்னுடைதரித்த பல சிறுவர் உலாவிக்கொண்டு ஆப்பிள், செஷரி, ப்ளம், இலந்தைப்பழம், கொடிமுந்திரிப்பழம் என்ற திராட்சைப்பழம் முதலிய கனிவர்க்கங்களைப் பறித்துப் புசித்துப் பாடிக் குதித்துப்பொன்

வாரும், வெள்ளிச்சேணமுமுள்ள சிறிய அழகிய அஸ்வங்களிலேறி விளையாடுகிறார்கள். தோட்டத்திற்குச் சொந்தக்காரனை நான் பார்த்து, இக்குழந்தைகள் யாவரென்று கேட்டேன். அவர்கள் ஆவலோடு ஜெபித்துப் படித்துக் கீழ்ப்படிகிற பிள்ளைகள் என்றார். ஐயா, எனக்கும் ஒரு மகனுண்டு அவனுக்கு ஹான்ஸ் லூத்தர் என்று பெயர். அவனுமிந்தத் தோட்டத்திற்கு வந்து, இந்த நேர்த்தியான கனிவர்க்கங்களைப் புசித்து இந்த அழகிய பரிக்களிலிவர்ந்து, இச்சேயருடன் விளையாடலாமோ வெனக் கேட்டேன். ஒழுங்காய் ஜெபித்துக் கீழ்ப்படிதலுள்ளவனு யிருந்தால், அந்தச் சிறுவனும் இந்தத் தோட்டத்திற்கு வரலாம். என்று தோட்டக்காரர் கூறினர். ஐயா, அங்ஙனமாகில் நான் உடனே சென்று, ஈதெல்லாம் என் சிறுவனுக் கியம்பிடல்வேண்டும், அவனும் ஊக்கமாய் ஜெபித்து, நன்றாய்ப் படித்துக் கீழ்ப்படிந்து கட்டாயமாக இந்தத் தோட்டத்திற்கு வரவேண்டுமென்றேன்; அதற்குச் சொந்தக்காரர், சரிதான் அவ்வாறே தங்கள் புத்திரனுக்குத் தெரிவியுங்கள் என்று கூறினர். ஆகையால் என் அன்பார்ந்த சிறிய குமாரனுகிய ஹான்ஸே, நீ நன்றாய்ப் படித்து ஜெபம்பண்ணு. இத்தோடு உன்னை சர்வ வல்லமையுள்ள ஆண்டவருக்கு ஒப்புவிக்கிறேன் உன் பாட்டியாரை மினவி ஒரு முத்தங்கொடு" என்று எழுதிமுடித்தார்.

லூத்தர் ஹான்ஸ் என்ற தம்முடைய மைந்தனிடம் எத்தகைய அன்புபாராட்டினுலும், அவனுடைய கீழ்ப்படியாமையினிமித்தம் சிறுவன் மூன்றுநாட்களாகத் தனது தகப்பனுர் முகத்தைக் காணக்கூடவில்லை. "என் மகன் கீழ்ப்படியாமல் போவதைக்காட்டிலும் அவன் மரிப்பதே நலம்" என்று கூறினர்.

ஹான்ஸ் என்று ஈண்டுக்கூறிய பையனுக்கு இப்போது வயது 10. இவனுடன் 5 வயதான மார்ட்டினும் 3 வயதுள்ள பவுலும், ஆங்கிருந்தனர். மார்கெரேத் என்னும் சிறிய பெண்மகவொன்றும் வீட்டிற்குள் இருக்கிறது. கத்தரீனுள் அம்மையாரின் அத்தையார் லேனுள் அம்மாள் அந்தச் சிறுமியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

லூத்தரின் புத்திரர் அனைவரும், பார்ப்பவர் கண்களைக் கவரத்தக்க வசீகரமும், அவர்கள் உள்ளக்கிடக்கைகளைக் காட்டும் தெளிவுள்ள சந்திரபிம்பம்போன்ற முகமும், அகத்தூய்மையும் அன்பும், அருளொழுகுஞ் செந்தாமரைக் கண்களும் அமைந்துள்ளவர்களாய் இருந்தனர். விசேஷமாய் 7 வயதுள்ள மக்தெலேனுள் என்னும் சுந்தரமாது புலவர் தம் வருணனைக்கடங்காத கட்டழகு வாய்ந்தவளாயிருந்தாள். பூலோகத்தில் சரீரத்தோடுலவித்திரியும் ஓர் வான தூதி யென்னலாம்.

"விண்ணகத்தரம்பைக் குலத்தினும்வடிவாய் விரிகடல்மகளினும் வியப்பாய்
மண்ணகத்துறையும் எழுவகைப்பருவமடந்தைய ரணிந்திடுமணியாய்க்
கண்ணினுக்கடங்காதழகினைச் சுமந்தகனியுருவெடுத்த காட்சியதாய்ப்
பெண்ணலங்கனிந்து நல்லெழில் [1]பிறங்கப் பெருநிலத்துறைந்திருந்தனளே,'

" [2]மங்குலிற் பெருகிவிடத்தினும் கருகிவரி [3]யறலினுமினுமினுத்துத்
தங்கிய [4]விதழித்திரளினுந்திரண்டு [5]சைவலத்தொடரினுந்தழைத்துக்
[6]கொங்குறக்குழன்றுநெறித்துவார்ந்தொழுகிக்குவலயத்திளைஞர்கண்வழுக்க
எங்கள் மெய்ப்பரனூர் எனிப்பத்திலமைத்த விருளினுமிருண்ட மைக்குழலாள்

இத்தகைய வனப்பு வாய்ந்த பெண்மணி பூலோகத்தில் இருந்தது வெகு சொற்பக்காலமே. அற்பாயுள் உடையோருக்குப் புத்தினுட்பம் அதிகம் என்பது உலகவனுபவம். அதற்கிணங்க இப்பெண்ணும் மகாபுத்திசாலி. லூத்தர் இப்பெண்மணியுடன் அடிக்கடி தேவ இரக்கத்தையும் அவரது உபகாரகுணங்களையும்பற்றிப் பேசுவார். அவ்விதம் பேசும்போது, ஏனைய மக்களும் வெகு ஆவலுடன் கேட்டுக்கொண்டிருப்பார்கள். சகலரும் சின்ன ஞானோபதேசத்திலடங்கிய அர்த்தங்களையும் வேத வாக்கியங்களையும் பாராயணஞ் செய்தார்கள். மேற்கூறியபடி, எல்லாரைக்காட்டிலும் மக்தெலேனாளின் கல்வித்திறமையும் பாராயணஞ்செய்யும் மனோசக்தியும் பிரமிக்கத்தக்கதாயிருந்தது.

"பருகுவனன்ன ஆர்வத்தனாகிச் சித்திரப்பாவையின் அத்தகவடங்கிச்
செவி வாயாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவைவிடாது உளத்தமைத்துப்
போவெனப் போதல் என்மனார் புலவர்"

என்ற இலட்சணத்திற்கு, மக்தெலேனாளை இலட்சியமாகக் கூறலாம். பரம சத்தியங்களைப் பானஞ்செய்கிறபான்மையில் படித்தாள். அந்தோ! வெகு சீக்கிரம் தன்னுடைய வேலையை முடித்தாள். இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகேக நாள் கிட்டினது. இம்பரில் பரதேசி உம்பரில் சுதேசி. மங்கைப்பருவம் அடைந்தனள். வயது 13 நடைபெறுகிறது. பொன்னாட்டதிபதியாகிய தேவன் இம்மின்னாளைத் தமது இராஜ்யத்திற்கழைக்கத் திருவுள்ளம்கொண்டு எவ்வித வைத்திய சிகிச்சையிலும் மீளாத மரணத்திற்கேதுவான நோயை விடுத்தார். அந்தோ! உத்தம இலட்சணம் வாய்ந்த புத்திரியை இழக்கப்போகிற தந்தைதாயரின் சிந்தை யெவ்வாறு நொந்திருக்கும். அத்தனனவர் புத்திரியின் பிரிவிற்கேதுவான இன்னோயைக் குறித்து சித்தஞ்சலித்தார். காய்ச்சலினால் வெம்மையுற்ற கரத்தைப் பிடித்துக்கொண்டு, என்பிரிய கண்மணியாகிய மக்தெலேனாளே, ஈங்கு உன்தந்தையிடம் தங்கியிருக்க விருப்பமோ? அன்றி உனது பரம தந்தையிடம் செல்லவிருப்பமோ? என்றார். லேனாள்

---

[1]பிரகாசிக்க. [2]மேகம். [3]மணல். [4]கொன்றைக்காய். [5]பாசிக்கொடி. [6]வாசனை. முதற்கவியினீற்றிலும், இரண்டாங்கவி ஈற்றடியிலும் சந்தர்ப்பம் நோக்கி ஏற்றவாறு மாற்றியிருக்கிறோம்.

மெல்லியதீங்குரலுடன், குவளைமலர்ந்து தேன் துளியுகுத்தன்ன, கண் மலர்திறந்து கடைக்கண்வழியாய், ஓர் துளிகண்ணீர் சிந்தி; 'எந்தையே, நம்பரம தந்தையின் சித்தத்தின்படியே ஆகக்கடவது,' என்றாள். சிலநாள்கழித்து, மக்தெலேனுள் என்ற பூங்கொம்பை, ஆண்டவர் கொண்டுபோய் ஜீவநதிநீர்பாயும் தமது சித்திரப்பூங்காவில் நாட்டினர்.

"கடந்துளோர்களும் கடப்பரோ மக்கள் மேற்காதல்" என்றபடி, பதின்மூன்று பிராயமுள்ள, பச்சிளம் கொம்மைப் பறிகொடுத்த மாதா தன் மனமுடைந்து வெந்துயர் அடைந்தாள். தந்தையோ துயராற்றாது.

அலையிடைப் பிறவா அமிழ்தையிழந்தேன்
மலையிடைப் பிறவா மணியை யிழந்தேன்
யாழிடைப் பிறவா இசையை யிழந்தேன்
வாழ்விடவந்த மகவையிழந்தேன்
மாசறுமணியை வலம்புரி முத்தை
காசறு தேனைக் கண்மணிமானை.

அந்தோ! இழந்தேன் என்று மானிட இயற்கையின்படி துக்கித்தாலும், உயிர்த்தெழுதலின் நம்பிக்கையுடைய சாஸ்திரியாரானபடியால் துக்கத்தையடக்கி "என் அன்பான லேனுள்மணியே, உனக்கு நித்திய சாம்பிராஜ்ய வீடெய்தும் சிலாக்கியம் கிடைத்தது. நீ மகிமையோடு உயிர்த்தெழுந்து ஒரு விண்மீனைப்போல் பிரகாசிப்பாய் நான் ஆவியில் களிகூர்ந்தும், என் மாமிசம் கசப்பான துக்கத்தால் நிறைந்திருக்கிறது," என்றார்.

லுத்தர் சாஸ்திரியார் வீட்டில், அவர் மனைவியும் மைந்தரும் அன்றி வேறனேகருமிருந்தார்கள். சொந்தக்காரரின் பிள்ளைகள் பலரை, ஆண்களையும் பெண்களையும் படிப்பித்தார். தங்கள் விசுவாசத்தினிமித்தம், அடைக்கலம் புகுந்தவர்கள் ஆடவரும் பெண்டிரும் பலர் ஆங்குத் தங்கியிருந்தனர். லுத்தரின் நண்பர் மிலாங்க்தோன் முதலியவரும் ஆங்குத் தங்கியிருந்தனர்.

அகுஸ்தீனர் மடத்து முக்கிய கட்டிடம் இன்னும் நிலை நிற்கிறது. விசேஷமாக லுத்தர் வசித்து வந்த அறை அக்காலத்தில் இருந்தவாறே இருக்கின்றது. ஆங்குக் குடும்பத்தார் உபயோகித்து வந்த பெரிய மேஜையிருக்கிறது. ஒரு மூலையில் அனல் மூட்டுமிடமும், அதன் பக்கத்தில் சுவிசேஷகரின் படங்களும், வேறு சில படங்களும் உண்டு. பலகணிகள் எல்லாம் அப்போதிருந்தவாறே காப்பாற்றப்பட்டிருக்கின்றன. லுத்தர் அநேக சுகதுக்கங்களை யனுபவித்திருந்ததெல்லாம் இந்த அறையில்தான்.



வித்தன்பர்க்கில் லூத்தர் வசித்த வீட்டின் ஓர் அறை.

## லூத்தரின் மரணம்.

லூத்தர் சாஸ்திரியார் வித்தன்பர்க்கில் மரிக்காமல், தமது பிறந்தகமான ஐஸ்லேபன் ஊரில் மரித்தார். 1546-ம்௵ ஜனவரி ௴ அவர் மிக்க அசௌக்கியத்துடன் ஆங்குப் பிரயாணஞ் செய்தார். மன்ஸ்பெல்டுப் பிரபுக்களாகிய இரு சகோதரர் தங்களுக்குள் கலகம் புரிந்து, தங்களுக்குள்ள வழக்கைத் தீர்த்து விடுமாறு அவரை அங்கு அழைத்தனர். அவர் மரிக்குமுன்னர் அவர்களைச் சமாதானப்படுத்தினார். இப்பூமியில் அவர் நடப்பித்த கடைசிவேலை சமாதானப்படுத்துதல், மற்றவர்களைக் காட்டிலும் தாம் அதிகப் போராட்டம் செய்தவராயிருந்த போதிலும், உள்ளத்தில் சமாதானத்தின் புத்திரராயிருந்தார். பெப்ரவரி ௴ 17 உ அவர் செய்த சமாதானத்தின் வேலை முடிவடைந்தது. அன்று தினமே லூத்தர் வியாதிப்படுக்கை யடைந்தார். மறுநாள் காலையில் கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார். எவ்வளவு சீக்கிரத்தில் என்ன ஆச்சரியமான மரணம்.! அவர் நண்பராகிய யுஸ்துஸ்யோனஸ் அவர் மரித்து ஒரு மணி நேரத்திற்குப்பின், அவருடைய மரணத்தைப்பற்றி அடியில் கண்ட ஒரு நுட்பமான நிருபத்தை நியமகப்பிரபுவுக்கு எழுதினார்.

“இரவு ஒரு மணிக்கு அவர் தமது வேலைக்காரனையும் என்னையும் அழைத்தார். என்னை நோக்கி யோனா சாஸ்திரியாரே, எனக்கு இங்கு வேதனையதிகம் என்று கூறி மார்பைக் காண்பித்தார். நான் வீட்டிற்குத் திரும்பாமல் ஐஸ்லேபன் பட்டணத்தில் தங்க வேண்டு

மென்பதற்காகப் பயப்படுகிறேன் என்ருர். ஊரிலிருந்த இரண்டு வைத்தியர்களை யுடனே வரவழைத்தோம். ஆல்பிரக்டாகிய மன்ஸ் பெல்டு பிரபுவுக்குத் தெரிவிக்க, அவரும் தமது காதலியோடு வந்தார். அதின் பின்னர் மார்ட்டீன் சாஸ்திரியார் ஜெபிக்க ஆரம்பித்தார். "என் பரமபிதாவே, நித்திய கிருபையுள்ள பராபரனே, உம்முடைய பிரிய சுதனுகிய எங்கள் நாதர் இயேசுக்கிறிஸ்துவை யெனக்கு வெளிப்படுத்தினீர். அவபக்தர்கள் துன்பப்படுத்தி, நிந்தித்துத் தூஷிக்கிற அவரை நான் பிரசங்கித்தேன். அவரை அறிக்கையிட்டேன். அவரைச் சிநேகிக்கிறேன். அவரை என் அன்பான இரட்சகரும், மீட்பருமாக மதிக்கிறேன். என் ஆவியை உமதண்டை சேர்த்துக்கொள்ளும்." என்ருர். மீண்டும் அவர் மூன்று முறை 'உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்றும், அத்தன்மையாய் பராபரன் உலகத்தைச் சிநேகித்தார்,' என்றும் கூறினுர்.

வைத்தியர்களும் நாங்களும் வேண்டிய சிகிச்சைகளைச் செய்ய, அவர் திடீரென்று மௌனமாகி விழுந்தார். அப்போது நாங்கள் உரத்த தொனியுடன், பிரிய தகப்பனே, கிறிஸ்துவை, தேவகுமாரனும், நமது இரட்சகரும் மீட்பருமாக அறிக்கையிடுகிறீர்களா வென்று கேட்க, அவர் வெகு தெளிவோடே அறிக்கை யிடுகிறேன் என்று பதிலுரைத்தார். அப்புறம் அவர் இரவில் ஏறக்குறைய 2½ மணிக்கு கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார், என்பதை நாங்கள் துக்கத்தோடும் அழுகையோடும் உமக்கறிவிக்கிறோம்.

அன்பார்ந்த நியமகப்பிரபுவே, அவர் மரித்த மணி நேரத்தில் என் கடமையின்படி வெகு சீக்கிரமாக இந்நிருபத்தைத் தங்களுக்கெழுதலானேன். இருபத்திரண்டு வருடங்களாக அவருடைய சீடர்களாயிருக்கிற நாங்கள் துக்க சாகரத்தில் ஆழ்ந்தோம். ஐஸ்லேபன்.—1546 ௵ பெப்ரவரி ௴ 18 ௳ காலை 4 மணிக்கு அவசரமாய் எழுதப்பட்டது.

தங்களின் கீழ்ப்படிதலுள்ள, ஊழியன், **யுஸ்துஸ்யோனுஸ்.**

லுத்தர் சாஸ்திரியார் மரணமடைந்தார் என்ற வதந்தி கேள்விப்பட்டு, தேயமெங்கும், ஆம்! விசேஷமாய்ச் சுவிசேட சபையாருக்குள் எங்கும் ஆற்றெண்ணுத துக்கம் உண்டானது. மிலாங்தோன் சாஸ்திரியார், சுவிசேடச் சபையார் அனைவருடைய துக்கத்தையும் ஒருங்கே சேர்த்து, லுத்தரின் பிரேதத்தண்டையில் நின்று கொண்டு "நாம் தகப்பனற்ற பிள்ளைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், ஆயினேம். அருமையும், உத்தம புருஷனுமான தகப்பனுயிருந்தார். அவரை யிழந்துவிட்டோம்." என்று தமது துக்கத்தை யிவ்வாறு காட்டினுர். லுத்தரின் சரீரம், வித்தன்பர்க் கோட்டையாலயத்தில் அடக்கம் பண்ணப்பட்டது. அந்த ஆலயத்தின் கதவிலே தம்முடைய 95 நியாயங்களை ஆணியிட்டறைந்தார். அந்த ஆலயத்தின் பிரசங்கத் தொட்டியிலிருந்து அநேகமுறை சுத்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அந்தப் பிரசங்கத் தொட்டியின் கீழ், தமது பங்கின் வீதத்திற்கெழுந்து நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ள இளைப்பாறுகிருர்.

ஆகிலும் இந்நாள் வரைக்கும் அவர் தைரியத்தோடும் விசுவாசத்தோடும் கூறுவதியாதெனில்

"பகைஞர் தேவ வார்த்தையைப் பகைத்தும் அது நிற்கும் கர்த்தர் சகாயர் அவர் கை வாங்தந்தாரிக்கும். மாற்றான்கள் யாவையும் சீவனைத்தானும் வாங்கினால் கேடோ; இராச்சியம் அல்லோ எங்களுக்கே இருக்கும்."



லுத்தரின் கல்லறை

# Books for the Reformation Day.

LUTHER BOOKS.

Luther's Smaller Catechism, ஞான உபதேசக் குறிப்பிடம் 12 mo. pp. 47 அணா 1 பை 6.

A Hand Book of Luther's Catechism Part I. (Sandegren, D. D.) ஞான உபதேசக் குறிப்பிட வாசகப் புத்தகம் முதலாம் பங்கு 12 mo. pp. 232 அணா 7.

Life of Dr. Martin Luther (N. Samuel) 9 th edition மார்த்தின் லுத்தர் என்ற வேத சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம் 12 mo. pp. 25 அணா 2.

Christian Freedom, (Luther) கிறிஸ்தவ சுயாதீனம் pp. 50 அணா 1.

## Other books connected with the history of Reformation.

Augsburg Confession, அகுஸ்தாபுரி விசுவாச அறிக்கை 12 mo. pp. 64 அணா 4.

Concordia, I Part ஒருமிப்பு க-பங்கு 8vo pp. 417 ரூபாய் 1 அணா 2.

Concordia, II Part ஒருமிப்பு உ-ம் பங்கு 8vo. pp. 455 ரூ. 1 அணா 2.

Abridgment of the Book of Concord, மெய்ப் போதக சாரம் 12 mo. pp. 24 பை 6.

*For the Reformation day every Congregation must order a good supply of :*

### The New Hymn - Book.

"School children get a discount of 50% when they buy School Hymnbooks for themselves." (Miss. Council Proceeding Aug. 25, 1922).

In such case, books can be purchased only through the head of the school in the same way as is done with the Bible Stories.